இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32
கதிர் 276
ஆவணி 13ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை
29 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048



# மாணவர்கள் அறுவர் கடலில் மூழ்கிச் சாவு

## மண்டைதீவு அருகே படகு கவிழ்ந்ததால் பெருந் துயரம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 29
மண்டைதீவு, சிறுத்தீவுக்கடற்பரப்பில் நேற்றுப்படகுகவிழ்ந்ததில் ஆறு மாணவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். பிறந்தநாளைக் கொண்டாடச் சென்றவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். >> 25



## சோகமயமானது யாழ். போதனா

கடலில் மூழ்கி உயிரிழந்தவர்களின் உடல்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டன.
தகவல் அறிந்த குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் மருத்துவமனை வளாகத்தில் குழுமினர்.
உயிரிழந்தவர்களின் உடல்களைக் கண்டு அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். அந்தப் பகுதி சோகமயமானது.



## பிறந்தநாளில் உயிரிழந்த சோகம்

யாழ்ப்பாணம், ஓக. 29
மண்டைதீவுக் கடற்பகுதியில் படகு கவிழ்ந்ததில் ஆறு மாணவர்கள் உயிரிழந்தனர். அவர்களுடன் கூடச் சென்றவர்களிடம் நேற்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.
கூடச்சென்ற 5 பேர் தடுத்துவைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.
"எங்களில் இருவரின் பிறந்தநாளைக் >> 25

### வித்தியா படுகொலை:

# எங்குமே தெரிவிக்காத விடயங்களைக் கூறி எதிரிகள் பொய்ச்சாட்சியம்

அரச தரப்பு தீர்ப்பாயத்திடம் உறுதியாக எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29
"புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைவழக்கின் எதிரிகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கிய வாக்குமூலம், நீதிவான் மன்றில் வழங்கிய வாக்குமூலம் மற்றும் தீர்ப்பாயத்தின் குறுக்கு விசாரணை ஆகியவற்றில் தெரிவிக்காத விடயங்களை தமது சாட்சியத்தில் தெரிவிப்பதானது நடக்காத தவற்றை நடந்ததா >> 06

## சட்ட மருத்துவ அதிகாரியிடம் மீளவும் சாட்சியம் பதிய ஒழுங்கு

யாழ்ப்பாணம், ஓக. 29
சட்டமருத்துவ அதிகாரியின் சாட்சியத்தைப் பெற தீர்ப்பாயம் நேற்று அனுமதியளித்தது.
எதிரிகள் தரப்பில் சாட்சியமாக சட்ட மருத்துவ அதிகாரியை தீர்ப்பாயத்துக்கு அழைப்பதற்கு 5ஆம் எதிரி தரப்பு சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி விண்ணப்பம் செய்தார்.
அதனை வழக்கு தொடுனர் தரப்பு கடும் >> 25

### வடமராட்சி கிழக்கில் திடீரெனப் புகுந்த

# யானை தாக்கி குடும்பத்தலைவர் பரிதாப உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் திடீரென ஊருக்குள் புகுந்த யானையின் கோரத் தாக்குதலில் சிக்குண்டு ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இருவர் காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த >> 25



## காணாமற்போனோரை பயன்படுத்தி நலன் தேட பொது அமைப்பு முயற்சி

உறவுகள் சீற்றம்

கிளிநொச்சி, ஓக. 29
உலககாணாமற்போனோர் தினத்தில், மன்னாரைச் சேர்ந்த பொது அமைப்பொன்று கிளிநொச்சிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அழைப்பு விடுத்துள்ளது. இந்தப் போராட்டம் தொடர்பாக கிளிநொச்சியில் இன்று 191ஆவது நாளாகவும் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரிப் >> 25

## வீதியில் நின்றவரின் உயிரைப் பறித்தது உழவு இயந்திரம்

தவசிகுளத்தில் நேற்றிரவு பரிதாபம்

யாழ்ப்பாணம், ஓக. 29
மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் சாலையில் நின்றவரை மோதித்தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் உள்ள கள்ளுத் >> 25

## 70 ஆண்டுகள் இல்லாத யானை இப்போது எப்படி?

வடமராட்சி கிழக்கு மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக. 29
"எமது பிரதேசத்தில் இதுவரை காலமும் யானை இருந்ததில்லை. எமக் >> 25

### ஊரே பெரும் அச்சத்தில்

## இயல்புநிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29
யானை ஊருக்குள் புகுந்தமையினால் வடமராட்சி கிழக்கில் நேற்று இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பயத்துடனேயே இரவுப் பொழுதைக் கழித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. யானைத் தாக்குதல் அச்சத்தால் சில குடும்பங் >> 25



மண்டைதீவு அருகே கடலில் மூழ்கி 6 மாணவர்கள் நேற்று உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் கடற்படையினராலும், அந்தப் பகுதி மக்களாலும் மீட்கப்பட்டன.

# கொழும்பு பாதுகாப்பு மாநாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஒக. 29

கொழும்பு பாதுகாப்பு மாநாடு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது என அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. 'வன்முறை தீவிரவாதத்துக்கு எதிரான பூகோள போக்கு' என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

பூகோள பிராந்திய பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பான உரையாடலை ஏற்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதுகாப்பு மாநாடு, உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் இந்த முறையும் நடைபெறுகிறது. நேற்றும் இன்றும் நடைபெறும் இந்த மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்கள், பகுப்பாய்வாளர்கள், ஆலோசகர்கள், பாதுகாப்புத்துறை முன்னோடிகள் என சுமார் 800 பேர்கள் பங்குபற்றுகின்றனர். ஒன்பது அமர்வுகளாக நடைபெறும் கருத்தரங்கில் வன்முறை தீவிரவாதத்துக்கு எதிரான பூகோள போக்கு என்ற கருப்பொருளுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. அரசாட்சி மற்றும் அரச பாதுகாப்புக்கெதிராக அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பன்னாட்டு தொடர்புகளுடன் துரிதமாக பரவிவரும் தீவிரவாத வன்முறை மற்றும் நவீன பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

7ஆவது முறையாக நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு பிரதிநிதிகள், இராணுவப் பிரதிநிதிகள் மற்றும் 35 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, அரசதலைவரின் செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோ, பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன, அமெரிக்காவின் ஓய்வுபெற்ற அட்மிரல் வில்லியம் ஜே பெலன், இந்திய இராணுவத்தின் ஓய்வு பெற்ற ஜெனரல் அசோக் மேத்தா ஆகியோர் பங்குபற்றினர். (ற-10)



## பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம்

கிளிநொச்சி, ஒக.29

கிளிநொச்சியில் இரண்டு பிரதேச செயலாளர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் இரண்டு பிரதேச செயலாளர்களுக்கும் தொலைநகல் மூலம் நேற்றுப் பிற்பகல் இடமாற்றல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், மற்றும் கண்டாவளை பிரதேச செயலளர் த. முகுந்தன் ஆகியோருக்கே உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் கண்டாவளைக்கும், கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன் கரைச்சிக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். (ற-35,101)

## உணவில் சீர்கேடு பற்றி உணவகத்தில் கைகலப்பு

யாழ்ப்பாண நகரில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றில் வழங்கப்பட்ட உணவில் புழு இருக்கின்றது என்று கூறியபோது கடையில் வேலை செய்பவர்கள் தம்மைத் தாக்கினர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சாலையில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் உணவருந்தச் சென்றபோது அங்கு வழங்கப்பட்ட உணவில் புழு இருப்பதை அவதானித்தேன் என்றும் அது தொடர்பில் கடையில் பணி புரிபவர்களிடம் விளக்கம் கேட்டபோது அங்கிருந்த பணியாளர்கள் தம்மைத் தாக்கினர் என்றும் பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். தாம் தாக்கப்படும்போது அருகில் இருந்தவர்கள் தம்மையும் தாக்கியவர்களையும் சமாதானப்படுத்தினர். நாம் அங்கு உணவு கேட்டமை அவர்கள் உணவு வழங்கியமை அதன் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை அனைத்தும் அந்தக் கடையில் உள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவில் உள்ளது. அதனை பொலிஸார் பரிசோதனை செய்தால் அனைத்து விடயமும் வெளியில் வரும் எனவும் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட சைவ உணவகத்தின் தொலைபேசி இலக்கத்துக்கு பல முறை தொடர்பை ஏற்படுத்தியபோதும் அவர்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. (ற-48)

## முல்லைத்தீவில் நடமாடும் சேவை

உள்நாட்டலுவல்கள் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டும் அரச தலைவர் செயலக நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் நேற்று முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய இந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடக்கும் நடமாடும் சேவையில், தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ளவென அந்தப் பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான பொதுமக்கள் பிரதேச செயலகத்தில் ஒன்று கூடினர். நடமாடும் சேவையின்போது அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட செயலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-10)

# டெங்குத் தொற்றைத் தடுக்க சிறப்பு வேலைத்திட்டம்

## யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்றிலிருந்து 3 தினங்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம் மற்றும் சாவகச்சேரி பிரதேசங்களில் டெங்கு நோய்த் தொற்று அதியுச்சம் பெற்றுள்ளது. டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த இன்று முதல் 3 தினங்கள் சிறப்பு செயற்றிட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட சுகாதார திணைக்களப் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை குடாநாட்டில் வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடந்த கலந்துரையாடல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ளது. இதுவரை 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி, சாவகச்சேரி பிரதேசத்தில் டெங்கு தொற்று அதிகரித்துள்ளது. வேலணை, நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதியில் டெங்குத் தொற்று ஓரளவு குறைவாக உள்ளது. மக்கள் நெருக்கம் குறைவாக உள்ளமையே அதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள நிலைமை தொடர்ந்தால் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டும். கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களில் வசதிகள் இருந்தும் டெங்குத தொற்றுக்குள்ளாவோர் அதிகரித்ததால் மருத்துவமனைகள் நெருக்கடிகளை எதிர்கொண்டமை கடந்த காலங்களில் நாம் அறிந்ததே.

எமது மாவட்டத்தில் போதிய வளங்கள், ஆளணி இல்லை. நாங்கள் டெங்குத் தாக்கம் அதிகரிப்பதற்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதே சிறந்தது. இன்றிலிருந்து 3 நாள்கள் விசேட செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டாலும் பொது மக்கள் தாமாக உணர்ந்து இடங்களை துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாழடைந்த கிணறுகள், பாவனையற்ற கிணறுகள் என்பவற்றால் அதிகம் நுளம்பு பெருகுகின்றது என்று அறிகின்றோம. இந்த மூன்று நாள்களும் பிரதேச செயலர்கள், உள்ளூராட்சித் திணைக்க அதிகாரிகள், முப்படையினர் இணைந்து செயற்படுவார்கள். நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்களைக் கொண்டிருப்போருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும். அதன்பின்னரும் துப்புரவு நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மேலதிக மாவட்டச் செயலர் சுகுணவதி தெய்வேந்திரம், யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், முப்படை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

(ந-8)

## யாழ். மாநகர சபையின் செயற்றிறன் போதாது

### டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ். மாநகர சபையின் செயற்றிறன் போதாமையே யாழ். நகரப் பகுதியில் டெங்குத் தொற்று அதிகரிக்கக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அரச தலைவர் செயலகத்தால் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை குடாநாட்டில் வெற்றிகரமாக முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் பங்குகொண்டவர்களே இவ்வாறு குற்றஞ்சாட்டினர். யாழ். மாநகர சபை ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள் தமது கடமைகளைச் சரியாகச் செய்வதில்லை. கழிவு முகாமைத்துவம் மிக மோசமான நிலையில் உள்ளது." என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

கலந்துரையாடலில் பங்குகொண்ட யாழ்.மாநகர சபை பிரதிநிதி இது தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று கூறப்பட்டது. (ந-8)



## திண்மக் கழிவுகள் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஓக. 29

மட்டக்களப்பு, திருப்பெருந்துறைப் பகுதியில் திண்மக் கழிவுகளைக் கொட்ட வேண்டாம் எனக்கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பெருந்துறை வீதியை மறித்து காலை 9 மணியிலிருந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமக்கான நிரந்தரத் தீர்வு கிடைக்கா விடில் தொடர் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் கடந்த சனிக்கிழமைகளில் திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தீ மூண்டுள்ளது. நாசவேலை காரணமாகவே கடந்த செவ்வாய்க்கிழமை முதலாவது தீ பரவல் இடம்பெற்றிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

சுமார் 9 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட இந்த நிலையத்தின் 5 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கும் திண்மக்கழிவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு வருகின்றன.

திருப்பெருந்துறைப் பகுதி மக்கள் கடந்த பல வருடங்களாக இங்குள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தை மக்கள் வாழும் பகுதிகளை விட்டு வேறு பொருத்தமான இடத்துக்கு அப்புறப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் சுவாச நோய்களுக்கும் பல்வேறு உபாதைகளுக்கும் சுற்றாடல் மாசுக்கும் உள்ளாக வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ந-10)

## மீனவர்களின் வலைக்குத் தீ

மட்டக்களப்பு, ஓக. 29

மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்றொழிலாளர்களின் 20 இலட்சம் ரூபா பெறுமதியான வலை அடையாளம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றது.

அண்மைக்காலமாக மீனவர்களுக்கு இடையில் பல முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-10)



## சம்பள நிலுவையைக் கேட்டு தபால் ஊழியர்கள் ஊர்வலம்




மட்டக்களப்பு, ஓக.29

கிழக்கு மாகாண ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவையை வழங்கக் கோரி நேற்றுக் காலை 10 மணியளவில் மட்டக்களப்பு தபால் திணைக்கள ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

"104 பேருக்கு சுமார் 87 இலட்சம் ரூபா வழங்கப்பட வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் 4ஆயிரம் ரூபா முதல் 2லட்சத்து 83ஆயிரத்து 500 ரூபா வரை ஒருவருக்கு வழங்க வேண்டியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மிக விரைவில் தங்களுக்குரிய நிலுவைச் சம்பளத் தொகையை வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் தலைமைத் தபால் காரியாலயத்துக்கு முன்பாக எங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த நேரிடும்" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் தபால் திணைக்களத்தில் இருந்து ஊர்வலமாக காந்தி சதுக்கத்துக்கு சென்று தொடர்ந்து திருமலை மற்றும் கல்முனை வீதி வழியாக மீண்டும் தபால் திணைக்களம் வரை சென்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-10)

**Electrical wiring**
**வீட்டு மின் சுற்று அமைத்தல்**



மாணவர்கள் அடிப்படையிலிருந்து சுயமாக தொழில் துறையை மேம்படுத்துவதற்கு தேவையான Theory மற்றும் Practical உடன் கூடிய குறு நேர பாடநெறி. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

Course fee 11,500/-
Register fee 2,500/-

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
076 737 44 44

BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 493 6666 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

# கொழும்பில் பிளாட் வாங்கவே மாமியாரால் சீதனக் கொடுமை

## முன்பள்ளி ஆசிரியையின் இறப்பு விசாரணையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஓக. 29

"கொழும்பில் பிளாட் வாங்குவதற்குப் பணம் தேவையாகவுள்ளது. சீதனத் தொகையை 25 லட்சம் ரூபாவாக அதிகரித்துத் தாருங்கள்" என்று மணமகனின் தாயார் மணமகளிடம் கேட்டுள்ளார். அதன் பின்னரே முன்பள்ளி ஆசிரியை உயிரை மாய்த்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியை நேற்றுமுன்தினம் அவரது சகோதரியின் வீட்டின் குளியலறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியையின் பெற்றோர்கள் இறந்துவிட்டனர். கொழும்பில் பெரிய தாய் வீட்டில் அவர் தங்கியிருந்து அங்குள்ள முன்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். அவருக்கும் வெள்ளவத்தையில் மற்றொரு குடும்பத்தினரின் மகனுக்கும் திருமணம் பேசப்பட்டது. சீதனமாக மட்டுவிலில் பெண்ணின் பெயரில் வாங்கிய காணியில் வீடு கட்டித் தருவதாகவும் சீதனமாக 15 லட்சம் ரூபா வழங்குவதாகவும் கூறப்பட்டுத் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் 28ஆம் திகதி திருமணம் செய்வதென்று நாள் குறிக்கப்பட்டது. தனக்குரிய பொருள்களை வாங்குவதில் பெண் ஆர்வம் காட்டினார். பல பொருள்களை வாங்கியும் அவர் வைத்துள்ளார். இவருக்கு மூத்த சகோதரியும் இளைய சகோதரனும் உள்ளனர்.

சகோதரி மட்டுவிலில் திருமணம் செய்து கைதடியிலுள்ள பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். சகோதரன் தொழில் நிமித்தம் அரபு நாடொன்றில் தங்கியுள்ளார்.

இரண்டாம் தவணை விடு முறை காரணமாகக் முன்பள்ளி ஆசிரியை கொழும்பிலிருந்து புறப்பட்டு மட்டுவிலில் உள்ள சகோதரியின் வீட்டில் வந்து தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில், கொழும்பில் பிளாட் வாங்குவதற்குப் பணம் தேவையாக உள்ளது. சீதனமாகத் தருவதாகக் கூறிய தொகையை 25 லட்சம் ரூபாவாக அதிகரித்துத் தருமாறு மாப்பிள்ளையின் தாயார் முன்பள்ளி ஆசிரியையின் பெரிய தாயாரிடம் கேட்டுள்ளார்.

அவர் இந்த விடயத்தை மணமகளின் சகோதரியிடம் கூறியுள்ளார். சகோதரி தகவலை வெளியிடாமல் அரபு நாட்டில் உள்ள சகோதரனுக்குக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், மாப்பிள்ளையின் தாயார், மணமகளுக்கு அலைபேசியில் அழைப்பு ஏற்படுத்தி சீதனத் தொகையை அதிகரித்து வழங்குமாறு கேட்டுள்ளார். இதனால் அவர் மனவிரக்திக்கு உள்ளானார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி சட்ட மருத்துவ அதிகாரி ஊடாக உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பணிக்கப்பட்டது.

(வ-4-9)



# கிளி. மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் திறப்பு

கிளிநொச்சி, ஓக.29

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் மனநல மருத்துவப் பிரிவுக்கான கட்டடத் தொகுதி மற்றும் மருத்துவ நிபுணர்கள் விடுதி என்பன வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோரால் நேற்று வைபவரீதியாகத் திறக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட 17.3 மில்லியன் ரூபா நிதியில் மனநல மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதியும்.(மருத்துவ உபகரணங்கள் அடங்கலாக) 14.6 மில்லியன் ரூபா நிதியில் மருத்துவ நிபுணர்கள் விடுதியும் அமைக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு முதலமைச்சருடன், சுகாதார அமைச்சர் குணசீலன்.முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்கள் அரியரத்தினம், தவநாதன், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் மைதிலி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் சேவையை விரிவுபடுத்தும் வகையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ற-10,35)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா , ஓக.29

வவுனியா மைய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு 230 கிராம் கேரளாக் கஞ்சா கொண்டு சென்றபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், கைது செய்யப்பட்டவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-10)



# ஓமந்தையில் விபத்து ஐந்து பேர் படுகாயம்

வவுனியா, ஓக. 29

புதுமனைப் புகுவிழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய முச்சக்கரவண்டியும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களை ஏற்றிவந்த சொகுசு வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. அதில் தந்தை, இரு மகன் உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.25 மணியளவில் வவுனியா ஓமந்தை பறநட்டான்கல் பகுதியில் நடந்துள்ளது. முச்சக்கர வண்டி சாரதி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் உறவினர் ஒருவரின் புதுமனை புகுவிழா வுக்கு, வவுனியா 4ஆம் கட்டைப்பகுதியிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை இரு மகன்களும், அயல் வீட்டைச் சேர்ந்த இரு சிறுவர்களும் சென்றனர். நிகழ்வுகள் முடிவுற்று இரவு வவுனியாவுக்கு திரும்பிய போது ஓமந்தை பறநட்டான்கல் பகுதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற சொகுசு வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதியுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டி கடுமையாகச் சேதமடைந்தது. அதில் பயணித்த மலையாண்டி செல்வகுமார் (வயது 43), செல்வகுமார் லக்சன் (வயது13), செல்வகுமார் டிலக்சன் (வயது11), ஜெயச்சந்திரன் றோசான் (வயது16, லோகநாதன் டிலக்சன் (வயது14) ஆகியோர் காயமடைந்தனர். சாரதியான மலையாண்டி செல்வக்குமார் ஆபத்தான நிலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிவிருந்து சொகுசு வாகனத்தில் பயணித்த 7 சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் இன்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இடம்பெறும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வந்துள்ளனர். அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத பட்சத்தில் வேறொரு வாகனத்தில் நேற்று இரவே அவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றனர். சொகுசு வாகனத்தின் சாரதி விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-10)

# சாவ. மருத்துவமனைக்கு குழந்தைகள் நல மருத்துவ நிபுணர்

சாவகச்சேரி, ஓக.29

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நிரந்தர குழந்தைகள் நல மருத்துவ நிபுணர் நியமிக்கப்பட்டார். இவர் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார் என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவுக்கென இரு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ள போதும், அங்கு சிகிச்சைக்காகக் கொண்டு வரப்படும் குழந்தைகள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். மருத்துவமனை நிர்வாகம் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய குழந்தைகள் மருத்துவ நிபுணர் சுகாதார அமைச்சால் சாவகச்சேரி மருத்துவமனைக்கு நியமிக்கப் பட்டார்.

மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் மருத்துவ நிபுணரால் தினமும் பரிசோதிக்கப்படுவர். குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பிரதி வெள்ளிக்கிழமைகளில் மருத்துவமனையில் இடம்பெறும். குழந்தைகளுக்கான போசாக்குக் கிளினிக்கும் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனை வளாகத்தில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் இரு மாடியில் குழந்தைகள் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் ஜப்பானிய நிறுவனத்தால் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது.

(ற-10, 9)





# களவு மரம் ஏற்றிய வாகனம் பாலத்துள் விழுந்து விபத்து!

மட்டக்களப்பு, ஓக. 29

சட்டவிரோத மரங்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று கிரான் பாலத்துக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

செங்கலடி மணலாறு பகுதியில் இருந்து சட்டவிரோத மரங்களை கிரான் பகுதியினூடாக ஓட்டமாவடிக்குச் கொண்டு சென்ற வழியில் புலிபாய்ந்த கல் பகுதியில் வாழைச்சேனை வன இலாகா அதிகாரிகள் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அவர்களிடம் இருந்து தப்புவதற்காக வேகமாகச் சென்ற வாகனம் கடடுப்பாட்டை இழந்து கிரான் பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற-10)

## தென்மராட்சியில் இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் பெண் உட்பட ஐவர் படுகாயம்

தென்மராட்சி, ஓக.29
தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சாலை விபத்துகளில் பெண்ணொருவர் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மட்டுவில் தெற்கு வங்களா சாலையில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மூவர் காயமடைந்தனர். சாலைகளில் காணப்பட்ட குழிகளே விபத்துக்கு காரணம் எனக் றப்படுகிறது.

அவர்களில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இந்திரன் பிரதீபன் (28) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் கந்தசாமி (54) வி.சுதாகர் என்ற இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதடிகோப்பாய் சாலையில் டிப்பர் வாகனத்தின் பின்பகுதியில் மோட்டார் சைக்கிளின் கைபிடி மோதியதில் தூக்கி வீசப்பட்ட தம்பதியினர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

கொடிகாமம் தொடருந்து நிலைய சாலையைச் சேர்ந்த சற்குணானந்தன் மெக்தானந்தன் (46), அவரது மனைவியான மெக்தானந்தன் விக்னேஸ்வரி (45) என்ற இருவரே காயமடைந்தனர். இவர்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ய-9)

### பருத்தித்துறை பேருந்து நிலையத்தில்

# பாதுகாப்பு வேலியால் பயணிகள் கடும் அவதி

யாழ்ப்பாணம், ஓக.29
பருத்தித்துறைமையப்பேருந்துநிலையத்தைச் சுற்றி பருத்தித்துறை நகரசபையால் வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கிழக்குப் பக்கத்தில் உள்ள வங்கிகள் மற்றும் அவற்றைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு செல்கின்ற மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொதுமக்கள் சார்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு மனு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன் ச.சுகிர்தன் மற்றும்பருத்தித்துறைநகரசபைச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பேருந்து நிலையத்தைச்சுற்றி மூன்று பக்கங்களும் பைப்பிலான வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் செம்பியன்பற்று, மணற்காடு, நாகர்கோவில், குடத்தனை, வல்வெட்டித்துறை, மந்திகை மற்றும் துன்னாலை போன்ற பகுதிகளிலிருந்து நகருக்கு வரும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பேருந்து நிலையத்துக்குள் பொருள்களுடன் செல்வதில் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

அத்துடன் கொழும்பு, திருகோணமலை, வவுனியா, கல்முனை போன்ற இடங்களுக்குப் செல்வோர் வங்கிகளில் பணம் எடுத்தல், பயணத்துக்குத் தேவையான தண்ணீர், சிற்றுண்டிகளை வாங்கிச் செல்வதிலும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். பேருந்துகளில் ஏற்றவிருக்கும் பொதிகளை தூக்கிக்கொண்டு பஸ்நிலையத்தைச் சுற்றிவர வேண்டியுள்ளது.

எனவே, இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டுபொதுமக்களாகியஎமக்கு ஆகக் குறைந்த வசதியாக பஸ்நிலையத்தின் கிழக்குப்பக்க வேலியின் தெற்குப்பக்கத்தில் பொருத்தமான இடத்தில் கடவை ஒன்றினை ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-173)

## சந்நிதியில் இன்று ஆன்மிக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.29
தொண்டமானாறு செல்வச்சந்நிதி அறநெறிப்பாடசாலையால் சந்நிதி திருவிழாவை முன்னிட்டு ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் தினமும் காலை, மாலை, இரவு வேளைகளில் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இன்று 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை உள்ளம் கவர் கள்வன் எனும் தலைப்பில் சைவப்புலவர் கைலைநாதனின் சொற்பொழிவும், மாலை பஜனையுடன் சி.இசைமைந்தன் ப.சிவமைந்தன் ஆகியோரின் பக்திப் பாடல்களும், சின்மய மிசன் பிரமச்சாரி யாக்ரித சைத்தன்யாவின் பிரசங்கமும் இடம்பெறும்.

நாளை 30ஆம் திகதி புதன்கிழமை காலை மானிடம் எனும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் திருமதி பரமேஸ்வரி சிவபாதத்தின் சொற்பொழிவும், மாலை விசேட நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.

நாளைமறுதினம் 31ஆம்திகதி வியாழக்கிழமை காலை இறைவழிபாடு எனும் தலைப்பில் சைவப்புலவர் திருமதி சசிலோகா ஜெயராஜனின் சொற்பொழிவும், மாலை பஜனை, மட்டக்களப்பு விபுலானந்தர் கலைக்கல்லூரி விரிவுரையாளர் செல்வி கஸ்தூரி கணேசமூர்த்தியின் இன்னிசைக் கச்சேரியும், சின்மயமிசன் பிரமச்சாரி யாக்ரித சைத்தன்யாவின் பிரசங்கமும் நடைபெறவுள்ளன. (ய-173)

## பருத்தித்துறை, கரவெட்டியில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 29
பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

காலை கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட மும், பி.ப.பருத்தித்துறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் அந்தந்தப் பிரதேச செயலர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

இந்தக் கூட்டங்கள் இணைத்தலைவர்களான சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடை பெறும். (173)

## கல்வியங்காடு பொதுச்சந்தையை சீரமைக்கும் பணி விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.29
கல்வியங்காடு பொதுச்சந்தையின் சீரமைப்புப்பணிகள் இந்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக மரக்கறி மற்றும் பழங்கள்விற்பனைப்பகுதிகள் சீரமைக்கப்படவுள்ளன என மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

தொடர்ந்து மீன் விற்பனைச் சந்தையும் சீரமைக்கப்படும்.

கடலுணவுகள் வெட்டி பதப்படுத்தும் கொள்கலனும்போதியவசதியற்றநிலையில் உள்ளதால், சந்தையுடன் இணைத்து இந்தக் கொள்கலன் வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேசமயம் ஆடியபாதம் சாலையில் சந்தைப் பக்கமாகவுள்ள வர்த்தகநிலையத் தொகுதிகளும் சீரமைப்புச் செய்யப்பட உள்ளன.

இந்த வர்த்தக நிலைய கட்டடத் தொகுதிகள் யாவும் மேல் மாடித்தொகுதியாக அமைக்கப்படவுள்ளன.

கட்டடத்தொகுதிக்கான அமைப்புப்பணிகள் யாவும் விரைவாக ஆரம்பிக்கப்படவும் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ய-17)

## சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக. 29
மீசாலை வடக்கு வேம்பிராய் கொடிகாம சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக்கோட்டம் உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாடும் இன்று காலை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை காலையும், மாலையும் திருவருட்பா ஓதுதல், ஜோதி வழிபாடும், 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் உயிர் இரக்கத்தை வலியுறுத்தும் வகையில் பன்னாட்டு ரீதியிலான மகாநாடும் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி
ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

- 10 நாள் பயிற்சிகள்.
- ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
- இருபாலாருக்குமானது
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
- கட்டணம் இல்லை.
- பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்
முழுப் பெயர்: ..........
வசிப்பிட முகவரி: ..........
பிறந்த ஆண்டு: ..........
அலைபேசி இலக்கம்: ..........
தற்போது முழுநேர / பகுதி நேர பணியில் ஈடுபடுகின்றீர்களா — ஆம் / இல்லை
கல்வித் தகைமை:
சாதாரண தரம்–
ஆண்டு: .......... பெறுபேறு: ..........
பாடம் பெறுபேறு
1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9. 10.
உயர்தரம்–
ஆண்டு: .......... பெறுபேறு: ..........
பாடம் பெறுபேறு
1. 2. 3. 4.
கையொப்பம்

## எங்குமே...

கப்பொய்கூறும்செயற்பாடாகும்" என்றுபிரதி மன்றாடியார்அதிபதிபி.குமாரரட்ணம்தீர்ப்பாயத்திடம் உறுதியாக எடுத்துரைத்தார்.

எதிரிகள்தரப்புச்சாட்சியங்கள்தீர்ப்பாயம்முன்னிலையில் நேற்று ஆரம்பமாகின. முதல் 6 எதிரிகளின் சாட்சியங்கள் நேற்று நிறைவடைந்தன. எதிரிகளின் குறுக்கு விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு உறுதியாகக் கூறினார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலைசெய்யப்பட்டார். இந்தக்கொடூரச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது.

மேல்நீதிமன்றநீதிபதிபாலேந்திரன்சசிமகேந்திரன்தலைமையில்மேல்நீதிமன்றநீதிபதிகள் அன்னலிங்கம்பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கியதீர்ப்பாயம் நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத்தொடுநர்சார்பில்பிரதிமன்றாடியார் அதிபதிபி. குமாரரட்ணம்தலைமையில்அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

எதிரிகள்தரப்பில் 1ஆம், 2ஆம், 3ஆம், 6ஆம் மற்றும் 8ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன மற்றும் சட்டத்தரணி லியகே ஆகியோரும் 5ஆம்எதிரியின்சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ஆம்மற்றும்9ஆம்எதிரிகள்சார்பில்சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன்ஜெயந்தாவும்முன்னிலைஆகியிருந்தனர். பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம்குகநாதன், ஜெயதரன்கோகிலன்மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதனைத்தொடர்ந்துஎதிரிகள்தரப்புச்சாட்சிப் பதிவுகள் ஆரம்பமாகின.

எதிரிகள்தரப்புசாட்சியமாக 9ஆம்எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம்சசிக்குமார்என்பவரின்மனைவிமகாலக்சுமிசசிக்குமார்மற்றும்குகரூபன்என்போரையும் எதிரிகள் தரப்பு சாட்சியமாக அழைக்க தீர்ப்பாயம் அனுமதியளித்தது.

**முதலாம் எதிரி சாட்சியம்**

முதலாம் எதிரியான பூபாலசிங்கம் இந்திரகுமார் சாட்சிக் கூண்டில் ஏறி சத்தியம் செய்து சாட்சியம் அளித்தார்.

"நான் புங்குடுதீவில் 23 வருடமாக வசிக்கின்றேன். கடற்றொழில் செய்து வருகின்றேன். மாணவி கொலை செய்யப்பட்டது சம்பவம் நடந்தமறுநாள்2015ஆம்ஆண்டுமேமாதம் 14ஆம்திகதியேஎனக்குத்தெரியும். நான்அந்த மாணவியை இரண்டே இரண்டு தடவை தான் நேரில் கண்டுள்ளேன்.

என்னை அந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் 14ஆம் திகதி கைது செய்தனர். கைது செய்து, என்னுடைய சேர்ட்டைக் கழட்டி கைகளை பின்புறமாகக்கட்டிகீழேதள்ளிவீழ்த்திஎன்னுடைய கால்களை கோபி எனும் பொலிஸ் உத்தியோகத்தர்மிதித்துஇருக்கதோள்பட்டையில் மூன்று நட்சத்திரம் உடைய பொலிஸ் உயர் அதிகாரிஒருவர்என்னைகொட்டனால்தாக்கினார்" என கூறி தீர்ப்பாயம் முன்னிலையில் தன்னைத்தாக்கியவிதத்தைசெய்கைமூலம் செய்து காட்டினார்.

இந்த மாணவி கொலை வழக்குக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. என் மீதான குற்றசாட்டுக்கள் அனைத்தையும் முற்றாக மறுக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

**இரண்டாம் எதிரி சாட்சியம்**

இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார் சாட்சி கூண்டில் ஏறி சாட்சியம் அளித்தார்.

"நான் புங்குடுதீவில் வசிக்கின்றேன். கடற்றொழில் செய்து வருகின்றேன். கடற்றொழிலுக்குச்செல்லாத சமயங்களில் பனைமரங்களில் ஏறி மட்டை வெட்டுதல், தென்னை மரங்களில்ஏறிதேங்காய்பிடுங்குதல்போன்ற வேலைகளை செய்வேன்.

மாணவி படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 2015ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி காலையில் நான் வேலைக்குச் சென்றுவிட்டேன் மதியம் 1மணியளவில்தான் வீட்டுக்குச் சென்றேன். அப்போது எனது மனைவி கூறினார் " பொலிஸ் உங்களை ஆலடிக்கு வர சொல்லிட்டுபோறாங்க" என்று அதனால்நான் அங்கே சென்றேன்.

அங்கே சென்றதும் பொலிஸ் என்னை கைது செய்து அழைத்துச்சென்று எனது முதுகுக்குப் பின் புறமாக இரண்டு கைகளையும் சேர்த்து விலங்கு மாட்டி என்னை தடிமனான கொட்டன்களால் அடித்துத் துன்புறுத்தினார்கள்.

என்னிடம்எந்தவிதமானவாக்குமூலங்களையும்பெறாமல்சிங்களத்தில்எழுதியதாள் ஒன்றில் என்னைக் கையொப்பம் இடச் சொல்லி அடித்தார்கள் அடிதாங்காமல் அதில் என்ன எழுதி இருக்கின்றது என தெரியாமல் அதில் கையொப்பம் இட்டேன்.

பின்னர் என்னிடம் குற்ற தடுப்பு புலனாய்வு பிரிவினர் சிங்களத்தில் எழுதிய தாளில் கையொப்பம் வாங்கினார்கள். கையொப்பம் வாங்கி சிறிது நேரத்தில் தமிழ் உத்தியோகத்தர்ஒருவர்என்னிடம்தமிழில்எழுதியவாக்குமூலத்தில்கையொப்பம்வாங்கினார். ஆனால் அதில்என்னஎழுதிஇருக்கின்றதுஎன்பதனை வாசித்து காட்டவில்லை.

என் மீது சுமத்தப்பட்டு உள்ள அனைத்துக் குற்றசாட்டுக்களையும் நான் முற்றாக மறுக்கின்றேன். எனக்கும் இந்த குற்றத்துக்கும் எந்தத்தொடர்பும்இல்லை" எனதீர்ப்பாயத்தில் கூறினார்.

அதனை அடுத்து வழக்குத் தொடுநர் தரப்பில் பிரதிமன்றாடியார் அதிபதி இரண்டாம்எதிரியிடம்குறுக்குவிசாரணைகளை ஆரம்பித்தார்.

"உதயசூரியன் சுரேஷ்கரனை (கண்கண்ட சாட்சிஎனசாட்சியம்அளித்தவர்) எனக்குதெரியும் ஆனால் பழக்கமில்லை. அடுத்ததாக நடராஜா புவனேஸ்வரன் (மாப்பிள்ளை கண் கண்ட சாட்சி என சாட்சியம் அளித்தவர்) என்பவரை தெரியும்.

இந்தவழக்கின் 6ஆம்எதிரியானசிவதேவன் துசாந்த்மாணவியைஒருதலையாககாதலித்தமை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. மாணவியைகடத்திதருமாறுதுசாந்த்என்னிடம்கேட்டதும்இல்லை. அதற்காகஎனக்கு23 ஆயிரம் ரூபா பணம் கப்பமாகத் தரவும் இல்லை.

இந்தவழக்கில்உள்ளதவக்குமார், சந்திரஹாசன், துசாந்த் ஆகியோருடன் சேர்ந்து நான் மாணவியைகடத்தவும்இல்லை, வன்புணர்வுக்குஉட்படுத்தவும்இல்லை, கொலை செய்யவும் இல்லை. எனக்கும் மனைவி பாடசாலைசெல்லும்மகள்உண்டு. நான்அவ்வாறான செயலில் ஈடுபட மாட்டேன்.

மாணவியின் படுகொலை மிக கொடூரமாக நடந்துள்ளது. அதனைஇராணுவத்தினர்செய்ததாகவேமுன்னர்ஊரில்கதைத்தார்கள். இது தொடர்பில் நான் எனது சட்டத்தரணியிடம் கூறி இருந்தேன். ஆனால் வழக்கின் சாட்சியங்கள் பதியப்படும் போது அது தொடர்பில் சட்டத்தரணி எந்த சாட்சியத்திடமும் கேட்கவில்லை.

இந்த வழக்கில் சம்பவ இடத்தில் என்னை காலையில்கண்டதாகசாட்சியம்அளித்தபாலசிங்கம் என்பவர் எனது மைத்துனர். நான் அவரின்தங்கையைத்தான்திருமணம்முடித்துள்ளேன். அவரும் எனது மனைவியும் ஒரு நாள் என்னை வவுனியா சிறைச்சாலையில் சந்தித்து தம்மை புலனாய்வுத் துறையினர் மிரட்டுவதாகவும், தமதுவாய்க்குள்கைத்துப்பாக்கியை வைத்து பொய் சாட்சி கூறுமாறு மிரட்டுவதாகவும் கூறினார்கள். அதனாலேயேதான் அன்று எனது மச்சான் எனக்கு எதிராக சாட்சியமளித்தார்.

அது தொடர்பிலும் நான் எனது சட்டத்தரணிக்கு கூறி இருந்தேன். அவர் அது தொடர்பில் மன்றில் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிடவில்லை.

என்னைப் பொலிஸார் தாக்கியது தொடர்பில் அப்போதைய ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் லெனின்குமார் அவர்களிடம் கூறி இருந்தேன். அங்கும் நான் என் மீது சுமத்தப்பட்டகுற்றச்சாட்டைஏற்றுக்கொள்ளவில்லை" என்று இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார் தெரிவித்தார்.

அதனை அடுத்து மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியம் வழங்கினார்.

"நான் கடற்றொழில் செய்து வருகிறேன். 14 ஆம்திகதிகாலை10மணியளவில்ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சில பொலிஸார் என்னைக் கைது செய்தனர். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று ஆடைகளை களைந்து இரண்டரை மணித்தியாலங்களாக அடித்து துன்புறுத்தி சிங்களத்தில் எழுதிய தாளில் கையொப்பம் வாங்கினார்கள். அதேபோலவே புலனாய்வு துறையினரும் சிங்களத்தில் எழுதிய தாளில் கையொப்பம் வாங்கினார்கள்.

நான் இன்னும் திருமணம் செய்யவில்லை. எனக்கு திருமணம் பேசி முற்றாகி இருந்த சமயத்தில்தான் இந்தவழக்கில்என்னைக்கைது செய்தனர் அதனால்திருமணமும்நின்றுவிட்டது.

எனக்கு கள்ளு குடிக்கும் பழக்கம் நீண்டகாலமாக இல்லை. கள்ளுசீசன்நேரம் மட்டுமே குடிப்பேன். புவனேஸ்வரன் வீட்டுக்கு கள்ளுக் குடிக்கப் போவதில்லை. மாணவி கொலை செய்யப்படுவதற்கு ஒரு வருடத்துக்கு மேலாக அங்கு போறதில்லை.

மாணவியை கடத்தி 23 ஆயிரம் ரூபா பணத்தைப் பெறவேண்டும் என்ற தேவை எனக்கு இல்லை.

மாணவி படுகொலை செய்யபப்ட்ட தினமான மே 13ஆம் திகதி நான் எனது சகோதரனான இந்திரகுமாருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு ஒன்று இருப்பதனால், அவரை பஸ்ஸில் ஏற்றிவிட காலை 7.30க்கு சைக்கிளில் அவரை அழைத்துச் சென்றேன். அதனை படுகொலை செய்யப்பட்ட மாணவியின் சகோதரன் உள்ளிட்டவர்கள் கண்டார்கள். ஆலடிச் சந்தியில் நின்று காலை 8.20 மணிக்குஅவரைபஸ்ஏற்றிவிட்டேன்" என்று மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார் தெரிவித்தார்.

சகோதரனை பஸ் ஏற்றிவிட்ட விடயத்தை இந்தவழக்கில்முதன்முறையாகச்சொல்கிறீர்கள். எனவே நடக்காத விடயத்தை நடந்ததாகப் பொய் கூறுகிறீர்கள் என்று பிரதி மன்றாடியார் அதிபதி எதிரியிடம் கேள்வி எழுப்பினார்.

"இந்தத்தகவல்களைநான்பொலிஸாரிடமும் புலனாய்வு துறையினரிடமும் தெரிவித்து உள்ளேன். எனது சட்டத்தரணியிடமும் தெரிவித்திருந்தேன். ஆனால் அவர் அது தொடர்பில் தீர்ப்பாயத்திடம் எதுவுமே தெரிவிக்கவில்லை.

என்னை பொலிஸார் அடித்து துன்புறுத்தல் செய்தமை தொடர்பில், பொலிஸ் உயர் அதிகாரி, சட்ட மருத்துவ அதிகாரி, புலனாய்வு துறையினர், ஊர்காவற்றுறை நீதிவான் மற்றும்மேல்நீதிமன்றில்என5இடத்தில்கூறியுள்ளேன்.

இந்தக்குற்றத்துக்கும்எனக்கும்எந்தசம்பந்தமும்இல்லை. இந்தக்குற்றசாட்டுக்களைநான் முற்றாக மறுக்கின்றேன்" என்று மூன்றாம் எதிரியானபூபாலசிங்கம்தவக்குமார்தெரிவித்தார்

அதனை தொடர்ந்து 4ஆம் எதிரியான மகாலிங்கம் சசிந்திரன் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியம் வழங்கினார்.

"நான் தாய்லாந்தில் இருந்து ஆடைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் தொழிலைசெய்துவருகிறேன். இந்தக்குற்றத்துக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. முதலில்மாணவியைநான்தான்கடத்திவன்புணர்வுக்குஉட்படுத்திபடுகொலைசெய்தேன் என பொலிஸார் கூறினார்கள். தற்போது அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக செயற்பட்டமைதிட்டம்தீட்டிக்கொடுத்தமை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக மறுக்கிறேன். நான்இந்தக்குற்றச்சாட்டுக்களை செய்யவில்லை. என்மீதுசுமத்தப்பட்ட பொய்யானகுற்றச்சாட்டுகளால்எனதுஅம்மாஇறந்துவிட்டார். எனது வீடு அழிக்கப்பட்டுவிட்டது. இந்தவழக்கில்எனக்குஎதிராகஇதுவரையில் எந்தச்சான்றுபொருள்களும்முன்வைக்கப்படவில்லை. சாட்சியங்களும் எனக்கு எதிராக இல்லை

சாட்சிகளில் ஒருவர் மட்டும் "மாணவி படுகொலை செய்யப்படுவதற்கு முதல் நாளான மே12ஆம்திகதிஎன்னைபுங்குடுதீவில்வான் ஒன்றில் கண்டதாகவும், நாங்கள் வானில் இருந்துமாணவிபஸ்ஸில்வந்துஇறங்கிசெல்வதனைப் பார்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் நான் குற்றச் சம்பவத்துடன் தொடர்புள்ளவன்எனஎவருமேசாட்சியமளிக்கவில்லை.

என்னை 2015ஆம் ஆண்டு மே 12ஆம் திகதி புங்குடுதீவில் கண்டதாக சாட்சிய கூறியது பொய். நான் அன்றைய தினம் கொழும்பில் தங்கியிருந்தேன். அதற்குநான்உணவுவாங்கிய யாழ். ஹோட்டல் சிசிரிவி கமராப் பதிவு உள்ளது. அதனைப் பெறுவதற்கு அந்தக் ஹோட்டல் உரிமையாளரிடம் கோரினோம். ஆனால் கிடைக்கவில்லை. சாட்சியமளிக்க அவரை அழைத்த போதும் அச்சத்தால் அவர் வரமாட்டேன்என்றுகூறிவிட்டார்" என்றுநான்காம்எதிரியான சசிதரன் சாட்சியமளித்தார்.

12ஆம் திகதி நீங்கள் கொழும்பிலிருந்ததாக நீதிவான் நீதிமன்றிடமோ, தீர்ப்பாயத்தில் நடந்த குறுக்கு விசாரணையிலோ தெரிவிக்கப்படவில்லை. எனவே நடக்காத ஒன்றை நடந்ததாகப் பொய் கூறவே இந்த விடயத்தை தற்போது கூறுகின்றீர்கள் என்று பிரதி மன்றாடியார் அதிபதி எதிரியிடம் கேட்டார்.

இந்த விடயத்தைச் சொல்வதற்கு தற்போது தான் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று எதிரி பதிலளித்ததார்.

**கடற்படையினரே மாணவியைக் கொன்றது**

"இந்தக் கொடூரச் சம்பவத்தை கடற்படையினரே செய்தனர். இந்தச்சம்பவத்துக்கு முன்பதாக இரு பெண்கள் இதே போன்றே படுகொலைசெய்யப்பட்டனர். அந்தப்படுகொலைகளுக்கு கடற்படையினரே கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் செய்த குற்றத்தை மறைப்பதற்காகவே எம்மைக் கைது செய்துவிட்டு புங்குடுதீவில்ஒலிபெருக்கிமூலம்அறிவிக்கப்பட்டது" என்றும்நான்காம்எதிரியானசசிதரன் சாட்சியமளித்தார்.

ஐந்தாம் எதிரியான தில்லைநாதன் சந்திரகாசன் சாட்சியமளித்தார்.

"நான் கடற்றொழில் செய்பவன். இந்தக் கொலையுடன் எனக்கு எதுவிதத் தொடர்பும் இல்லை. இவ்வாறு ஒருசம்பவம்நடப்பதைக் கண்டிருந்தால் அதனைச் செய்தவர்களை துண்டம் துண்டமாக வெட்டிப் போட்டிருப்பேன்.

கொலை நடைபெற்ற தினத்தன்று என்னை சம்பவ இடத்துக்கு அருகே சாறத்துடன் கண்டதாக பெண்ணொருவர் சாட்சியமளித்திருந்தார். அவர் பொய் கூறுகின்றார். அவருக்கும் எனக்கும்இடையேமுரண்பாடுஉள்ளது. அது தொடர்பில் அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன்.

கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் ஆலடிப் பகுதியில் என்னை வான் ஒன்றுக்குள் கண்டதாகவும், அதற்குள் சுவிஸ்குமாரும்இருந்ததாகவும்சாட்சிஒருவர் கூறினார். அதுவும் பொய்" என்று 5ஆம் எதிரியான தில்லைநாதன் சந்திரகாசன் சாட்சியமளித்தார்.

மே 12ஆம் திகதி ஆலடியில் வான் ஒன்றில் உம்மைக் கண்டதாகச் சாட்சியமளித்தவருக்கும் உமக்கும் இடையேயும் முரண்பாடு உண்டா? என தீர்ப்பாயம் கேள்வியெழுப்பியது. எதிரி இல்லை எனத் தெரிவித்தார்.

ஆறாம் எதிரியான சிவதேவன் துசாந்த் சாட்சியமளித்தார்.

நான்வேலணைப்பிரதேசசபையின்புங்குடுதீவு உப அலுவலகத்தில் வெளிக்களத் தொழிலாளியாகப் பணியாற்றுகின்றேன். நான் வித்தியாவை ஒருதலையாகக் காதலித்ததாகக்கூறுவதுபொய்யானது. நான்எனதுமச்சாளையே காதலித்தேன். என்னை இந்த வழக்கில்கைதுசெய்ததால்அவர்வேறொருவரைத் திருமணம் செய்துவிட்டார்.

எனது வீட்டிலிருந்து வித்தியாவின் மூக்குக் கண்ணாடிஎடுத்தமையும்பொய்யானகுற்றச்சாட்டு. அதனை எனக்கு முன்பாகவே வைத்துவிட்டு சிஐடியினர் எடுத்தனர். சம்பவ தினத்தன்று என்னால் அது வைக்கப்பட்டிருந்தால் எனது வீட்டுக்குத்தீவைத்த போது அது எரிந்திருக்கும்" என்றுஆறாம்எதிரியானசிவதேவன் துசாந்த் சாட்சியமளித்தார்.

"மூக்குக் கண்ணாடி மீட்கப்பட்ட இடம் எரிந்த நிலையில் காணப்பட்டமை தீர்ப்பாயம் முன்னிலையில் இடம்பெற்ற குறுக்கு விசாரணையில் உங்கள் சட்டத்தரணியால் தெரிவிக்கப்படவில்லை.. தற்போது அதனைக் கூறுவது நடக்காததை நடந்ததாகக் கூறும் பொய்யான சாட்சியமாகும்" என்றுபிரதிமன்றாடியார் அதிபதி எதிரியிடம் கேள்வியெழுப்பினார்.

சட்டத்தரணியிடம் இது பற்றிக் கூறியிருந்தேன். ஆனால்அவரால்இந்தவிடயம்கேட்கப்படவில்லைஎன்றுஎதிரிகூறினார்.

முதல் ஆறு எதிரிகளின் சாட்சியப் பதிவுகள் நிறைவடைந்தன. இன்று 7ஆம் 8ஆம் 9ஆம் எதிரிகளின் சாட்சியப் பதிவுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-37)

# பாடசாலை மாணவர்களுக்கு விவசாய விளக்க இதழ்கள்

## வடக்கு மாகாண அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 29
வடக்குமாகாணத்தில்இளம் சமுதாயத்தினரிடையேவிவசாயத்துறையைவளர்க்கும் முயற்சியாக பாடசாலைகளுக்கு விவசாயம் சார்ந்த விளக்க இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர்எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் ஆரம்ப காலத்தினைவிட தற்போது விவசாயத்துறையில்வீழ்ச்சியைக்காணக்கூடியதாக உள்ளது. வடக்கின் விவசாயத்தை மீளக் கட்டிஎழுப்பும் நோக்கில் நாம் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில் நாம் பாடசாலைகள் அனைத்துக்கும் விவசாயம் சார்ந்த விளக்கங்கள் அடங்கிய இதழ்களை விநி யோகித்து வருகின்றோம்.

நாம்வழங்கும்இதழில்விவசாயம் தொடர்பான அடிப்படை விளக்கம், நீர்ப்பாசன முறைகள், தரையை எவ்வாறு பராமரித்தல், எந்தெந்தப் பயிர்களை எந்தக் காலப் பகுதியில் எவ்வாறு பயிரிட வேண்டும்என்பனபோன்ற விடயங்களை சுருக்கமாகவும்தெளிவாகவும்அந்தஇதழில் குறிப்பிட்டுள்ளோம்.

மேலும்தற்காலத்துக்குஏற்ற வகையில் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பமுறைகள் தொடர்பிலும் நாம் அதில் குறிப்பிட்டுள்ளோம்.

இதனால் இளைய சமுதாயம் காலத்துக்கு ஏற்றவகையில் இலகுவாக விவசா யத்தில் ஈடுபடமுடியும்.

வடக்கு மாகாணத்தில் உள்ளவிவசாயப்பண்ணைகளில் விதையினங்கள், மரக்கன்றுகள், பழவகைகள் போன்றவற்றை எவ்வாறு பெறுவது மற்றும் அவற்றின் பெறுமதிகள் போன்றவற்றையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எமது திணைக்களங்களில் தேவையானநாற்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், எமது திணைக்களத்தால்விநியோகிக்கப்பட்ட இதழ்களில் தென்னை நாற்றுக்களைஎவ்வாறுஉற்பத்தி செய்வது என்பது தொடர்பிலும்நாம்வழிகாட்டல்களை வழங்கியுள்ளோம். இதனால்அதிகவருமானத்தைப் பெற்று பயனடையக் கூடியதாக இருக்கும்.

இந்தஇதழ்களைநாம்மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அந்தந்த வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு விநியோகித்து வருகிறோம்.

பின்னர் அவை வலயங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு மாதாந்தம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்கள் மத்தியில் விவசாய அறிவை வளர்க்க முடியும் என எதிர் பார்த்துள்ளோம் என்றார். (ய-8)

குறுகிய காலத்துக்குள் பணிகளை செய்துமுடிக்க

# சகலரதும் ஒத்துழைப்பையும் கோருகிறார் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக.29
வடக்கு மாகாணசபையின் மிகுதிக்காலம் மிகவும் குறைவாக இருப்பதினால் இருக்கின்ற காலத்தினுள் சரியான திட்டங்களைவகுத்துச்செயற்படுவதற்கு சகலரதும் ஒத்துழைப்புத் தேவைப்படுவதாக மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் மாலை மன்னாரில் வைத்துஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபையின் அமைச்சரவை முதலமைச்சரினால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

மாற்றியமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் சுகாதார,சுதேச,வைத்தியதுறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு அமைச்சானது என்னிடம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலத்தின் இறுதிக்கட்டத்தில்இவ்வாறானமாற்றத்தின் ஊடாக சுகாதார அமைச்சுப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.

இருக்கின்ற காலத்தினுள் வினைத்திறனாக எனது அமைச்சு சம்பந்தமான திட்டங்களை வகுத்து மாகாண சபையினுடைய மொத்த நகர்வுகளுக்கும் என்னாலான பங்களிப்பைச் செய்ய முடியும் என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது.

காலம் குறுகியதாக இருந்தாலும், ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களினுடைய நிலை என்ன இருக்கின்ற காலத்துக்குள்ளே முடிக்கப்பட வேண்டிய திட்டங்களின் தற்போதைய நிலைஎன்னஎன்பதுதொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

ஏற்கனவேஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைசரியானமுறையில் முடித்து வைக்கவேண்டிய தேவையுள்ளது.

இவ்வருடத்துக்கு என சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் இவ் வருடத்துக்குள் முடிவடைவதற்குவேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சரியான காலத்துக்குள் அவற்றை நிறைவுக்கு கொண்டுவரவேண்டும். ஆகவேவிரைந்துசெயற்பட வேண்டிய ஒரு நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

புதிதாக உள் நுழைந்துள்ளமையினால் சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அவர்களின் உதவியோடு வினைத்திறனான செயல் திட்டங்களை கொண்டு இறுதி வருடத்தை வெற்றிகரமாக முடித்துவிட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

அந்தவகையில் மாகாணசபையின் இறுதிக் காலத்தில் முதலமைச்சருக்கு பக்கபலமாகநிற்கவேண்டியதேவை எங்களுக்குள்ளது.

அந்தவகையில்ஆக்கபூர்வமான விடயங்கள் தொடர்பில் நான் கவனம் செலுத்தி வருகின்றேன். சம்பந்தப்பட்ட அனைவரினதும் ஒத்துழைப்புஎனக்குதேவைப்படுகின்றது. அவர்களின் ஒத்துழைப்போடு பணிகளைச் செய்து முடிக்கவேண்டும் என்றார். (ய-56)

# வழங்கப்பட்ட இடமாற்றத்தை 3 மாதங்களுக்கு ஒத்திவைக்கவும்

*கல்விச்செயலர் ஆணைக்குழுவிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக. 29
தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் எழுத்து மூலமாகக் கோரியுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றும் இ.இரவீந்திரன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் தேசிய நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்படுகிறார் எனப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக 20 வருடங்கள் பணியாற்றினார் என்பதன் அடிப்படையில் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டது.

இந்த இடமாற்றக் கடிதத்துக்குப் பதிலளித்துக் கடிதம் எழுதும் போதே கால அவகாசம் கோரியுள்ளார் இரவீந்திரன். இருப்பினும் தனது வேண்டுகோளுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று இரவீந்திரன் மேலும் தெரிவித்தார். (4-101-500)

# பொலிஸ் காவலரணை உடைத்தவர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 29
துன்னாலையில் துப்பாக்கிச் சூட்டின் பின்னரான வன்முறைகளில், தற்காலிக பொலிஸ் காவலரணை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியிருந்த துன்னாலையைச் சேர்ந்த குறித்த நபர் நேற்றுமுன்தினம் கிராமத்துக்குள் நடமாடிய போது கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றியதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் கடந்த மாதம் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். துப்பாகிச் சூடு நடத்திக் கொன்ற குற்றச்சாட்டில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விளக்க மறியலில் உள்ளனர். (4-26)

# வடக்கில் ரூபா 30 மில்லியனில் 392 அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக.29
வடக்குமாகாணத்தில்நடப்புவருடத்தில் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்திக்காக 392 செயற்திட்டங்கள்முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கென 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில்போரால் பாதிக்கப்பட்டவர்களில் 115பேருக்கு இந்தவருடம் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று வடக்குமாகாணமீன்பிடி,போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, சாலை அபிவிருத்தி, வர்த்தக வாணிபம் மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகமேலும்தெரிவிக்கப்பட்டதாவது; மாகாண குறி த்தொதுக்க ப்பட்ட அபிவிருத்தி நிதியின் ஊடாக பல்வேறு செயற்திட்டங்களை முன்னெ டுத்துள்ளோம். அதில்கிராமஅபிவிருத்திக்காக392 செயற்திட்டங்களுக்கு 30 மில்லியன்ரூபாஒதுக்கப்பட்டுள்ளது.இவற்றில் பௌதீக வளங்கள் சார்ந்த அபிவிருத்திக்காக 33 செயற்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. 359 செயற்திட்டங்கள் வாழ்வாதார ரீதியான உதவிகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி சார்பான 33 செயற்திட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 8 செயற்திட்டங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில்6செயற்திட்டங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 செயற்திட்டங்களும், மன்னார் மாவட்டத்தில்7செயற்திட்டங்களும், வவுனியாமாவட்டத்தில்6செயற்திட்டங்களும் முன்னெக்கப்ப ட்டுள்ளன. இதில்போரினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகளைவழங்கநடவடிக்கைஎடுக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 உதவித்திட்டங்களும்,வவுனியாமாவட்டத்தில் 20 உதவித் திட்டங்களும், மன்னார் மாவட்டத்தில் 16 உதவித் திட்டங்களும்,கிளிநொச்சிமாவட்டத்தில் 60 உதவித் திட்டங்களுக்கும் பயனாளிகள்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்என்றுமேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாதர் சங்கம் ,கிராம அபிவிருத்தி சங்கங்கள்,போன்றவற்றுக்கு மின் இணைப்பு ,மற்றும் நீரினை பெற்றுக்கொள்ளக்கூடியசெயற்திட்டங்களும் இதன் மூலம் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. வடக்கு மாகாணத்தில் இவ்வாறு 95 திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டுஇருக்கிறது. யாழ்ப்பாணமாவட்டத்தில்15செயல் திட்டங்களும்,கிளிநொச்சிமாவட்டத்தில் 24 செயல் திட்டங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 செயல் திட்டங்களும்,வவுனியா மாவட்டத்தில்17செயல்திட்டங்களும்,மன்னார் மாவட்டத்தில் 20 செயல் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன. (ய-21-ரி)



## 5 பி.எச்.ஐ.மாருக்கு வேதனத்துடன் நியமனம்

யாழ்.மாநகர சபையில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.27

முறையற்ற வகையில் இட மாற்றம் செய்யப்பட்ட யாழ். மாநகரசபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 5 பேருக்கும் அதே இடத்தில் வேதனத்துடன்மீள்நியமனம் வழங்க வேண்டும். பின்னர் உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் எனத் தெரிவித்து மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு 2017இல் முறையற்ற இடமாற்றம் எனும் தலைப்பில் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாநகரசபையில் கடமையாற்றி வேதனமின்றி உள்ள 5 பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் நிலை தொடர்பில் கடந்த 1.08. 2017இல் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைய முதல் நியமனத்தில் இருந்து உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட மாநகர சபையில் இவர்கள் கடமை யாற்றி வந்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையிலும் குறிப்பிட்ட சில பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நீண்ட காலமாகக் கடமையாற்றும் போது ஏனைய சில பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களைக் காரணமின்றி இடமாற்றம் செய்வது சாலப்பொருத்தமற்றது.

மேற்படி இடமாற்றங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகவே செய்யப்பட்டுள்ளன. அத்துடன் காரணமின்றி வேதனங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, முதலில் மீள்கடமையை 5 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் மாநகரசபையில் வழங்கி வேதனத்தை வழங்க ஆவன செய்யவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 4.08.2017 அன்று அமைச்சர் எழுதிய கடிதத்திற்கு இன்னமும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ய-50)

இந்திய படகுகளை கட்டுப்படுத்தும்வரை

# எமது இழுவைப் படகுக்கு தடை போடவேண்டாம்

உள்ளூர் மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 29



இழுவைப் படகைப் பயன்படுத்தி மீன்பிடிக்கத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோதும், இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்தும் வரை உள்ளூர் இழுவைப் படகுகளுடன் மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையைக் கைவிடுங்கள். இவ்வாறு உள்ளூர் மீனவர்கள் மீன்பிடி அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் சில மீனவர் சங்கப் பிரதிநிதிகளே இவ்வாறு மீன்பிடி அமைச்சரைச் சந்தித்து குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

குறித்த சந்திப்புத் தொடர்பில் அதில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் யஸ்ரின் சொய்சா மேலும் தெரிவித்ததாவது:

எமது பகுதியில் எமக்குத் தடை விதிக்கப்படும் அதே தொழில் முறையை எமது பகுதியில் இந்திய மீனவர்கள் செய்கின்றனர். அதனால் எமது கடலுக்குள் ஊடுருவி, தடை செய்யப்பட்ட தொழில் முறையில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் வரையில் எமது படகுகளைத் தடை செய்யக்கூடாது. எமது மீனவர்களைக் கைது செய்யக்கூடாது. இந்திய மீனவர்கள் ஆயிரக்கணக்கில் ஊடுருவி வருகின்றனர். அதற்கு இன்றுவரை தீர்வு எட்டப்படவில்லை.

வடக்கு மாகாண மீனவர்களிடம் இந்த வகையான இழுவைப் படகுகள் சில நூறு மட்டுமே உள்ளன என்று கோரினோம்.

இவற்றினை ஆராய்ந்த அமைச்சர் மகிந்த அமரவீர குறித்த சட்டம் அமுலாக்கப்படுகின்றபோதிலும் வடக்கு மாகாண மீனவர்களின் நன்மை கருதி குறித்த காலத்துக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனை தவிர்ப்பதாக உறுதியளித்தார் என்று யஸ்ரின் சொய்சா மேலும் தெரிவித்தார். (4-101)

## முல்லைத்தீவில் லிவ்கோ நிறுவனம் பால் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஒக.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் லிவ்கோ நிறுவனம் பால் கொள்வனவில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போரால் நீண்டகாலமாக விடுக்கப்பட்டுவந்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி பால் சந்தைப்படுத்தும் நிறுவனம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பால்கொள்வனவில் ஈடுபடவுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கற்சிலைமடு பகுதியில் பால் கொள்வனவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுவரை இப்பகுதியில் தனியாரே பால் கொள்வனவில் ஈடுபட்டுவந்தனர்.

பண்ணையாளர்கள் பாலை சந்தைப்படுத்திய போதிலும் குறிப்பிட்ட சில நன்மைகளைப் பெறமுடியாத நிலைமை காணப்பட்டது.

கால்நடையாளர்கள் தமது பெயரிலே பாலைக் கொடுக்காததால் வங்கிகளில் கடன் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கான ஏனைய வசதிகளைப் பெறமுடியாதிருந்தனர். வங்கிகளில் கடன்பெற்றுக் கால்நடைவளர்ப்பை மேம்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது.

எனவே, இவற்றினைக் கருத்தில் கொண்ட ஒட்டுசுட்டான் லிப்கோ நிறுவனம் கால்நடையாளர்களை ஒன்றுகூட்டி பயன்படும்படியான அறிவுறுத்தல்களை வழங்கியதுடன், எதிர்வரும் முதலாம் திகதி முதல் பாலைக் கொள்வனவு செய்வதாகவும் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ய-101)

## கிளி.நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவை உடைப்பதற்கு கோரிக்கை

கிளிநொச்சி, ஒக.29

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவை இருபிரிவுகளாக மாற்றியமைக்குமாறு நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பரந்த நிலப்பரப்பையும் அதிகமான குளங்களையும் உள்ளடக்கிய மாவட்டத்தில் ஒரேயொரு பொறியியலாளர் பிரிவில் நீர்ப்பாசனத்தை முகாமைத்துவம் செய்வதில் அதிக வேலைப்பளு காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரணைமடு விவசாய சம்மேளனத்தினால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பரந்த நிலப்பரப்புடைய கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக குளங்கள் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்திலேயே பெரியகுளமான இரணைமடுக்குளம் உட்பட 8 பெரிய குளங்களும், 40 வரையான நடுத்தரக் குளங்களும் உள்ளன. மேலும் பல சிறிய குளங்களையும் மாவட்டம் உள்ளடக்கியுள்ளது. இருப்பினும் இவை அனைத்தையும் ஒரே நீர்ப்பாசன பிராந்திய பொறியியலாளரே மேற்பார்வை செய்யவேண்டியுள்ளது.

பெரும் வேலைப்பளு காணப்படுவதனால் சில நெருக்கடிகளும் காணப்படுகின்றன. இதனால் மாவட்டத்தினை இரு பிராந்திய பொறியியலாளர் பிரிவுகளாகப் பிரித்து பணியை இலகுபடுத்தவேண்டும். அவ்வாறு அமையும் இரு பிராந்திய பொறியியலாளர் பிரிவுகளும் ஏ9 சாலையை மையமாக வைத்து கிளிநொச்சி கிழக்கு, மேற்கு எனப் பிரித்தால் மிக இலகுவாக கையாளக்கூடியதாக இருக்கும் என்றுசுட்டிக்காட்டப்பட்டது.

அது பற்றிய திட்ட வரைபை முன்வைத்தால் அதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என இணைத் தலைவர்களால் கூறப்பட்டது. (ய-101-6)

## புலமைப் பரீட்சை விடைத்தாள்கள் வடக்கில் 5 இடங்களில் திருத்தப்படும்

யாழ்ப்பாணம்.ஒக.29

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி வடக்கு மாகாணத்தில் 6 நிலையங்களில் இடம்பெறும். இந்த மாத இறுதியில் திருத்தும் பணி ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 நிலையங்களும் ,கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பரீட்சை நிலையமும் முல்லைத்தீவு ,வவுனியா ,மன்னார் ஆகியவற்றுக்கான பொதுவான ஒரு நிலையமாக வவுனியா உள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சை முடிவுகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

40 மைய நிலையங்கள் ஊடாக 384 குழுக்களாக, 6 ஆயிரத்து 965 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் நிறைவடைந்து புள்ளிகள் மதிப்பிடப்பட்ட பின்னர் பரீட்சை முடிவுகளை ஒக்டோபர் மாதம் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (4-ரி)

# கரைதுறைப்பற்று நடமாடும் சேவையில் வடக்கு மாகாணக் கொடி புறக்கணிப்பு

சாள்ஸ் எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம் ஒக.29



முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதச செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் வடக்கு மாகாணத்தின் கொடி புறக்கணிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் விசனத்துடன் தெரிவித்தார்.

முக்கிய நிகழ்வான நடமாடும்சேவையில்நாட்டின்கொடி மட்டும் ஏற்றப்பட்டுள்ளது. மாகாணத்தின் கொடி புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சாள்ஸ் நிர்மலநாதன் செயலக அதிகாரிகளிடம் கடும் விசனத்தை தெரிவித்துக்கொண்டார்.

முக்கிய நிகழ்வான நடமாடும் சேவையில் மாகாணத்தின் கொடி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதனை அதிகாரிகள் உற்று நோக்க வேண்டும். இந்த நடமாடும் சேவையில் அப்பால் இன்று இந்த மாவட்டத்தில் மொத்தமாக 42 ஆயிரம் பிரச்சினைகள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 44 திணைக்களம் சார் நடமாடும் சேவையில் 3,500இற்கும் மேற்பட்ட மக்கள் பங்குகொண்டிருந்தனர் என பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்தார். (ய-101)

ஜி.சீ.ஈ. உயர்தர

## பரீட்சைத் திகதி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம். ஒக. 29

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடப்பரீட்சைகளின் திகதி மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 2 ஆம் திகதி இந்தப் பரீட்சைகள் இடம்பெறவிருந்தன. அன்று ஹஜ்ஜுப்பெருநாள் கொண்டாடப்படவிருப்பதால் அன்று நடைபெறவிருந்த பரீட்சை பாடங்களான பொது சாதாரணப் பரீட்சை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் ஆகியன எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பரீட்சை இடம்பெறும் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்செ.உதயகுமார் தெரிவித்தார். (4)

# தேர்தலுக்குப் போகவேண்டாம் மகிந்தவை எச்சரித்த மைத்திரி

## ஆட்சி மாற்றத்துக்கு முந்திய கதைகளை அவிழ்க்கிறார் எஸ்.பி.

கொழும்பு, ஒக. 29
உரிய காலத்துக்கு முன்னர் அரச தலைவர் தேர்தலை நடத்த வேண்டாம் என்று அப்போது அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன, அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கேட்டுக் கொண்டார் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரச தலைவர் தேர்தலை 2 வருடங்களுக்கு முன்னதாகவே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நடத்துவதற்கு முற்பட்டார். அதற்குத் தற்போதைய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவேமுதலில்எதிர்ப்பை வெளியிட்டார். கடிதம் மூலமாகவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். இது சுதந்திரக் கட்சிக்கு உகந்த காலமல்ல என்று எச்சரித்தார்.



அந்தச் சந்தர்ப்பத்தில் பொது வேட்பாளரும் அல்ல. இறுதியில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால வெளியேறி பொது வேட்பாளராகப் போட்டியிட்டுவெற்றிபெற்றார். அனைத்து ஊடகங்களும் எம்மிடம் இருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் அனைத்துப் பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சுவரொட்டிகளை ஒட்ட பணமும் வழங்கப்பட்டது. பரம்பரையாக எமது கட்சிக்கே வாக்களித்த எந்தக் காலத்திலும் ஐக்கிய தேசிக் கட்சிக்கு வாக்களிக்காதவர்களின் வாரிசுகள் அன்னத்திற்கு வாக்களித்தனர்.

யோசித மற்றும் நாமல் போன்றவர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்திருந்தவர்களே மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். அவர்கள் ஒருவித அச்சத்துடனேயே இருந்தனர். எமக்கு முஸ்லிம் வாக்குகள் சிறிதளவே காணப்பட்டது. எனினும் அவை தொடர்ச்சியாக இருந்தன. அந்தத் தேர்தலில் எமக்கு இருந்த முஸ்லிம்களின் ஆதரவும் இல்லாமல் போனது. சாதாரணமாக முஸ்லிம்கள் 60 வீதமானோரே வாக்களிப்பர். அந்தத் தேர்தலில் 89 சதவீதமானவர்கள் எமக்கு எதிராக வாக்களித்தனர். கோத்தபாய ராஜபக்சவின் ஆசிர்வாதத்துடன் கட்டியெழுப்பப்பட்ட பொது பல சேனாவின் செயற்பாடுகளே அதற்குக் காரணம். தமிழ் வாக்குகள் எமக்கு வழமையாகவே குறைவாகவே கிடைக்கும். எனினும் கடந்த தேர்தலில் வழமையாக எமக்குக் கிடைத்த தமிழ் வாக்குகளும் இல்லாமல் போனது. இவ்வாறுதான் நாம் தோல்வியைச் சந்தித்தோம் - என்றார். (5)

# டிசெம்பர் 9க்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் சாத்தியம்

## தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 29
எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேறாதுபோனால், மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலையும் இதே காலப் பகுதியில் தேர்தல்கள் திணைக்களத்தால் நடத்த முடியும். இவ்வாறு தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டவரைவை சபாநாயகர் கரு ஜெயசூரிய ஒக்ரோபர் மாதத்திற்குள் அங்கீகரித்தால், டிசெம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னதாக தேர்தலை நடத்த முடியும்.



மாகாண சபைத் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கான அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேறும் பட்சத்தில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் மேலும் தாமதமாகும். சில வேளைகளில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேறாது போனால் மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல் அறிவிக்கும் வகையில் ஒக்ரோபர் 2 ஆம் திகதி மூன்று மாகாண சபைகளுக்கும் வேட்பு மனு கோரப்படும் என்றார். (5,31)

# சஜின்வாஸை 4 மணிநேரம் துருவித்துருவி விசாரித்தது எப்.சி.ஐ.டி

கொழும்பு, ஒக. 29
மிகின் லங்கா நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியும், மகிந்த ராஜபக்சவிற்கு நெருங்கிய வருமான சஜின்வாஸ் குணவர்த்தனவிடம், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 4 மணி நேரம் நேற்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மிகின் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகளை எல்.ஓ.எல்.சி. நிறுவனம் வேறு ஒரு தரப்புக்கு விற்பனை செய்ததன் ஊடாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பிலும், கார் தொடர்பாகவும் நேற்றைய தினம்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பான் ஏசியா வங்கியில் வங்கிக்கணக்கொன்றுக்கு பணம் வைப்பிலிடப்பட்ட விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரவிடம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு இன்று விசாரணை செய்யவுள்ளது. இன்று காலை 9.30 மணிக்கு அவரை நிதிக் குற்றப் புலனாயவுப் பிரிவில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது. (5,31)

# சட்டரீதியாக வலுவிழந்துபோனது ராஜிதவுக்கு எதிரான பிரேரணை

## சபாநாயகருக்கு அறிவிப்பு

கொழும்பு, ஒக. 29
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக மகிந்த அணியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்டரீதியாக வலுவிழந்த பிரேரணையாகக் காணப்படுகின்றது என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கடந்த வியாழக்கிழமை ராஜித சேனாரத்னவுக்கு எதிராக 39 பேர் கையொப்பமிட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மகிந்த அணியால் சபாநாயகர் கருஜயசூரியவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அறிவித்துள்ளன. இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிப்போம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

பிரேரணையில் கூறப்பட்டுள்ள 15 முறைப்பாடுகளில் 3 முறைப் பாடுகளுக்கு எதிராக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், ஏனைய சில குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்ட ரீதியான காரணங்கள் இல்லை எனவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சட்டப் பரிசீலனைக்காக வழங்கப்பட்டபோது சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது என அறியமுடிகின்றது. (5)

**வேலையாள்கள் தேவை**
- சமையல் செய்பவர்
- ரொட்டி / Fried Rice போடுபவர்
- Tea போடுபவர்
- அப்பம் போடுபவர்
- உணவு பரிமாறுபவர்
- உணவு பார்சல் கட்டுபவர்

077 465 2860

**பெயர்மாற்றம்**
வரணி - இயற்றாலை பகுதியில் வசிக்கும் **கணபதிப்பிள்ளை** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **கணேஸ்** என மாற்றம் செய்வதோடு இது சம்பந்தமான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடு வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- கணேஸ் -

**வேலைவாய்ப்பு**
Typing ( Designer ), Binding வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
B66, கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம். 021 312 9211, 077 346 7499

**வீடு வாடகைக்கு தேவை**
கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதியதிபருக்கு நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிக்கக் கூடிய வீடு தேவை. எனது பழைய மாணவர்களும், நண்பர்களும் உதவலாம்.
**யாழ்ப்பாணம், கொக்குவில், நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய்** முதலிய இடங்கள் விரும்பத்தக்கது.
R.பாலசுப்பிரமணியம்
BSc, Dip in Ed.
ஓய்வுநிலை பிரதியதிபர் KHC
42/1,இந்துக் கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
TP:- 077 517 8727, 077 242 3400, 077 887 1217

**சேவை**
**K.T.K (PVT)**
ஒப்பந்தம் மற்றும் மணித்தியால அடிப்படையில் காணிகள் துப்புரவு செய்தல் வீதிகள், குளங்கள் புனரமைத்தல் என்பன டோசர் மூலமும் அத்துடன் லொறி ராண்ஸ்போட் வேலையும் செய்துகொடுக்கப்படும்.
**குறிப்பு:** அனுபவம் உள்ள டோசர் - ஒப்பரேற்றர் றைவர் தேவை.
077 402 1748/077 614 4231/077 440 9601

**Yarl Beauty & Language's Skills College**
YBLSC
மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
30% OFF + சாறி பிளவ்ஸ் பயிற்சி இலவசம்
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
SPECIAL OFFER
சனி, ஞாயிறு பிரிவுகள் 03.09.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.09.2017 அன்று 10.00 மணிக்கு
பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

# அரச அலுவலர்களைத் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுத்தமை சு.கவை வீழ்த்தும் சதி

## கவலைப்படுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஓக. 29
"சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சக்தியாக இருக்கும் அரச உத்தியோகத்தர்களை உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் போட்டி யிட முடியாத நிலையை உரு வாக்கியுள்ளமை சுதந்திரக் கட்சியை வலுவிழக்கச் செய்யப் பட்ட சதித்திட்டமாகும்", என்று கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பொது மகிந்த அணி ஒருங்கிணைப்பாளரு மான பிரசன்ன ரணதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.
கனேமுல்லையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:
மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒரே தடவையில் நடத்தும் வகையில் அரசு 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. தேர்தலை 2019ஆம் ஆண்டு வரை பிற்போடவே அரசு 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்துள் ளது. அரசு தேர்தல்களுக்குப் பயந்துள்ளமை இந்த விடயத்தின் ஊடாகத் தெளிவாகின்றது.
சனநாயகம் என்பதை வலியுறுத் தியே அரசு ஆட்சிக்கு வந்தது. சனநாயகத்தில் தேர்தல்கள் இல்லை. இவ்வாறான சனநாய கம் உலகில் எங்கும் இல்லை.
உள்ளூராட்சி சபைகளைக் கலைத்துவிட்டு சுதந்திரக் கட்சியின் காலையும் உடைத்து விட்டே அன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால நாடாளு மன்றத் தேர்தலை நடத்தியி ருந்தார்.
எமது கட்சிக்கு எந்த நாளும் அரச உத்தியோகத்தர்கள் சக்தியாக இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி பணக்காரர்களைத் தேர்தலில் நிறுத்தியபோது சுதந்திரக் கட்சியுடன் இருந்த அரச உத்தி யோகத்தர்களே எமக்கு வெற்றி யைப் பெற்றுக் கொடுத்தனர்.
பண்டாரநாயக்கவின் கொள்கை களைப் பின்பற்றுகின்றோம் என்று கூறும் தற்போதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச உத்தியோகத்தர்களைத் தேர்தலில் போட்டியிடத் தடைவி தித்துள்ளார்.
உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் பெரும்பான் மையினர் மகிந்த ராஜபக்சவு டனே உள்ளனர்.
இந்த நாட்டில் மதிப்பான அரசிய லை மகிந்த அணியினர் மாத்திரமே முன்னெடுக்கின்றனர். மக்களும் எங்களுடனே உள்ளனர்.
தேர்தலில் வெற்றி பெறுவோம் என்று அரசு நினைப்பது வெறும் கனவாகவே இருக்கும் -என் றார். (5)

# பண்டாரநாயக்க கொடுத்ததை ஐதேக பிடுங்கி எடுத்து விட்டது

## வெதும்புகிறார் வாசுதேவ



கொழும்பு, ஓக. 29
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரச அதிகாரிகள் போட்டியிடுவதற் குத் தடைசெய்தன்மூலம் பண்டார நாயக்கவினால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதத்தை ஐக்கிய தேசிய கட்சி தடைசெய்துள்ளது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக் கார தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்த தாவது:
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு விருப்ப மில்லை. எல்லை நிர்ணயப் பணி களைக் கொண்டு வந்து அதனை இழுத்தடித்தார்கள். தேர்தல்கள் கண்காணிக்கும் அமைப்புக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்தன. அதன் பின்னர்தான் சட்டவ ரைவை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்தார்கள்.
நாடாளுமன்ற விவாதத்தில் சட்டவ ரைவில் திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டன. அரச அதிகாரிகள் தேர் தலில் போட்டியிட முடியாது என்ற திருத்தம் உள்ளடக்கப்பட்டது. அரச அதிகாரிகள் தேர்தலில் போட்டியி டும் உரிமையை பண்டாரநாயக் கவே வழங்கியிருந்தார். இதனைப் பறிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்தத் திருத்தம் சட்டவரைவில் முன்னரே இருந்திருந்தால், சமுர்த்தி அதிகாரிகள் நீதிமன்றுக்குச் சென்று இதனைச் சவாலுக்கு உட் படுத்தியிருப்பார்கள். அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கே, குழு நிலை விவாதத்தில் இந்தத் திருத் தம் புகுத்தப்பட்டது -என்றார். (5,31)

# தலைமையை வாழ்த்துவோருக்கே கடந்த காலத்தில் வாழ்வு கிடைத்தது

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 29
மகிந்த ஆட்சிக் காலத்தில் தலைமையை வாழ்த்திப் பாடும் கலைஞர்க ளுக்கு மாத்திரமே அங்கீகாரமும் அனுமதியும் கிடைத்தது. ஏனையோர் முடக்கப்பட்டனர். இவ்வாறு நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
பத்தரமுல்லையில் பண்டித் அமரதேவ இசை ஆசிரமத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மங்கள சமரவீர மேலும் தெரிவித்த தாவது:
இந்த ஆசிரமம் பண்டித் அமரதேவவின் இசைப் பயணத்துக்கு ஆதாரமாக இருக்கும். பண்டித் அமரதேவ சிங்கள மொழியில் மாத் திரம் பாடல்களை பாடியிருந்தாலும் இனவா தம் இல்லாத மக்கள்வாதத்தை முன்னிலைப் படுத்திய பாடல்களை பாடியவர். அவரிடத்தில் என்றுமே இனவாத பண்பு இருந்தது கிடை யாது. அவ்வாறான கலைஞர்கள் உருவாவது அரிதாகும். கலைஞர்களுக்கு தேச எல்லை கிடையாது என்பதற்கு இவர் சிறந்த உதாரண மாக திகழ்ந்தார். அவரை மக்கள் கலைஞர் என்று கூறினால் தவறாகாது.
கடந்த ஒரு தசாப்த காலத்தில் இசை என்பது ஒரு குடும்பத்தை மாத்திரமே மையப்படுத்திய தாக அமைந்திருந்தது. தலைமையை வாழ்த் திப்பாடும் கலைஞர்களுக்கு மாத்திரமே அனு மதி கிடைத்தது. ஏனைய கலைஞர்க ளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லை. அந்த இருள் சூழ்ந்து காணப்பட்ட கலை உலகம் விடுவிக்கப் பட்டுள்ளது.
பல்லின மக்கள் வாழும் எமது நாட் டில் சகவாழ்வு மற் றும் நல்லிணக்கம் என்பவை நீடிப்பதற் கும் இசையே சிறந்த வழியாகும். கலையை வளர்க் கும் பொறுப்பை உணர்ந்து அரசு செயற்படும் என் றார். (5-31)

**கண்ணீர் அஞ்சலி**



வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் கடமையாற்றும்
திருமதி இரவிச்சந்திரன் தவரஞ்சினி
அவர்களின் அன்புத் தந்தை
**இளையவன் பசுபதி**
கடந்த 24.08.2017 வியாழக்கிழமை
இறைபதமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**ஊழியர் நலன்புரி சங்கம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை. (மல்லாகம்)**

**22ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**ஆறுமுகம் கந்தையா**
(இளைப்பாறிய தபாலதிபர் - கோப்பாய்)
தோற்றம்
18.04.1907
மறைவு
02.09.1995
திதி: ஆவணிமாத பூர்வ பட்ஷ அட்டமி
29.08.2017 செவ்வாய்க்கிழமை



எம் அருமை அப்பாவே! இருபத்தி இரண்டு ஆண்டுகள் கடந்தாலும் எங்களது இதயத்தில் உங்கள் நினைவை நிறுத்தி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கைதடி தெற்கு,
கைதடி.
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
க.குலராசன் (மகன்)- ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
28 . 02 . 1952



மறைவு
02 . 09 . 2014

**திருமதி சிவனேஸ்வரி (பேபி) ஜெயரட்ணம்**
எம் குடும்பத்தின் குலவிளக்கே! உங்களை
இழந்த துன்பமும் துயரமும் எம் மனதிலிருந்து
இன்னும் மறையவில்லை! மண்ணிலிருந்து
நீங்கள் மறைந்தாலும் எங்கள் நினைவில் என்றும்
நிறைந்து வாழ்கின்றீர்கள்!

ஒஸ்காலேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
உங்கள் பிரிவால் வாடும்,
உங்களை நினைவுகூரும்
கணவர், பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆலய பெருந்திருவிழாவின் தீர்த்த
உற்சவ உபயகாரர்களில் ஒருவராகிய
**திருமதி திலகவதி இராசேந்திரம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மாசாந்தியடைய
கற்பக விநாயகரின் பொற்பாதங்களைச்
சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.
பரிபாலனசபையினர்.
உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்
உரும்பிராய்.

**கண்ணீர் அஞ்சலி**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும்
**கதிரவேற்பிள்ளை கணநாதன்** அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **தையல்நாயகி கதிரவேற்பிள்ளை**
கடந்த 2017.08.27 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிசங்கம்.
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)**

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



**அமரர் லோகநாதன் ஜெகநாதன்**
உள்ளத்தில் மகிழ்வில்லை இன்று நீயில்லை !
செல்லமாய் அழைக்க சொந்தமே நீயில்லை
நிம்மதியாய் நீயுறங்கு
நினைவுகள் என்றும் சாகாது !
கடந்த (31.07.2017) சிவபதமடைந்த அமரர் லோகநாதன் ஜெகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (30.08.2017) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
662, 13 ஆம் யூனிற், தருமபுரம் கிழக்கு,
கிளிநொச்சி.
குடும்பத்தினர்.

### இரசாயனவியல் வினாத்தாள் விவகாரம்:

# தேடப்பட்ட முக்கிய சூத்திரதாரியான ஆசிரியர் நீதிமன்றில் நேற்றுச் சரண்

கொழும்பு, ஓக. 29

உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்துக்கான வினாத்தாளை பரீட்சை முடிவடைவதற்கு முன்னரே வெளியிட்ட சம்பவத்தில் தேடப்பட்டு வந்த கம்பகா மாவட்டத்தின் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர், சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்துள்ளார். அவரை நாளை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, கம்பகா நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 19ஆம் திகதி கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்தின் பகுதி இரண்டுக்கான பரீட்சை நடைபெற்றது. பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கம்பகாவில், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் துண்டறிக்கையைப் பல இடங்களில் ஒட்டியிருந்தார். அந்தத் துண்டறிக்கையில், தனது கல்வி நிலையத்தில் முன்னரே எதிர்வுகூறப்பட்ட 3 வினாக்கள் பரீட்சை வினாத்தாளில் உள்ளது. அத்துடன் அந்த வினாக்களை அப்படியே துண்டறிக்கையிலும் குறிப்பிட்டிருந்தார்.

உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வந்த மாணவர்கள் இந்தத் துண்டறிக்கையைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். உடனடியாகவே பெற்றோர்கள், பரீட்சைகள் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்தனர். பரீட்சைகள் ஆணையாளர், பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றார். பொலிஸ் திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுத்தது.

துண்டறிக்கை வெளியிட்ட ஆசிரியர் தலைமறைவாகியிருந்தார். அவரது தந்தையும், சகோதரரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். துண்டறிக்கை வெளியிட்ட அச்சக உரிமையாளர் அதனைத் தொடர்ந்து கைதானார். இவர்கள் மூவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. விடயம் பொலிஸாரிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.

மூவரிடமும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், பொலிஸ் திணைக்களத்தின் மருத்துவப் பிரிவில் கடமையாற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மகன் கைது செய்யப்பட்டார். அவர் தனது வாக்குமூலத்தில் பொலிஸாருக்கு பல விடயங்களைக் குறிப் பிட்டிருந்தார். பரீட்சையின்போது வினாத்தாளை 'ஸ்கான்' செய்யும் நவீன இலத்திரனியல் கருவியையும், காதில் மாட்டக்கூடிய சிறிய கருவியையும் பரீட்சை மண்டபத்துக்கு எடுத்துச் சென்றதாகவும், இரசாயனவியல் வினாத்தாள் வழங்கப்பட்டதும் அதனை 'ஸ்கான்' செய்து 'வட்ஸ்அப்பில்' கம்பாக ஆசிரியருக்கு அனுப்பியதாகவும் தெரிவித்திருந்தார். அவர் வழங்கிய பதில்களைக் கேட்டு விடை எழுதியதாகவும், இதற்காக கம்பகா தனியார் கல்வி நிறுவன ஆசிரியருக்கு 10 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாணவன், அவனது தந்தை உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே, தேடப்பட்டு வந்த முக்கிய சூத்திரதாரியான ஆசிரியர் நீதிமன்றில் சரணடைந்துள்ளார். (5-31)

### சூடுபிடிக்கின்றது 20ஆவது திருத்த விவகாரம்:

# முதலமைச்சர்களுடன் மைத்திரி அவசர சந்திப்பு



கொழும்பு, ஓக. 29

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கான ஆதரவு வழங்கும் விடயத்தில் மாகாண சபைகள் சர்ச்சையை ஏற்படுத்திவரும் நிலையில், அனைத்து மாகாண சபை முதலமைச்சர்களுடனும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் அவசரமானதும், முக்கியத்துவமானதுமான சந்திப்பொன்றை நடத்தியிருக்கிறார்.

கொழும்பில் உள்ள அரச தலைவர் மாளிகையில் நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை. வடக்கு ஆளுநர் உட்பட அனைத்து மாகாண முதலமைச்சர்களும், ஆளுநர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கான மாகாண சபையினது அங்கீகாரத்தின் அவசியத்தை இதன்போது வலியுறுத்திய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு இதன் முக்கியத்துவம் குறித்து விலாவாரியாகச் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்களைச் சீராக செய்வதற்கு ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதற்கும், புதிய அரசமைப்பு ஏற்பாடுகளைச் செய்யவும் இது முதற்படி என்று தெரிவித்துள்ள அரச தலைவர், மாகாண சபைகளின் ஆயுள்காலம் நீடிக்கப்படும் போதே அதன் நிர்வாகம் ஆளுநரின் கீழ் அல்லாமல் முதலமைச்சரின் கீழ் இருக்கும் எனவும் எடுத்துக் கூறியுள்ளார்.

பெரும்பாலான முதலமைச்சர்கள் இந்தச் சந்திப்பின் போது தங்களுக்குள்ள சந்தேகங்களை விலாவாரியாகக் கேட்டறிந்துகொண்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

ஊவா மாகாண சபையில் ஏற்பட்ட பின்னடைவு குறித்து இந்தச் சந்திப்பின் போது விரிவாகப் பேசப்பட்டுள்ளது. 20ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்தும் அதன் தாற்பரியங்கள் குறித்தும் போதிய விளக்கம் இன்மையே இதன் தோல்விக்கான காரணம் என்று ஊவா மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (5)

# கட்சியை விட்டுச் சென்றவர்கள் மைத்திரியுடன் கைகோர்க்கலாம்

### மகிந்த அமரவீர அழைப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மகிந்த அணியுடன் இணைந்து வேறு கட்சி அமைக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்களுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கட்சி ஆதரவாளர்கள் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பொறுமை காத்து வருகின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்திக்கொண்டு மற்றொரு புதிய கட்சியை உருவாக்குவதற்கு முனையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக தயவு தாட்சயணியமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

விஜயதாச ராஜபக்சவை அமைச்சுப் பதவியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலக்கியுள்ளது. இதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அது ஐக்கிய தேசியக் கட்சியின் உள்வீட்டு விவகாரமாகும்.

விஜயதாச ராஜபக்ச, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையிலும் அங்கம் வகித்தார். அந்தப் பதவியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைந்து செயற்படுவதில் தவறில்லை - என்றார். (5)

## மரண அறிவித்தல்



### இரத்தினம் நடராஜா

வைரவ கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல 28/4 ரவுப்பாக்கம் லேன் உக்குளாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் நடராஜா (ராசா) 28.08.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் மாறேட் ஆகியோரின் மருமகனும் வசந்தாதேவி (ஆசிரியை - வ/இக்பால் ம.வி) அவர்களின் அன்புக் கணவரும் நிரோஷன்(Software Engineer Colombo), நிரோஷிகா (வலயக்கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதி, சியாமளா, தேவி, நிர்மலாதேவி (இந்தியா), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி லைசா தவராஜ்

**பிறப்பு** 23.02.1964
**இறப்பு** 22.08.2017



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லைசா தவராஜ் 22.08.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - துரைஅம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், நாகமுத்து - பரிமளம் தம்பதிகளின் அன்பு மகளும், தவராஜின் அன்பு மனைவியும், விஜயகாந்தன் (சிங்கப்பூர்), தேகாந்தன் (ஜேர்மனி), செல்வகாந்தன் (சுவிஸ்), லீதா (பிரான்ஸ்), வேணுகாந்தன் (நோர்வே), ரஜனிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாந்தி (சிங்கப்பூர்), செல்வமலர் (ஜேர்மனி), உமாதேவி (சுவிஸ்), சத்தியசீலன் (பிரான்ஸ்), அகலியா (நோர்வே), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**"லைசா இல்லம்"**
**வல்லை வீதி,**
**அச்சுவேலி வடக்கு.**
**077 906 1622**
**077 199 9676**

# 20ஆவது திருத்தச் சட்டவரைவால் ரணகளமானது மேல் மாகாண சபை

## துண்டுதுண்டாக உடைந்தது செங்கோல்

கொழும்பு, ஓக. 29
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் மேல்மாகாண சபையில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் மகிந்த அணி சட்டவரைவுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டமையால் சபை ரணகளமானதுடன், செங்கோலும் துண்டு துண்டாக உடைந்தது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு அனைத்து மாகாண சபைகளினதும் கருத்துக்களைக் கேட்டறிவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண சபையில் சட்டவரைவு நிறைவேற்ற ப்பட்டுள்ளதுடன், ஊவா மாகாண சபையில் அது தோற்கடிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையில் எதிர்வரும் 4ஆம் திகதி சட்டவரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனை எதிர்ப்போம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

மேல்மாகாண சபையில் நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்டவரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக உரையாற்றிய முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, விவாதத்தை இன்று (நேற்று) நடத்தி வாக்கெடுப்பை வேறொரு நாளில் நடத்துவோம் என்று கூறினார்.

இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த மகிந்த அணி, சட்டவரைவின் மீது விவாதமோ வாக்கெடுப்போ நடத்தப்படுவதற்கு முன்னர் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடைபெறவேண்டும் என்று கோசம் எழுப்பி செங்கோலையும் கைப்பற்றி வைத்திருந்தனர்.

கடும் சீற்றமடைந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் மகிந்த அணியினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட சொற்போருக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் மகிந்த அணியிடமிருந்த செங்கோலை மீட்டெடுக்க முயற்சித்துள்ளனர். இதன் காரணமாக செங்கோல் துண்டு துண்டாக உடைந்தது. பின்னர் செங்கோல் ஒட்டி வைக்கப்பட்டு சபை மீண்டும் கூடியது.

முதலமைச்சர் இசுறு தேவப்பிரியவால் கொண்டுவரப்பட்ட தீர்மானமொன்று 51 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்துக்கு சு.கவும், ஐ.தே.கவும் ஆதரவளித்திருந்ததுடன், ஜே.வி.பியும், பொது எதிரணியும் எதிர்த்து வாக்களித்தன. சபை நடவடிக்கைகள் முடிந்து வெளியில் வந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், எதிர்வரும் 4ஆம் திகதி 20ஆவது திருத்தச் சட்டவரைவு மீது விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெறும்' என்று தெரிவித்தனர். (5-31)

# இளைஞர்களின் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டார்கள்

## அரசியல் கட்சிகள் மீது கபே அமைப்பு குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 29
இளைஞர்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீட்டை புதிய உள்ளூராட்சி சட்டத்தின் ஊடாக சகல கட்சிகளும் இல்லாமல் செய்துள்ளன. இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை ஏன் எல்லோரும் எதிர்க்கின்றனர். இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், கபே அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிறைவேற்றப்பட்ட புதிய உள்ளூராட்சி சட்டத்தில் இளைஞர்களுக்கு கட்டாயம் 30 சதவீதம் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற சரத்து நீக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் வேண்டுமென்றே நீக்கியுள்ளன. இது பெரும் அநீதி. உள்ளூராட்சி மன்ற சட்டவரைவு விவாதத்தின் போது உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு செய்வதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் பேசின. இளைஞர்களின் அரசியல் பிரவேசத்தை ஏன் கட்சிகள் எதிர்க்கின்றன.

1992ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர்களின் அரசியல் பிரவேசம் 40 வீதமாக நிர்ணயிக்கப்பட்டது. இதன் ஊடாக வந்தவர்களே தற்போது முதலமைச்சர்களாகவும் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். புதிய சட்டத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் சூட்சுமமான முறையில் இல்லாமல் செய்துள்ளன-என்றார். (5-31)

# தமிழர் கொண்டாட்டத்தில் கனடாவின் தலைமகன்

கனடாத் தமிழர் பேரவையால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் 'தமிழர் தெருவிழா' 3 ஆவது ஆண்டாகவும் கோலாகலமாக இந்த ஆண்டு நடைபெற்று வருகின்றது. இதில் கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்ரின் ரூடியோ கலந்து கொண்டு, இளநீரை வாங்கி உற்சாகமாகப் பருகினார். அருகில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியும் உள்ளார். (5)



# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 29
அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய அரச மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் இதனைப் பயன்படுத்தி நோயாளிகளைச் சூறையாடி வருகின்றன.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை செய்யப்படுவதில்லை. அருகில் இருக்கும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களில் பரிசோதனை செய்யுமாறு நோயாளிகள் பணிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார அமைச்சர் பரப்புரை செய்வதைப் போன்று சிறந்த சேவை நாட்டில் கிடையாது என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. (5)



# தகர்த்தெறியப்பட்டது சு.கவின் ஆட்சியல்ல ராஜபக்ச ஆட்சியே

கொழும்பு, ஓக. 29
கடந்த அரச தலைவர் தேர்தலின்போது தகர்த்தெறிந்து தோற்கடிக்கப்பட்டது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி அல்ல. ராஜபக்சாக்களின் ஆட்சியே வீழ்த்தப்பட்டது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மாவனெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்துவதற்காகவே செயற்பட்டு வருகின்றார். கடந்த அரச தலைவர் தேர்தலில் அவர்தான் தோற்றிருந்தார். சிறி லங்கா சுதந்திரக் கட்சி தோற்கவில்லை' என்று சந்திரிகா குறிப்பிட்டார். (5)

## மாணவி கொலை

# மகனைத் தூக்கிலிடுமாறு பொலிஸிடம் கோரிய தாய்

கொழும்பு, ஓக. 29
பாடசாலை மாணவியைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள தனது மகனை தூக்கிலிடுமாறு சந்தேகநபரின் தாய் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்தேகநபரின் தாய் குசுமாவதி, கலகமுவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தை கொலை செய்யப்பட்ட மாணவியின் சடலத்துக்கு முன்னால் வாசிக்குமாறும் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:
இவ்வாறான ஒரு குற்றவாளிக்கு தாயாக இருப்பதையிட்டு மனவேதனை அடைகின்றேன். உயிரிழந்த மாணவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கின்றேன். இந்தக் குற்றத்தை புரிந்த எனது மகனை தூக்கிலிட்டுக் கொன்றாலும் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்கமுவ, கிரிபாவ அசோகபுர பகுதியில் 17 வயதான பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் 36 வயதான சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5)

# கூட்டு அரசுக்கு 'குட்பை' சொல்லும் காலம் நெருங்குகிறது

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் ஜோன் செனவிரட்ன

கொழும்பு, ஓக. 29
கூட்டு அரசை விட்டு விலக வேண்டிய காலம் வந்து விட்டதாகத் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

கூட்டு அரசின் ஆயுள் காலம் 2020ஆம் ஆண்டு வரை நீடிக்கப்படும் என்றும் அதற்கான புதிய ஒப்பந்தம் டிசெம்பர் மாதம் கைச்சாத்திடப்படும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும் பிரதி அமைச்சருமான அஜித் பீ.பெரேரா தெரிவித்திருந்த நிலையில், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த செனவிரட்ன குழப்பமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

'அரசை விட்டு விலக வேண்டிய காலம் வந்து விட்டது. டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் ஆளும் கட்சியில் இணைந்திருக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார். இந்தக் கோரிக்கை குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம். 31ஆம் திகதி வரையில் நீடித்திருப்பதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி ஆராய்ந்து அரசில் தொடர்ந்தும் நீடிப்பதா, இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும்' என்று ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (5)



# மகிந்தவை போன்று நாங்கள் இல்லை

கொழும்பு, ஓக. 29
மகிந்த அரசைப் போன்று அல்லாது தற்போதைய அரசு அனைத்து தரப்பினரும் பயனடையும் வகையில் செயற்பட்டுவருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

மாவனெல்லையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடனுக்கு திருமணம் முடித்து மனைவியையும் விவாகரத்து செய்தது போன்ற நிலையிலேயே அரசு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் பொறுப்பேற்கப்பட்டது. அத்தகைய நெருக்கடி நிலையில், அரசு நாட்டுக்காக பெரும் சேவையை செய்துள்ளது. தற்போது நெருக்கடி நிலை மாறி அபிவிருத்தியை நோக்கிய பயணம் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

விரைவில் 10 லட்சம் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் - என்றார். (5)

# பழிவாங்கலுக்கு தயாராக இருங்கள்

## கூட்டு அரசிலுள்ளவர்களுக்கு மகிந்தவின் எச்சரிக்கை இது



கொழும்பு, ஓக. 29

விஜயதாச பழிவாங்கப்பட்டு விட்டார். அவரைப் போன்று கூட்டு அரசில் உள்ள மேலும் பலர் பழிவாங்கப்படலாம். இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னையும் எமது தரப்பையும் தண்டிக்கவே புதிய நீதி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எமக்கு எதிராகச் செயற்படவில்லை, சட்டதரணிகள் சங்கத்தின் சுயாதீனத்தில் தலையிடவில்லை, நீதிமன்றத்தை கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்களுக்காகத்தான் நீதி அமைச்சராக இருந்த விஜயதாசவை நீக்கினார்கள். புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் தலதா அத்துகோரள எவ்வாறு செயற்படப்போகின்றார் என்பது குறித்து நாம் வேடிக்கை பார்த்து வருகின்றோம். இவரை நியமித்துள்ளமை எம்மை தண்டிக்கவென்பது எமக்கு தெரியும். அவர் எவ்வாறு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகின்றார் என்பது குறித்து நாம் அவதானித்து வருகின்றோம்.

எம்மைக் குறைகூறுவதை விடுத்தால் இந்த அரசு வேறு எதையும் இதுவரை செய்ததில்லை. எல்லாச் செயற்பாடுகளுக்கும் எனது பெயர் இந்த அரசுக்குத் தேவைப்படுகின்றது. எம்முடன் இருந்து அரசியல் செய்தவர்கள் இன்று மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

நான் எனது அரசில் ஊழல் மோசடிகளைச் செய்தேன் என்றால் எனது ஆட்சியில் நிரந்தரமாக அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள் முதலில் அனைத்திற்கும் பொறுப்புக் கூறவேண்டும். இன்று கூட்டு அரசில் இருக்கும் அதிகமான நபர்களை முதலில் தண்டிக்க வேண்டும். மாறாக அவர்கள் தப்பித்துகொள்ள எனது பெயரை பயன்படுத்துவது வேடிக்கையான விடயமாகும் - என்றார். (5)

# தேர்தலுக்கு முன்னர்

# மகிந்த அணியின் 10பேரை அடைக்கத் திட்டம்

## புதுக்கதை கூறுகிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஓக. 29

நீதியமைச்சர் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தத்தை பிரயோகித்து குற்றச்சாட்டுக்களை வலுப்படுத்தி மகிந்த அணியின் 10 பேரை சிறையில் அடைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கேகாலை தபாலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு



கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசின் அமைச்சர்களின் வழக்குகளை பின்தள்ளுவதற்கும், மகிந்த அணியின் உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகளை வலுப்படுத்துவதற்குமாகவே தலதா அத்துக்கோரள நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னதாக மகிந்த அணியைச் சேர்ந்த 10 பேரை சிறையில் தள்ளுவதற்கான பொறுப்பு புதிய நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்காகவே தலதா அத்துக்கோரள நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டார் என்றும் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார். (5)

# கேணல் ராயூவின் நினைவுநாள் கடைப்பிடிப்பு

கொழும்பு, ஓக. 29

தமிழீழ விடுதலைப் பயணத்திற்கு பெரும் பங்காற்றிய தளபதிகளில் ஒருவரான கேணல் ராயூவின் 15ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு பிரான்'ஸ் லாச்சப்பல் சோதியா கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஈகச்சுடரினை பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் துணைவியார் ஏற்றி வைத்தார். மலர் வணக்கத்தை கப்டன் ரூபனின் சகோதரி தொடக்கி வைத்தார்.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பரப்புரைப் பொறுப்பாளர் சத்தியதாசன், பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் துணைவியார் ஆகியோர் கேணல் ராயூ தொடர்பான நினைவுரைகளை ஆற்றினர்.



இந்த நிகழ்வில், மாவீரர் நாள் 2017 இற்கான பங்களிப்பு அட்டையும் வெளியிட்டுவைக்கப்பட்டது. (5)

# நாயைக் குணமாக்க 80ஆயிரம் ரூபா செலவிட்ட இளைஞன்

கொழும்பு, ஓக. 29

நோயினால் பாதிக்கப்பட்ட தெரு நாயைக் காப்பாற்றுவதற்கு இளைஞன் ஒருவன் 80 ஆயிரம் ரூபா பணம் செலவுசெய்த சம்பவம் குருநாகலில் இடம்பெற்றது.

நாயின் வாய்ப் பகுதியில் ஏற்பட்ட நோய்ப் பாதிப்பைக் குணப்படுத்த இளைஞன், தனது நண்பர்களுடன் இணைந்து 80 ஆயிரம் செலவு செய்துள்ளார்.

இது தொடர்பில் நாயைக் காப்பாற்றிய இளைஞன் தனது முகநூலில், நாயை சிகிச்சைக்காக கண்டிக்கு கொண்டு சென்றபோது மருத்துவர்கள் விடுமுறை என்று கூறினார்கள். குருநாகலில் தற்போது அதனைக் காப்பாற்றுவது கடினம் என்று கூறினார்கள். கொழும்பில் கொலை செய்வதற்குத் தடுப்பூசி வழங்குவதாகக் கூறினார் கள். தெரு நாய்க்கு; 80 ஆயிரம் ரூபா செலவிட உனக்கென்ன பைத்தியமா என்று சிலர் கேட்டார்கள். பலரின் முரண்பாடு களுக்கு மத்தியில் அந்த நாயின் வாழ்க்கையை மாற்றியுள்ளோம். சிறிய உயிரை காப்பாற்ற உதவிய அனைவருக்கும் நன்றி என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

# விபத்து உயிரிழப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 29

வீதி விபத்துக்களால் கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 824 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு முதல் 6 மாத காலப் பகுதியினுள் அந்த எண்ணிக்கை அதிகரித்து ஆயிரத்து 719 பேராகப் பதிவாகியுள்ளது.

கடந்த 6 மாத காலப்பகுதியில் ஆயிரத்து 561பேர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரத்து 59பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

முச்சக்கரவண்டி விபத்துக்களால் 2016ஆம் ஆண்டு 372 பேர் உயிரிழந்த நிலையில் இந்த ஆண்டு முதல் 6 மாத காலப் பகுதியில் 186 பேர் முச்சக்கர வண்டி விபத்துக்களால் சாவடைந்துள்ளனர். (5)

## நெருக்கமான பேச்சு



பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, ரஷ்யாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து நேற்று முன்தினம் பேச்சு நடத்தியுள்ளார். இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

# சிறைச்சாலை சீருடையில் மாற்றம்

கொழும்பு, ஓக. 29

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையில் மாற்றம் செய்வது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக, சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துசார உபுல்தெனிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடைகளை மாற்றுவது குறித்து ஆராய்வதற்காக சகல உத்தியோகத்தர்களிடமும் வினாக்கொத்து வழங்கப்பட்டு கருத்துக்கள் கேட்டறியப்படவுள்ளன. எதிர்வரும் வாரங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையில் மாற்றம் செய்வதா, இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது - என்றார். (5)

# குளவிகளால் கொட்டு வாங்கிய வான்படையினர்

தியதலாவை வான்படைப் பயிற்சி முகாமில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வான்படையினர் குளவிக்கொட்டுக்கு இலக்கான சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

காயமுற்ற வீரர்கள் தியதலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளவிக்கொட்டுக் காரணமாக அதிகளவான விசம் உடம்பில் ஏறியுள்ள இரண்டு வீரர்களைத் தவிர மற்றைய அனைவரும் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (5)

# வடக்கு வாள்வெட்டு கட்டுப்பாட்டுக்குள்

## இறுமாப்புடன் பூஜித் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 29

வடக்கில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும், அதற்காக நேரடியாக தலையிட்டதாகவும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது வருட நிறைவை முன்னிட்டு பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் அண்மைக்காலமாக சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. அடிக்கடி வாள்வெட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றன. இவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நான் நேரடியாக தலையிட்டேன். நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்று மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்தேன். அதன்பின்னர் சிறப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஆவா குழு உள்ளிட்ட அனைத்துக் குழுவினரையும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது.



குற்றமிழைத்தோர் அனைவரும் இன்று கைதாகியிருக்கின்றனர் - என்றார். (5)



# அமெரிக்காவை எதிர்கொள்ள தயாராகிறது வெனிசுலா

"வெனிசுலாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ள நிலையில், அமெரிக்காவைச் சமாளிப்பதற்கு வெனிசுலாவில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரியவருகிறது.

மதுரோவின் ஆட்சியில் வெனிசுலா எதிர்பாராப் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இப்படியே சென்றால் அந்த நாடு சுமார் 700 சதவீதம் பணவீக்கத்தைச் சந்திக்கும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது. இதனால் ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தி அந்த நாட்டு இளைஞர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

சுமார் 4 மாதங்களுக்கும் அதிகமாக தலைநகர் கரஸ்கஸ் உள்ளிட்ட பல இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்துகொண்டே உள்ளன. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் 150 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் மதுரோவுக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளது. நிலமை கட்டுக்குள் அடங்காமல் சென்றதை அடுத்தே இந்த விடயத்தில் களமிறங்க அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பாக அதிபர் ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில், "வெனிசுலா நாட்டு மக்கள் மிகவும் சித்ரவதைக்குள்ளாகி மடிகின்றனர். வெனிசுலா விவகாரத்தில் இராணுவ நடவடிக்கை உள்பட பல விருப்ப தேர்வுகள் பரிசீலணையில் உள்ளன" என்று குறிப்பிட்டிருந்தார். இந்த எச்சரிக்கையை அடுத்தே அமெரிக்காவை எதிர்கொள்ளத்தக்க வகையில் வெளிசுலாவில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

# சசிகலா, தினகரன் இரு…
# நீக்கித் தீர்மானம் நிறை…

அ.தி.மு. கழகத்தில் இருந்து தினகரன், சசிகலா இருவரையும் நீக்கிவைத்து விட்டு ஆட்சியைத் தொடர்வதற்கு நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஓ.பன்னீர்செல்வமும், எடப்பாடி பழனிச்சாமியும் இணைந்ததன் பின்னர் டி.டி.வி.தினகரன் முழுமையாகத் தனிமைப்படுத்தப்பட்டார். அவரின் பக்கம் படிப்படியாக சில சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றனர்.

தற்போது 20 சட்டமன்ற உறுப்பினர்கள் தினகரனின் பக்கமாகச் சென்றுள்ளனர். இதனால் எடப்பாடி தலைமையிலான அ.தி.மு. கழகத்தின் அரசு கவிழ்ந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இது தொடர்பாக ஆலோசனை செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் களின் பொதுக்கூட்டம் அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வைத்தே தினகரன், சசிகலா இருவரையும் நீக்கிவைத்துவிட்டு ஆட்சியமைக்க தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக விரைவில் பொதுக்குழு கூட்டப்படவுள்ளது. தினகரகன், சசிகலா இருவரையும் நீக்குவது மட்டுமல்லாமல் சசிகலா, தினகரன் இருவரும் இதுவரை அறிவித்த உத்தரவுகள் எதையும் செல்லாது செய்வது, அ.தி. மு. கழகத்துக்குச் சொந்தமான ஊடகங்களைக்கையகப் படுத்துவது உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ம)



# இந்தியாவுக்கே உணவளித்தோமே
## தமிழக விவசாயியின் உருக்கமான காணொலி



டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகளில் ஒருவர், "தமிழகத்துக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் உணவளித்தோமே, ஏன் எம்மைப் பார்க்க மறுக்கிறீர்கள்?" என்று தெரிவித்து ஒரு காணொலியை வெளியிட்டுள்ளார். இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் தற்போது மிகவும் வைரலாகப் பரவி வருகிறது.

பருவ மழை பொய்த்ததால், விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்கத் தனி வாரியம் அமைக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனினும் அவர்களின் போராட்டம் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியினாலும் அல்லது உயர்மட்டங்கள் எவராலும் கண்டுகொள்ளப்படவில்லை. தமிழகத்தில்கூட அவர்களின் கோரிக்கை கள் செவிசாய்க்கப் படவில்லை. இந்த நிலையில் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள தமிழக விவசாயி ஒருவர் வெளியிட்டுள்ள காணொலியில், "தமிழக விவசாயிகளா கிய நாம், தமிழகத்துக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் உணவளித்தோமே ஏன் எமது போராட்டத்தைக் கண்டுகொள்ளாது உள்ளீர்கள். வெயிலில் காய்ந்து, குளிரில் நடுங்கிக் கொண்டு, நடுவீதியில் படுத்துறங்கிப் போராட்டம் நடத்தும் எமது குரலுக்கு செவிசாய்க்காதது ஏன்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

EDNA

வெற்றிகரமான வியாபாரமொன்றில் பங்குதாரராவதற்கு இன்றே எங்களுடன் இணையுங்கள்

எட்னா இல்லத்தின் மற்றுமொரு அறிமுகம்
Cool & Cool குளிர்பான வகைகள்




மேற்கூறப்பட்ட அறிமுக பொருட்களின் நிறுவனத்துடன் இணைந்து விநியோக முகவராக விற்பனை பங்காளராவதற்கு இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார்.**

உங்களிடம் இருக்கவேண்டிய தகைமைகள்

- ★ வங்கிப் பிணை
- ★ தேவையான அளவு களஞ்சிய மற்றும் காரியாலய இட வசதிகள் (குறைந்தது 900 சதுர அடி கொண்ட கட்டிடம்)
- ★ மீள் விநியோக செயற்பாடுகளுக்காக 10½ அடி அலுமினிய பொடி கொண்ட லொறி வாகனம்
- ★ பயிற்சி பெற்ற அலுவலக உத்தியோகத்தர்கள் (Cash Collector & Clerk)
- ★ விநியோகித்தல் பிரிவு தொடர்பிலான முன் அனுபவம்

உங்களது விண்ணப்பப் படிவங்களை இவ்விளம்பரம் பிரசுரமாகிய 07 நாட்களுக்குள் எங்களது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**உங்களுடைய ஆகக் குறைந்த மாதாந்த வருமானம் 260,000 ரூபா ஆகும்.**

Cool&Cool
விற்பனை முகாமையாளர்
ரிலையன்ஸ் பெவரேஜஸ் (தனியார்) நிறுவனம்
இல. 257, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14.
தொலைபேசி இல.: 070 300 1111
பெக்ஸ் : 012 498 232 / 012 472 628 - 629

உங்களது விண்ணப்பங்களை reliance@edna.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



# சிரியா – லெபனான் எல்லையில் தாக்குதல்கள் நிறுத்தம்

டமஸ்கஸ், ஓக. 29

சிரியாமற்றும்லெபனான்எல்லையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த பல இடங்களைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்றுவந்த கடும் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

சிரியாவின் ரக்கா நகரம் உள்ளிட்ட சில நகரங்கள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இன்றும் உள்ளன. இந்த இடங்களை மீட்பதற்கு சிரிய இராணுவம் கடும் போர் புரிந்து வருகிறது. ரஷ்யாவும் களத்தில் உள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்கு எதிராக ஹிஸ்புல்லா அமைப்பினரும் போராடி வருகின்றனர். அவர்கள் லெபனான், சிரிய எல்லையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த இடங்களை மீண்டும் கைப்பற்றியுள்ளனர். எஞ்சியிருக்கும் இடங்களைக் கைப்பற்றக் கடும் போர் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் தாக்குதல்கள் நேற்றுமுன்தினம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள மக்கள் தப்பித்து வர வழியிருந்தால் அதற்கான வாய்ப்பாக இந்தப் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்த முடியும் என்பதற்காகவே இந்தத் தற்காலிகப் போர் நிறுத்தம் என்று ஹிஸ்புல்லா அமைப்பினர் அறிவித்துள்ளர்.

லெபனானின் 30 சிப்பாய்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடத்திச் சென்றுள்ளது. அவர்களில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 14 சிப்பாய்களை விடுவிக்க வேண்டுமாயின் தமக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று ஐ.எஸ். விதித்த நிபந்தனையின் அடிப்படையிலேயே தாக்குதல் நிறுத்தப்பட்டது என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தாக்குதல் நிறுத்தப்பட்டமைக்கு இரு வேறுபட்ட காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், தாக்குதல் நிறுத்தப்பட் டுள்ளது என்பது மட்டும் உண்மைத் தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது. (ம)

நவரையும்
றவேற்றம்






## தாய்லாந்துத் தலைமை அமைச்சர் பிரிட்டனில் அரசியல் தஞ்சமடைவு

ஊழல் வழக்கில் சிக்கியுள்ள தாய்லாந்து முன்னாள் தலைமை அமைச்சர் யிங்லக் சினவத்ரா, பிரிட்டனில் அரசியல் தஞ்சமடைந்துள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலையில் தாய்லாந்துத் தலைமை அமைச்சராக யிங்லக் சினவத்ரா பதவியேற்றார். ஊழல் விவகாரங்கள் தொடர்பாக அவருக்கு எதிராகக் கடந்த 2013ஆம் ஆண்டில் போராட்டங்கள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டு மே மாதம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

"யிங்லக் மீது பல்வேறு ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன. அவரது ஆட்சியின்போது விவசாயிகளிடம் இருந்து முறைகேடாக அரிசி கொள்முதல் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் யிங்லக் குற்றவாளி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். நீதிமன்றில் அவர் முன்னிலையாகாததால் அவரைக் கைதுசெய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் அரசியல் தஞ்சம்கோரி பிரிட்டனுக்குச் சென்றுள்ளார்" என்று தெரியவருகிறது. (ம)



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் கடும் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு கடும் மழையும் பெய்து வருகிறது. பல இடங்கள் வெள்ளக்காடாகியுள்ளன. மீட் புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெக்சாஸ் பேரழிவைச் சந்தித்த மாநிலம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அவர் இந்த வாரம் டெக்சாஸைப் பார்வையிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## முடிவுக்கு வருகிறது டோக்லாம் பதற்றம்

புதுடெல்லி, ஒக. 29

இந்தியா - பூட்டான் - சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இந்தப் பகுதியில் உள்ள டோக்லாம் என்ற இடம் தமக்குத் தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன.

இந்த விவகாரத்தில் இந்தியா, சீனா நாடுகளிடையே மோதல் உச்சம் தொட்டிருந்த நிலையில் குறித்த பகுதியில் முகாமிட்டிருந்த தமது சிப்பாய்களை திரும்பப்பெற இருதரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றிவிட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதையடுத்து ஏராளமான சிப்பாய்களை அங்கு குவித்தது இந்தியா. இதையடுத்து சீனாவும் ஏராளமான சிப்பாய்களை அங்குநிறுத்தியது. இந்தப்பின்னணியிலேயே டோக்லாமில் பதற்றம் உச்சம்தொட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)






உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பாதிக்கப்பட்டவர்களின் நியாயபூர்வமான கரிசனைகள் அங்கீகரிக்கப்படுவது அவசியம்

தசாப்த காலங்களாக போரால் பெரும் மனக்காயங்களைச் சுமந்து வாழும் மக்களின் காயங்களை ஆற்றுவதற்காக அமைக்கப்படும் பொறிமுறை எதுவென்றாலும், அது பாதிக்கப்பட்ட மக்களின்நம்பிக்கையைப் பெறவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தி வெளியாகியுள்ள கருத்துக்கள் பக்கம் அரசின் கவனம் திரும்புவது அவசியம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரில் ஏற்பட்ட மனக்காயங்களை ஆற்றுவதற்காக அமைக்கப்படும் பொறிமுறைகள், பாதிக்கப்பட்ட மக்களின்நம்பிக்கைகளைப் பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் மூத்த அதிகாரியொருவர் இந்த எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள், அது குறித்து பன்னாட்டுச் சமூகம் ஏமாற்றமடைந்துள்ளமை, பொதுநலவாய, பன்னாட்டுப் பிரசன்னம் உட்பட பல விடயங்கள் குறித்து ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கான செவ்வியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை அரசு முன்னெடுக்கின்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக்கொண்டதாகவும், பாதிக்கப்பட்டவர்களின் நியாயபூர்வமான கரிசனைகளைஅங்கீகரிப்பதன்மூலம்நல்லிணக்கத்துக்குப் பங்களிப்பவையாகவும் காணப்படுவதைப் பார்ப்பதற்கு நாங்கள் விரும்புகின்றோம் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் முக்கிய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டவர்கள், உறவுகள், பலவந்தமாககாணாமற்போகச்செய்யப்பட்டதால் பெருந்துயரில் சிக்கியுள்ளவர்கள், தமது நிலங்களைபடையினரிடம் இழந்துள்ளவர்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துவரும் ஒரு தருணத்தில் இந்தக் கருத்து வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்தவாரம் கொழும்பில் செய்தியாளர்களைச்சந்தித்த காணாமற்போகச்செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்களிடம் தென்பட்ட மனோநிலை அவர்கள் அரசின் மீது நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளதைப் புலப்படுத்துவதாகக் காணப்பட்டது.

இலங்கை அரசு உருவாக்கப்போவதாகத் தெரிவித்து வரும் காணாமற்போனவர்கள் அலுவலகம் குறித்துத் தங்களிடம் போதியளவு கலந்தாலோசிக்கப்படவில்லை என்ற ஆதங்கத்தை அவர்கள் அந்தச்சந்திப்பில் வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பிட்ட அலுவலகத்தை அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளின்போதும் எங்களைக் கலந்தாலோசிக்கவேண்டும் குறிப்பாக, அலுவலகத்துக்கு ஆணையாளர்களைநியமிக்கும்போது எங்கள்விருப்பங்களை கவனத்திற்கொள்ளவேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.


அவர்களின் இந்த எதிர்பார்ப்பு காணாமற்போனோர் அலுவலகத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட அலுவலகம் காணாமற்போகச்செய்யப்பட்டவர்கள் விவகாரத்துக்கு நீதியை வழங்கும் விதத்தில் செயற்படுவதற்கு அந்த அலுவலகம் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறுவது அவசியம்.

இது வெறுமனே காணாமல்போகச்செய்யப்பட்டவர்கள் குறித்த அலுவலகத்துக்கு மாத்திரமன்றி, நிலைமாறுகால நீதிப்பொறிமுறைகள் அனைத்துக்கும் முக்கியமான விடயம்.

அந்தப் பொறிமுறைகள் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்றால் மாத்திரமே அவை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் நிறைவேறும்.

இந்த வெளிப்படையான உண்மையை அரசு கருத்திற்கொள்ளவேண்டும்.



# விஜேதாசவுக்கு ஏன் இந்த நிலை?

எம்.ஐ.முபாறக்

அடுத்த நாடாளுமன்றத்தேர்தலில்ஆட்சியைத் தக்கவைக்க முடியுமா என்ற சந்தேகம் இப்போதுஐக்கியதேசியக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியைப் பிடித்த கூட்டு அரசின் பங்காளியான ஐக்கிய தேசிய கட்சியே இன்று ஊழலுக்குள் சிக்கித் தவிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வந்த சாபக்கேடுதான் மத்திய வங்கி பிணைமுறி ஊழல். அந்தவிவகாரம் இன்று அந்தக் கட்சியை பல்வேறுவடிவங்களிலும் ஆட்டிப் படைக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சியின் பெயரைக் கெடுப்பதற்கு கூட்டு அரசின் ஆயுட்காலம்வரைஇதுஒன்றே போதும் என்றே தெரிகிறது. இதைவைத்தேஎதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஐ.தே.கட்சியை விமர்சித்துக்காலத்தைப்போக்கப் போகின்றன.

இந்த ஊழலுடன் தொடர்புபட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகநம்பிக்கைஇல்லாப்பிரேரணையைக் கொண்டு வந்தனர்மகிந்தஅணியினர். அதை நிறைவேற்றுவதற்கு முன்பே, அவரை அமைச்சுப் பதவியில் இருந்து தாமாக விலகச் செய்த பெருமை மகிந்த தரப்பினரையே சாரும்.

இவ்வாறு பதவி விலகியதன் மூலம் அவர் ஊழல் புரிந்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரும் அவமானமாகப் போயுள்ளது.

திருடர்களை பிடித்துத் தண்டிப்போம்என்றுகூறிஆட்சிக்கு வந்தகட்சியே, திருட்டில்ஈடுபட்டுள்ளது என்ற முடிவுக்கு மக்கள் வந்திருக்கின்றனர். இந்த நிலைமை ஆட்சிக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இதை மக்கள் மனங்களில் இருந்து நீக்கு வதற்காக கடந்த அரசின் திருடர்களை பிடித்து அடைப்பது என்ற முடிவுக்கு வந்தது.

அரசியல் காரணங்களுக்காக மகிந்தஆட்சியின்திருடர்களை பிடிப்பதை ஒத்திப்போட்டதன் விளைவைதலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இப்போதுதான் அனுபவிக்கத் தொடங்கியுள்ளார். ஆனால், இந்த ஒத்திப்போடல்மேலும்தொடர்ந்தால்மகிந்ததரப்பினர்அப்பாவிகளாகவும், ஐக்கியதேசியகட்சியினர் திருடர்களாகவும் மக்களால்பார்க்கப்படுவதுநிச்சயம். இதை ரணிலும் நன்றிவார்.

தலைக்குமேல்வெள்ளம்செல்வதற்கு முன்னர் அணை கட்டும்விதமாகமகிந்தஅணியின் ஊழல்வாதிகளைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்வதற்கு ரணில் திட்டமிட்டார். ஆனால், அந்தத் திட்டத்துக்கு விஜேதாச முட்டுக்கட்டையாக மாறியமைதான்ஐக்கியதேசிய கட்சிக்குள் இப்போது ஏற்பட்டிருக்கும் சலசலப்புக்கு காரணம்.

### சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்த ரணில் வகுத்த திட்டம்

மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்ததும் அவரது ஆட்சிக் காலத்து ஊழல்களில் சிலவற்றின் விவரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கின. பலர் கைதுசெய்யப்பட்டுவிசாரிக்கப்பட்டனர். அது மகிந்தவுக்குப் பெரும் சிக்கலாகிப் போனது. அவரது மக்கள் செல்வாக்கு சரியும் நிலை ஏற்பட்டது.

ஆனால், நாள்கள் செல்லச் செல்ல, அந்தவேகம்குறையத் தொடங்கியது. பெரும் ஊழல்கள் கிடப்பில் போடப்பட்டு, நகைப்புக்கிடமான சிறு சிறு ஊழல்கள் விசாரிக்கப்பட்டன. கரம் போர்ட் ஊழல் என்றும், கடவுச் சீட்டு ஊழல் என்றும், விசாரணைகள் சென்றன. ஆனால், கோடிக்கணக்கான ரூபாபெறுமதியானநிதிமோசடி ஊழல்கள் ஒருபுறம் கிடப்பில் போடப்பட்டன.

அவ்வாறான சம்பவங்களை மாத்திரம்விசாரித்துவந்ததால், மகிந்தஎதுவிதஊழலும்செய்யவில்லை என்பது போன்றும், அரசியல் காரணங்களுக்காக இவ்வாறுசம்பவங்கள்தொடர்பாக விசாரிக்கப்படுகின்றன என்பது போன்றும் ஒரு தோற்றப்பாடு மக்கள் மத்தியில் எழத் தொடங்கியது.

உப்புச்சப்பற்றஇந்தச்சம்பவங்களை மக்களுக்கு காட்டிக் காட்டி மகிந்த அணியினர் அரசியல் செய்யத் தொடங்கினர்; அரசியல் இலாபம் தேடத் தொடங்கினர். ஊழல்செய்யாத எம்மை, வீணாகப் பழி வாங்குவதற்காக அரசு இவ்வாறு உப்புச்சப்பற்ற சம்பவங்களை விசாரணை செய்கிறது என்று அவர்கள் பரப்புரை செய்யத் தொடங்கினர். மக்கள் அதை நம்பும்வகையில்தான்அரசின் செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

அதுபோக, தமக்கு வேண்டப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றும், வெறுமனே விசாரித்துவிட்டு அனுப்புமாறும்அரசதரப்பில்இருந்து பொலிஸ் உயர்மட்டத்துக்கு அழுத்தங்களும் கொடுக்கப்பட்டன.

லஞ்ச ஊழல், ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி தில்ருக்சிசிலமுக்கியபுள்ளிகளைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தபோதுஅரசஉயர்மட்டம் அவருக்கு முட்டுக்கட்டை இட்டது. இதனால் அவர் தாமாகத் தமது பதவியைத் துறக்கும் செய்யும்நிலைக்குத்தள்ளப்பட்டார். விசாரணைகள் என்ற பெயரில், ஊழல்வாதிகளைப்

பிடிக்கின்றோம் என்ற பெயரில் அரசு ஏன் இவ்வாறு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுகின்றது என்ற கேள்வி எழுந்தது. மகிந்தவைக்கொண்டுசுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் திட்டம் ஒன்றை ரணில் நடைமுறைப்படுத்தி வருவதே இந்த ஆட்டத்துக்குக் காரணம் என்ற பதில் அரசியல் அரங்கில் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதில்உண்மைஇல்லாமல்இல்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைக்கவேண்டும்என்பதும்,அடுத்த அரசதலைவர் தேர்தலில் தான் அரச தலைவராக வேண்டும் என்பதும் ரணிலின் திட்டமாகும். இந்தத் திட்டம் நிறைவேறவேண்டுமென்றால்சுதந்திரக்கட்சி பிளவுபட்டுபலவீனப்பட்டே ஆக வேண்டும். ஆகவே, இப்போது சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு காரணம் ரணில்தான் என்பதை மறுக்க முடியாது.

சுதந்திரக்கட்சியின்மைத்திரிதரப்பும், மகிந்ததரப்பும்ஒன்றுசேரமுடியாதபடி தலைமை அமைச்சர் காய் நகர்த்தி வருகின்றமை அவருக்கு ஓரளவு வெற்றியைக் கொடுத்துள்ளபோதிலும், அந்த இரண்டு தரப்புக்களும் தலைமை அமைச்சருக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இல்லை.

மகிந்த தரப்பு ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் செய்து வருகின்றது. மைத்திரி தரப்பு தலைமைஅமைச்சரை ஆதரிப்பதாக இல்லை. மைத்திரி மகிந்த தரப்பினர் ஒன்றுசேராவிட்டாலும்ஐக்கியதேசிய கட்சியைத்தாக்கும்விடயத்தில்ஒன்று சேர்ந்தே செயற்படுகின்றனர்.

ரவி கருணாநாயக்கவின் விடயத்திலும் விஜேதாசவின் விடயத்திலும் இந்த இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து நின்றதைநாம்கண்டோம்.

**ரவிக்கு எதிரான பிரேரணை**

ஐக்கிய தேசிய கட்சியை வீழ்த்துவதற்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு துரும்பையும் சரியாகப் பயன்படுத்தி வரும் மகிந்த அணி, ரவிக்கு எதிரான மத்தியவங்கி ஊழல் குற்றச்சாட்டைத் தூக்கிப் பிடித்து அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தது.

ஆட்சியின் பங்காளியான சுதந்திரக் கட்சி மாத்திரமன்றி, ஐக்கிய தேசிய கட்சியின் அரைவாசிப் பேர்கூட இந்தப்பிரேரணைக்குஆதரவுவழங்கத் தொடங்கியதால்தலைமைஅமைச்சரால் எதுவும் செய்ய முடியவில்லை. வாக்கெடுப்பின்போது பிரேரணை வெற்றியடைந்தால் அது அரசின் இருப்புக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்பதால் வாக்கெடுப்புக்கு முன்பேரவியைப்பதவிவிலகச்செய்தார் தலைமை அமைச்சர்.

இருந்தாலும், அந்தப் பதவி விலகல் கூட ரவி செய்த ஊழலை ரவியே ஏற்றுக்கொண்டார்என்றுஅமைந்துவிட்டது. இதில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக மகிந்த அணிக்கு மகிந்த குடும்பத்துக்கு எதிரானஊழல்விசாரணையைத்துரிதப்படுத்திஅவர்களுள்சிலரைசிறையில் அடைக்க வேண்டிய தேவை தலைமைஅமைச்சருக்குஏற்பட்டது.

**மகிந்தவின் ஆள்களை காப்பாற்றினார் விஜேதாச**

மகிந்தவைக் கொண்டு சுதந்திரக் கட்சியைப்பலவீனப்படுத்தும்நோக்கில் மகிந்த அணியினருக்கு எதிரான விசாரணையை தலைமை அமைச்சர் தாமதப்படுத்தியமை ஒரு பக்கத்தில் அவருக்கு வெற்றியைக் கொடுத்துள்ளபோதிலும் மறுபுறத்தில் தோல்வியையே கொடுத்துள்ளது.

அதாவது, சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தல்என்பதுஒருபக்கத்தில் வெற்றியளிக்கின்றபோது, மறுபுறத்தில் மகிந்த தரப்பினர் ஐக்கிய தேசிய கட்சியைபலவீனப்படுத்தும்வேலையைச்செய்துகொண்டிருக்கின்றனர். அதன் உச்சக்கட்டம்தான் ரவிக்கு எதிரான பிரேரணை.

இதனால் மகிந்த அணிக்கு எதிரான பிரேரணையைத் துரிதப்படுத்துவதற்குதலைமைஅமைச்சர்முடிவெடுத்தார். இதற்கானசட்டஏற்பாடுகளை செய்யுமாறுநீதிஅமைச்சராகஇருந்த விஜேதாசவுக்கு உத்தரவிட்டார் மகிந்தவின்ஆள்களைமறைமுகமாகப் பாதுகாத்து வந்த விஜேதாசசட்டத்தில்உள்ளசிலஓட்டைகளைவைத்து தலைமை அமைச்சரின் திட்டத்தை முடக்குவதற்குமுயன்றார். இதனால் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டுவிஜேதாசவுக்கு எதிராகக்காய்நகர்த்தினார்தலைமை அமைச்சர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்குவழங்கியமையைவிஜேதாச எதிர்த்தமைக்காகவும், மகிந்த அணிக்கு எதிரான விசாணையைத் தாமதப்படுத்தியமைக்காகவும் என இரண்டு விடயங்களுக்காக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதாக ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்தனர். இதை அறிவித்த உடனேயே அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடிவந்து விஜேதாசவைப் பாதுகாக்கப் போவதாக அறிவித்தார் மகிந்த. இதனால் மகிந்தவுக்கும் விஜேதாசவுக்கும் இடையிலான தொடர்பு வெளியாகியது.

விஜேதாச ஆரம்பம் முதல் மகிந்தவின்ஆள்களைப்பாதுகாத்துவருகின்றமைவெளிப்படையானஒன்றாகும். குறிப்பாக, அவன்கார்ட் சம்பவத்தில் அரசு ஒரு நிலைப்பாட்டை எடுத்தபோது விஜேதாச அதற்கு எதிராக வேறொருநிலைப்பாட்டைஎடுத்தார். அவன்கார்ட் நிறுவனத்துடனான அனைத்து ஒப்பந்தங்களையும் கைவிட்டுவிட்டு, அதன் செயற்பாடுகளைகடற்படையினரிடம்ஒப்படைப்பது என முடிவெடுத்து அதை அரச தலைவருக்குஅறிவித்தார். ஆனால், அந்த அறிவிப்புக்கு விஜேதாச வேறு விளக்கம் ஒன்றைக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து விஜேதாசவுக்கும் அவன்கார்ட் நிறுவனத்தின் சொந்தக்காரர் நிசங்க சேனாதிபதிக்கும் இடையில் இருந்த தொடர்பு அம்பலமானது.

அதேபோல், கோத்தபாய ராஜபக்ச தொடர்பிலும் அரசு கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து மாறுபட்ட நிலைப்பாட்டையே விஜேதாச கொண்டிருந்தார். அதாவது, கோத்தாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருந்தார். புலிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றிய கோத்தபாயவைக்கைதுசெய்வதுசரியல்லஎன்று கூறி அவர்கோத்தாவைக்காப்பாற்றினார்.

சரத் பொன்சேகாவும் விஜேதாசவும் கீரியும்பாம்புமாகஇருப்பதற்குவிஜேதாசவின் கோத்தபாய ஆதரவுப் போக்கே காரணம்.

ரவியின் சம்பவத்துக்குப் பின்னர் இனியும் விஜேதாசவின் மகிந்தஆதரவுப் போக்குக்கு இடம்கொடுத்தால், அது ஐக்கிய தேசிய கட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடும் என்பதை உணர்ந்த தலைமை அமைச்சர் அந்த நிலைப்பாட்டை மாற்றுமாறு கூறியும் விஜேதாச கேட்கவில்லை. இதனால் அவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கு வதைத் தவிர தலைமை அமைச்சருக்கு வேறுவழி இருக்கவில்லை. மகிந்தவின் திருடர்களைக் கைது செய்யவிடாமல் தடுத்தவர் விஜேதாசதான் என்று மக்களிடம் கூறித், தான் தப்புகின்ற வாய்ப்பு இப்போது ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்துள்ளது. ஆனால், அவரை நீக்கிய பின்பும் திருடர்களை பிடிப்பதில் அரசு தாமதம் காட்டினால் அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சி வீழ்ச்சியை சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கிடைக்கின்ற வாய்ப்பை தவறவிடுகின்றசோம்பறித்தனமான அரசியல் செய்யும் ஐக்கிய தேசிய கட்சி, இனித் தொடர்ந்து எப்படிசெயற்படப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

> மகிந்தவின் திருடர்களைக் கைது செய்யவிடாமல் தடுத்தவர் விஜேதாசதான் என்று மக்களிடம் கூறித் தான் தப்புகின்ற வாய்ப்பு இப்போது ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்துள்ளது. ஆனால், அவரை நீக்கிய பின்பும் திருடர்களைப் பிடிப்பதில் அரசு தாமதம் காட்டினால் அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சி வீழ்ச்சியைச் சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை.






## இந்த அதிகாரத்தனம் அனுமதிக்கப்படலாமா?

கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.50 மணிக்கு யாழ். ஓட்டுமடத்தை வந்தடைந்த 782 ஆம் இலக்க இ.போ.ச பஸ்ஸில், ஓட்டுமடத்துக்குக்கு அடுத்த தரிப்பிடத்தில் இருந்து ஒரு கர்ப்பிணிப் பெண் பஸ்ஸை மறித்து ஏறினார். பஸ்ஸில் பயணிகள் இருக்கைகள் யாவும் நிறைந்திருந்தன.

அந்தப் பெண்ணுக்கு பஸ்ஸில் பயணித்த எவரும் இருப்பதற்கு ஆசனம் விட்டுக் கொடுக்கவில்லை. அவர் பஸ்ஸின் மிதிபலகையில் நின்றவாறே பயணம் செய்துள்ளார். அவர், தான் இறங்க வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் தன்னை இறக்கி விடுமாறு நடத்துநரிடம் வினயமாக வேண்டியுள்ளார். ஆனால், நடத்துநர், அடுத்த தரிப்பிடத்தில் நிறுத்துகின்றேன். அங்கிருந்து நடந்து போ! ஏலாத நீங்கள் எல்லாம் ஏன் பஸ்ஸில் ஏறுகின்றீர்கள்? என ஏசியது மட்டுமன்றி, பின்பக்க மிதிபலகையில் நின்ற அந்தக் கர்ப்பிணிப் பெண்ணை ஏறிவந்து நடந்துசென்று முன்பக்க மிதிபலகையூடாக இறங்கு! என்று மனிதாபிமானமற்ற முறையில் சிறிதும் ஈவிரக்கம் அற்ற வகையில் ஏசியுள்ளார். இதில் மிக வேதனையான விடயம் என்னவென்றால், அந்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் எவரும் அந்த நடத்துநரை அவரது அதிகாரத்தனம் குறித்துத் தட்டிக் கேட்காதமைதான்.

விருந்தோம்பல், பிறரை மதிக்கும் நற்பண்பு, மனித நேயம் என்ற பண்புகள் கொண்டதாகப் போற்றப்பட்ட எம் தமிழினத்தின் மனிதத்துவம் அந்த அளவில் இறந்துவிட்டதா? என மனம் நொந்த அந்த பஸ்ஸில் பயணம் செய்த ஒரு மூதாட்டி, இந்தச் சம்பவத்தைப் பலரறியச் செய்ய வைக்க முடியுமா என என்னைக் வேண்டிக் கொண்டதன் வெளிப்பாடே இந்தக் கடிதம்.

நலன் விரும்பி.

# சிறந்த தொழில்நுட்ப சேவை வழங்குநராக அபான்ஸ்

வாடிக்கையாளர்கள் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெற முடியும். இவைதவிர இணையத்தளமூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை,புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக் கட்டணத்தை செலுத்துதல்,உற்பத்தியினை மேம்படுத்தல் தொடர்பான தகவல்களையும் அறிய முடிகிறது.

நவீன உலகத்தின் வாழ்க்கை முறைகளுக்கும் தேவைகளுக்கும் ஈடுகொடுத்து ஒத்திசைவாக்கம் பெறும் வகையில் அபான்ஸ் சேவைப்பிரிவானது உயர் தரத்திலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சேவை வலையமைப்பினை நாடு முழுமையுமாக வாடிக்கையாளர்களுக்கென அறிமுகம் செய்துள்ளது.

தற்போது 24 மணிநேர சேவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வலையமைப்பின் மூலம் வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் தொலைபேசி வாயிலாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அவசரத்தேவைகள் ஏற்படும் பட்சத்திலே உரிய இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அபான்ஸ் சேவைப் பிரிவின் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவரை வரவழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்ற தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவைதவிர இணையத்தளமூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை,புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக்கான கட்டணத்தை செலுத்துதல்,உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிதல்,நடமாடும் சேவைகள் மற்றும் துரித சேவைகள் மூலம் சேவைகளையும், தேவைகளையும் விரைவாகவும் துரிதமாகவும் பெறக்கூடிய வாய்ப்பு என பலதரப்பட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருவதாகவும் அபான்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும் வாடிக்கைகளுக்கான சகல வசதிகளையும் அதியுயர் சேவைகளையும் வழங்குவதற்காக அபான்ஸ் சேவைப்பிரிவானது நாடு முழுமையுமாக 17 சேவைப்பிரிவுகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட 100 சேவை முகவர்களைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சகல சேவைகளையும் உயர்தர உதிரிப்பாகங்களை கொண்டு விரைவான,செயற்திறன் மிக்க சேவையாக வழங்கி வருகின்றமை குறித்நோக்கத்தக்கது. (ஒ)

Abans

| வகைப்பாடு | ஜூன் 2016 (அமெ.டொலர் மில்லியன்) | ஜூன் 2017 (அமெ.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) | ஜன-ஜூன் 2016 (அமெ.டொலர் மில்லியன்) | ஜன-ஜூன் 2017 (அமெ.டொலர் மில்லியன்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | 900.6 (b) | 987.3 | 9.6 | 5,130.3 | 5,397.6 | 5.2 |
| இறக்குமதி | 1,675.8 | 1,540.9 | -8.0 | 9,321.0 | 10,151.0 | 8.9 |
| வணிக இருப்பு (நிகர) | -775.2 | -553.6 | - | -4,190.7 | -4,753.5 | - |
| சுற்றுலாத்துறை வருமானம் | 202.5 (b) | 211.6 | 4.5 | 1,654.3 (b) | 1,733.6 | 4.8 |
| ஊழியருக்கான பணச்செலுத்துகை | 644.5 | 557.6 | -13.5 | 3,613.1 | 3,354.7 | -7.2 |
| பங்குப்பரிவர்த்தனைக்கான உள்ளீடு (நிகர) | -3.6 | 38.2 | - | -40.9 | 229.3 | - |
| அரசுக்கான உள்ளீடு | 299.5 (b) | 304.0 | 1.5 | 1,137.1(b) | 3,353.0 | 194.9 |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி | 193.6 | 157.7 | -18.5 | 601.1 | 729.8 | 21.4 |
| பன்னாட்டுத் தனியுரிமை முறைகள் | - | - | - | - | 1,500.0 | - |
| வணிக மன்றக் கடனளிப்பு | - | - | - | - | 450.0 | - |
| நீண்டகால கடனளிப்பு | 100.9 (b) | 141.3 | 40.1 | 520.3(b) | 1,110.5 | 113.4 |
| பன்னாடுகளின் நேரடித்தன்மைவாய்ந்த முதலீடு | - | - | - | 129.4 | 146.5 | 13.2 |

*(a-தற்காலிக மதிப்பீடு, b-திருத்திய மதிப்பீடு)*

# ஜூன் மாதத்தில் ஏற்றுமதி மூலம் 5.2 வீதம் வருமானம்

நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப் பகுதி,கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதி மற்றும் தனித்து கடந்த ஆண்டின் ஜூன் மாத காலப் பகுதி, நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதி வரையான ஏற்றுமதிச் செயலாற்றுகை மூலமான வருமான உள்வருகைகள் பின்வரு மாறு அமைந்துள்ளதான தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது.இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.

தேயிலை, மசாலா, பெற்றோலியம் பொருள்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியால் அதிக வருவாய் கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதி மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 5.2 வீதமாக அமைந்துள்ளது.வருமான ஈட்டமானது 5 ஆயிரத்து 397.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது. எனினும் புடவை மற்றும் ஆடைகள், இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் நகைகள் அதேபோன்று உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகிய வற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் கணிசமாக குறைந் துள்ளது.

தகவல் மூலம்: இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம்,தேசிய ஆபரணக் கற்கள் அதிகார சபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள். (ஒ)

# வருமான வரிச் சட்டமூலம் சபையில் தோற்கடிக்கப்படும்

## அநுர குமார திசாநாயக்க தெரிவிப்பு



பன்னாட்டு நாணய நிதியத்தின் தேவை கருதியே புதிய வருமான வரிச் சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை தோற்கடிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"புதிய வருமான வரிச் சட்டமூலம் பன்னாட்டு நாணய நிதியத்தினால் வகுக்கப்பட்டு இலங்கை நாடாளுமன்றில் நிறைவேற்றிக் கொள்வதற்கென தாக்கல் செய்யப்பட்ட ஒன்று. இந்தச் சட்டமூலத்தின் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் ஏற்படுத்தும் விதமான வரித்திருத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்புரிமையுடைய 25 இலட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நிதி இதன் மூலம் குறைக்கப்படு கிறது. அதே போன்று இதற்கு முன்பாக பல்வேறு துறைகளுக்கும் வழங்கப்பட்டிருந்த வரி நிவாரணங்கள் முழுமையாக நீக்கப்படுகிறது. புதிய உற்பத்தியாளர்களுக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த வரி நிவாரணங்கள் இந்தச் சட்டமூலத்தின் மூலம் இல்லாது செய்யப்படுவதுடன் வரிக்கு உட்படுத்தப்படுகிறது.

அரசுக்கு பன்னாட்டு நாணய நிதியம் அழுத்தம் கொடுக்கிறது. ரணில் மைத்திரி கூட்டு அரசு பொறுப்புக் கூற வேண்டியது பன்னாட்டு நாணய நிதியத்துக்கு அல்ல. இந்த நாட்டு மக்களுக்கே. சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கட்சி முன்னெடுக்கும்."
- என்றார். (ஒ)

# இலங்கையில் முதலீடு செய்ய மலேசியர்கள் அதிக ஆர்வம்

## 300 மில்.அமெரிக்க டொலரை முதலீடத் தீர்மானம்

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் மலேசியாவின் முதலீட்டாளர்கள் அதீத ஆர்வத்தை வெளிக்காட்டியுள்ளனர் என்றதகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய அரசும், அந்தநாட்டின் தனியார் முதலீட்டு நிறுவனங்களும் இணைந்து இலங்கையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடு உடைய முதலீட்டு நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன என்று கூறப்படு கிறது. இவை இலங்கையில் எண்ணெய், எரிவாயு மற்றும் சக்திவளத்துறைகளில் முதலீடு களை மேற்கொள்ளவுள்ளதுடன் பொழுது போக்குப் பூங்கா உள்ளிட்ட விடயங்களிலும் முதலீடு செய்யவுள்ளனர். (ஒ)


CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

28/8/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| [illegible] | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ⇑ | 3.00 | 6,412.37 | 6,409.37 |
| S&P SL20 | ⇑ | 3.60 | 3,694.17 | 3,690.57 |
| வியாபாரப்புரள்வு | | | 210,265,568 | 612,995,070 |
| உள்நாடு: கொள்வனவு | | | 158,791,792 | 234,052,720 |
| விற்பனை | | | 200,855,648 | 281,881,216 |
| வெளிநாடு: கொள்வனவு | | | 51,473,784 | 378,942,304 |
| விற்பனை | | | 9,409,918 | 331,113,824 |




| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிங்கர் ஸ்ரீலங்கா | SEYB.N | 95.00 | 243,652 | 23,268,341 |
| சி டி கோல்டிங்ஸ் | SAMP.N | 298.00 | 72,894 | 21,660,249 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | HNB.N | 228.00 | 83,067 | 18,711,041 |
| சம்பத் வங்கி | LOLC.N | 120.00 | 149,310 | 17,918,522 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | TKYO.N | 73.70 | 242,453 | 17,698,882 |
| டொக்கியோ சிமெண்ட் | COMB.N | 137.80 | 88,543 | 12,218,219 |
| ரெக்ஸ்யேட் பெர்ஷி | CFIN.N | 87.00 | 77,505 | 6,742,785 |
| ஹற்றன் நஷனல் வங்கி | PINS.N | 23.40 | 267,705 | 6,282,579 |
| கொமர்சியல் வங்கி | LDEV.N | 4.10 | 1,324,166 | 5,668,414 |
| லங்கெம் டெவெலப்மெண்ட்ஸ் | LVEN.N | 50.00 | 112,000 | 5,600,500 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்

கொழும்பு போர்ட் லாண்ட்(CFLB)- Rs. 0.15

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ⇑ | 295 |
| பரிமாற்றத்தில் | ⇑ | 216 |
| விலை உழைப்பு | ⇓ | 10.4 |
| புத்தகப்பெறுமதி | ⇓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ⇓ | 3.1 |



# இல்லற மாண்மியத்தை வரமாக்கும் முருங்கை

கே.எஸ்.சிவஞானராஜா

பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் செழித்து வளரும் வஞ்சகமில்லாத ஒரு மரமே கறி முருங்கையாகும். வீட்டு வளவிலும் சரி வெறும் வளவிலும்சரி, கற் பூமியிலும் சரி அகன்று சடைத்து உயர்ந்து கொப்புகளாய்ப் பிரிந்து மரமெல்லாம் பிஞ்சாக, காயாக, களிப்பிடிப்புடன் காய்க்க வல்லது இந்த முருங்கை. பதிவைத்தால் போதும் பராமரிப்பது இறைவனும் இயற்கையுமே. பார்ப்பதற்குப் பூப்போன்ற பசுந் தளிர்களும் வட்டவட்டச் சின்னச் சின்ன இலைகளும், வளைந்து கொடுக்கும் காம்புகளும் வாகான தண்டுகளும், மொய்கின்ற வண்ண வண்ணப் பூச்சிகளும், சின்னச் சின்ன வாயால் பையப் பைய அரிக்கும் மயிர்க் கொட்டிகளும், ஒடிக்கத் துடிக்கும் பெண்களின் மென்கரங்களும் முருங்கையை வளமாக்கும் மனிதர்களுக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதனால் வசந்த மூலிகை எனவும் மான்மிய மூலிகை எனவும் ஆண்மிக சஞ்சீவி எனவும் சந்தான மூலிகை எனவும் இல்லறவாளி எனவும் முருங்கை போற்றப் படுகிறது. எனவே முருங்கை ஒரு இல்லற நண்பன் என வாழ்த்தப்படுகின்றது. இளமைக்கும் முதுமைக்கும் இதுவொரு பெரும் வரப்பிரசாதம். இன்னும் சிறப்பாகச் சொல்லப் போனால் தாய்மார்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் அதிக ஜீவாதாரத்தை அள்ளி வழங்குகின்றது.

**ஜீவாகாரம்**

எவரையுமே ஆரோக்கியமாகவும், கணகணப்பாகவும் வைத்து மனிதனாக்குவது முருங்கையாகும். முருங்கையின் பெயரைச் சொன்னாலே கண்முன் வருவது முருங்கை காயாகும். இந்த அற்புதக் காயினைச் சுவைக்காதவர்கள் யாருமே இருக்க முடியாது. குஞ்சு குருமன் இளசு பெரிசு கிழடு கட்டை என்று பேச்சு வழக்கில் இதனைத் தொடாதவர் யாரும் இல்லையென்று கூறலாம். இதிலே காணப்படும் பச்சை நிறந்தான் பலபல ஜீவாதார ஊட்டங்களைக் கொண்டு விளங்குகின்றது. உள்ளே காணப்படும் சதை, களி, சாறு விதை, நார், பிசு பிசு வார்ப்பு யாவுமே அவம் போகாத தவப் பயன்பாடுதரும் உவப்பாடு மிக்கதாகும். இது இரண்டு வகைப்படும். அவையாவன.

ஆண்முருங்கை
பெண் முருங்கை

இதைவிட இன்னொரு வகையும் உண்டு. அவையாவன

இலங்கை முருங்கை
இந்திய முருங்கை

ஆண்முருங்கையானது சதைப்பிடிப்பு மிகவும் குறைவான ஒல்லித்தன்மை கொண்டதாக இருக்கும். பெண்முருங்கையானது சதைப்பிடிப்பு அதிகமுள்ளதாக அழகு மிக்கதாக இருக்கும். இலங்கை முருங்கை நம்மண்ணோடு ஒன்றித்து இருப்பதனால் அதில் ஒரு அதீதரசனை இருக்கவே செய்கிறது. இந்திய முருங்கையில் மரம் முழுவதும் காயாகக் காய்ப்பதனால் இலகுவாகவும், எளிதாகவும், மலிவாகவும், மகிமையாகவும் கிடைக்கிறது. இவை இரண்டுமே எமக்கு வரப்பிரசாதமே.

**வறை, கறி, சொதி**

முருங்கை இலையானது பெண்களின் மென்மையான கரங்களைப் போன்றது. இலைகளில் இரும்பு முதலான அனேக ஊட்டச் சத்துக்கள் இருப்பதனால் வறையாகவும் சொதியாகவும் சூடாக்கிச் சாப்பிட்டுவர உடலும், உள்ளமும் கம்பிதமும், காத்திரமும் பெறும். இலைகளை வறைக்கும் சொதிக்கும் பயன்படுத்தும் அதே வேளை இலைக்காம்புகளை சொதிக்குள் போட்டு வேகப்படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்திக்கும், வாய்மொழி விருத்திக்கும் வழிகோலும் என்று ஆன்றோர் சான்று பகர்வார்கள்.

மேலும் முருங்கைக் காய்க் கறி சமைப்பதன் மூலம் கல்சியம் முழுமையாகச் செப்பனிடப்பட்டு சாப்பிடும் போது உடலில்சேர வழிசமைக்கப்படுகிறது. மேலும் கனியுப்புக்களும், அதிசிறந்த விற்றமின்களும் முருங்கைக் காயில் பொதிந்து பொலிந்து காணப்படுகின்றன. ஆதலால் மனித இருப்பைத் தக்க வைப்பதற்கான அத்தனை ஜீவ ஆதாரங்களும் ஆகாரங்களாக உண்டு. முருங்கைப் பூக் கூட வறுவலாக்கி உண்டால் உடல் ஜொலிக்கும்.

முருங்கை இலையானது பெண்களின் மென்மையான கரங்களைப் போன்றது. இலைகளில் இரும்பு முதலான அனேக ஊட்டச் சத்துக்கள் இருப்பதனால் வறையாகவும் சொதியாகவும் சூடாக்கிச் சாப்பிட்டு வர உடலும், உள்ளமும் கம்பிதமும், காத்திரமும் பெறும். இலைகளை வறைக்கும் சொதிக்கும் பயன்படுத்தும் அதே வேளை இலைக்காம்புகளை சொதிக்குள் போட்டு வேகப்படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்திக்கும், வாய்மொழி விருத்திக்கும் வழிகோலும் என்று ஆன்றோர் சான்று பகர்வார்கள்.



**இல்லறம்**

குழந்தை இல்லாத கவலை, ஆண், பெண் உறவில் ஏற்படும் பலவீனம், மாதவிடாய்க் கோளாறுகள், சிறுநீர்க் கோளாறுகள், ஆண்மைக் குறைபாடு, பெண்மைக் குறைபாடு, ஜீரணக் குறைபாடு மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல் , எலும்பு பற்கள் குறைபாடுகள், நீரிழிவு உபாதைகள், கொலஸ்ரோல் அச்சம் உடல் மெலிவு உடல் பலவீனம் பார்வைக்குறைபாடு யாவுமே அச்சமின்றி விலகும். இதன் பேறாக இல்லறம் நல்லறமாக ஒளிவீசும். நல்லதோர் சந்ததிக்கு வாய்ப்பளிக்கும். சந்தான விருத்தி மட்டுமல்ல சௌபாக்கிய அனுகூலமும் நீடு வாழும். பூ, இலை, காய், காம்பு நான்கும் இல்லற இன்பம் பயப்பனவே. இனி நீங்கள் சும்மா இருப்பீர்களா?



# குருப்பெயர்ச்சி பலன்கள்

## கடகம்

மற்றவர்களுக்கு ஆறுதல் சொல்பவர்களே!

உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் 2.9.2017 முதல் 2.10.2018 வரை குரு பகவான் அமர்ந்து பலன் தர இருக்கிறார். பொறுமை காப்பது நல்லது. நல்லவர்களின் தொடர்பை வளர்த்துக்கொள்ளுங்கள். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்- மனைவி விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தாயாரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**குரு பகவானின் பார்வை:** குரு பகவான் தனது 5ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டை பார்ப்பதால் செலவுகள் அதிகரிக்கும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். குரு பகவான் தன் 7ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 10 ஆம் வீட்டைப் பார்ப்பதால் புதிய வேலை கிடைக்கும். சிலர் வேலையில் இருந்துகொண்டே பகுதி நேரமாகத் தொழில் தொடங்கவும் வாய்ப்பு அமையும். அடகில் இருந்த நகை, பத்திரங்களை மீட்பீர்கள். குரு பகவான் தனது 9ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டைப் பார்ப்பதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். நீண்டகாலமாகச் செல்ல நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்களின் பிரபல யோகாதிபதி யான செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில் 2.9.2017 முதல் 5.10.2017 வரை குரு பகவான் செல்வதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். 6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் பாதியில் நின்ற கட்டட வேலையை மறுபடியும் தொடங்குவீர்கள். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். மற்றவர்களுக்கு பிணை கொடுக்க வேண்டாம்.


உங்களின் ராசிக்கு 6 மற்றும் 9ஆம் இடங்களுக்கு உரிய குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.17 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை பயணிப்பதால் புகழ், கௌரவம் உயரும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம் படும். வழக்கில் நெருக்கடிகள் நீங்கும்.

குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்: 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் குரு பகவான் சென்று அமர்வதால் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். வருமானம் உயரும். கடன்கள் அடைபடும். நண்பர்களின் வட்டம் விரிவடையும். பூர்வீகச் சொத்து பிரச்சினை முடிவுக்கு வரும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன்னுடைய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் பயணிப்பதால் மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். உங்கள்மீது வீண்பழி சுமத்தப்படும். புதிய நபர்களை நம்ப வேண்டாம். எதிலும் மாற்று வழியை யோசிப்பது நெருக்கடிகள் ஏற்படாமல் இருக்க உதவும். வியாபாரத்தில் கடினமாக உழைக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் கவனம் தேவை. மாணவர்களே! படிப்பில் தீவிர கவனம் தேவை. கலைத் துறையினரே! சின்ன படங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய படைப்புகளுக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு பிரச்னைகளையும், இடப்பெயர்ச்சியையும் தந்தாலும் ஓரளவு முன்னேற வைக்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 29.08.2017

708 - ஜப்பானில் முதன்முதலாக செப்பு நாணயம் பயன்பாட்டுக்கு வந்தது.
1541 - ஹங்கேரியத் தலைநகர் புடாபெஸ்ட், ஒட்டமான் துருக்கியரால் கைப்பற்றப்பட்டது.
1831 - மைக்கல் பரடேயால் மின்காந்தத் தூண்டல் கண்டறியப்பட்டது.
1910 - ஜப்பான் - கொரியா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதற்கமைய கொரியாவில் ஜப்பானிய ஆட்சி உத்தியோகபூர்வமாகத் தொடங்கியது.
1916 - பிலிப்பைன்ஸுக்கான சுயாட்சிச் சட்டம் அமெரிக்காவால் அனுமதிக்கப்பட்டது.
1950 - அமெரிக்கப் படைகளின் நிலையை உறுதிப்படுத்த பிரிட்டன் துருப்புக்கள் கொரியாவை அடைந்தன.
1997- 98 பொதுமக்கள் அல்ஜீரியா இஸ்லாமியக் குழுவினால் கொல்லப்பட்டனர்.
2005- வன்னியில் ஏலம் பயிர்ச் செய்கை.
2016 - நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை ஆரம்பம்.
2016 - அரசியல் முதிர்ச்சியில்லாதவர் ஜோன் அமரதுங்க எனச் சாடுகின்றார் அமைச்சர் மனோகணேசன்.



1915 - அமெரிக்காவின் முதலாவது நீர்மூழ்கிக் கப்பலான எவ்-4 மூழ்கிய நிலையில் அமெரிக்க கடற்படையின் மீட்புப் பணியாளர்களால் கடல்மட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

## நாளை

**30.08.2017**

புதன்கிழமை

**ஆவணி - 14**

திதி: நவமி பி.இ. 05.58 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ.03.27 வரை
சுபநேரம்: 07.35–09.05 வரை
ராகுகாலம்: 01.35–03.05 வரை

## பத்தி எழுத்து

# பதவியில் நீடிக்க விரும்புகின்றார் முதலமைச்சர்

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் காபந்து அரசுக்கான யோசனை அவர் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு விரும்புகிறார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபையொன்றின் ஆயுட்காலம் முடிவடைந்து தேர்தல் இடம்பெறும்வரையான இடைக்காலத்தில் நாடாளுமன்றம் அந்த மாகாணசபையின் நிர்வாகத்தைக் கையாளமுடியுமெனத் தெரியவருகின்றது. இதை வடக்கு முதலமைச்சர் முற்றாகப் புறக்கணித்துள்ளார். மாகாணசபைகளின் அதிகாரங்கள் இடைக்காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் ஒப்படைப்பதற்குப் பதிலான காபந்து அரசு ஒன்றை நிறுவனமென அவர் ஆலோசனையும் வழங்கியுள்ளார்.

காபந்து அரசு என்பது மாகாண சபைகளைப் பொறுத்த வரையில் முதலமைச்சர் தலைமையில் தான் செயற்படமுடியும். இதனால் வடக்கு மாகாணத்தில் அவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின் சி.வி. விக்னேஸ்வரனே காபந்து அரசில் முதலமைச்சராகத் தமது பதவியில் தொடர்வார். சி.வி.விக்னேஸ்வர னின் விருப்பமும் இதுவாகத்தான் காணப் படுகின்றது.

கடந்த 2003 ஆம் ஆண்டு மாகாணசபையை வரவேற்ற வடபகுதி மக்கள் அதை முற்றுமுழுதாக வெறுக்கும் நிலையிலேயே உள்ளனர். அடுத்த தேர்தலொன்று இடம்பெறும்போது தகுந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடம் நிறைந்து காணப்படுகின்றது. நான்கு ஆண்டுகளில் ஆறு அமைச்சரவை மாற்றங்கள் பல நூற்றுக்கணக்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், குத்து வெட்டுக்கள், குழிபறிக்கும் செயற்பாடுகள் தவிர வடக்கு மாகாணசபையில் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள் எவையுமே இடம்பெறவில்லை. இந்த நிலையில் மக்கள் மாகாணசபையின் காலம் நீடிக்கப்படுவதை அறவே விரும்பமாட்டார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அசாதாரண சூழ்நிலைகளின் போது மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி பிறப்பிக்கப்பட்டுவிடும். மாநில ஆளுநரே மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக் கொள்வார்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மக்களுக்கு விருப்பமில்லாத ஆட்சியொன்று இடம்பெறும் நிலையில் அதன் ஆட்சிக் காலத்தை நீடிப்பது என்பது தேவையற்றதொன்றாகவே அமைந்துவிடும்.

ஆகவே காபந்து அரசு என்ற பெயரில் ஆட்சி நீடிப்பு இடம்பெறுவதை மக்கள் அறவே விரும்பமாட்டார்கள். அடுத்த தேர்தல் ஒன்று இடம்பெற்று மீண்டும் பதவிக்கு வருவது தான் ஜனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்கது. இதைவிடுத்து காபந்து அரசு என்ற பெயரில் அதிகாரத்தில் நீடிக்க முயல்வது விக்னேஸ்வரன் போன்றவர்களுக்கு அழகல்ல.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிரம சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனம் பேணுவது நல்லது.

**இடபம்**: சமனதில் ஒருமுகத் தன்மையுடன் செயற்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** கடின பணிகளையும் எளிதாக நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உய ரும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்பட லாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில், வியா பாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வீடு வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** பகைவரும் நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். இலாபம் அதி கரிக்கும்.

**விருச்சிகம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு மறை யும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமா ராக இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன் படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள இலாபம் கிடைக்கும்.

**கும்பம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப் படலாம். பொது இடங்களில் விவாதம் செய்ய வேண்டாம். பெண்கள் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** முன்யோசனையுடன் செயல்பட்டு வருவீர்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டகர மாக இலாபம் அதிகரிக்கும்.

# அஜித்துக்காக களத்தில் லோறன்ஸ்



விவேகம் படத்தைப் பற்றி எதிர்மறையான விமர்சனங்கள் அதி கரித்துள்ள நிலையில், விமர்சகர்களுக்கு எதிராகவும் அஜித்துக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்துள்ளார் லோறன்ஸ்.

"விவேகம் படம் பார்த்தேன். அந்த கடுமையான உழைப்புக்கு சிரம் தாழ்ந்த வணக்கங்கள்!. அதேவேளையில், இந்தப் படத்தைப் பற்றி பல்வேறு மக்கள் நிறையாகவும், குறையாகவும் அளித்துள்ள அனைத்து விமர்சனங்களையும் கண்டேன். ஒவ்வொரு படம் தொடர்பாகவும் எதிர்மறையான விமர்சனங்கள் இருக்கவே செய்யும். ஆனால் இந்தப் படத்துக்கு மிக மோசமாக எதிர்மறை விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளன. இது பேரதிர்ச்சியாக உள்ளது. எதிர்மறையான விமர்சனங்கள் தாறுமாறாகப் போகும் அளவுக்கு விவேகம் படம் இல்லை.

விமர்சிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் விமர்சிப்பவர்களுக்கு எதிராக அதாவது ஏற்கமுடியாத கடும் விமர்சனங்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக திரையுலக நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என லோறன்ஸ் மேலும் குறிப்பிட்டார். (ம)







# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 2 | 3 | 6 | 7 | 4 | 5 | 9 |
| 4 | 6 | 9 | 5 | 2 | 8 | 1 | 7 | 3 |
| 5 | 7 | 3 | 9 | 1 | 4 | 6 | 2 | 8 |
| 2 | 3 | 7 | 8 | 4 | 1 | 9 | 6 | 5 |
| 9 | 4 | 5 | 7 | 3 | 6 | 8 | 1 | 2 |
| 8 | 1 | 6 | 2 | 9 | 5 | 3 | 4 | 7 |
| 6 | 5 | 8 | 1 | 7 | 9 | 2 | 3 | 4 |
| 7 | 2 | 4 | 6 | 8 | 3 | 5 | 9 | 1 |
| 3 | 9 | 1 | 4 | 5 | 2 | 7 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.







## புகழ்பெற்ற கல்லறை வாசகங்கள் எமக்கு உணர்த்துவது

- புகழ்பெற்ற கவிஞர் ஷெல்லி தனது தாயாரின் கல்லறை யில் பொறித்திருந்த கல்லறைக் கவிதை.

  *"சப்தமிட்டு நடக்காதீர்கள், இங்கே தான் என் அருமைத் தாயார் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்."*

- உலகப்பேரழகி கிளியோபாட்ராவின் கல்லறை வாச கம்.

  *"உலகத்திலேயே அழகான பிணம் இங்கே உறங்கிக் கொண்டிக்கிறது. நல்லவேளை இவள் பிணமானாள், இல்லாவிட்டால் இந்தக் கல்லறைக்குள் உரோமாபுரி சாம்ராஜ்யமே பிணமாகியிருக்கும்.*

- மகா அலெக்சாண்டரின் கல்லறை வாசகங்கள்.

  *"இந்த உலகம் முழுவதுமே போதாது என்று சொன்னவனுக்கு, இந்தக் கல்லறைக் குழி போதுமானதாக ஆகிவிட்டது"*

- ஒரு தொழிலாளியின் கல்லறை வாசகம்.

  *"இங்கே புதை குழியில் கூட இவன் கறையான்களால் சுரண்டப்படுகிறான்."*

- அரசியல்வாதியின் கல்லறையில்,

  *"தயவு செய்து இங்கே கை தட்டி விடாதீர்கள், இவன் எழுந்து விடக்கூடாது."*

- ஒரு விலை மகளின் கல்லறை வாசகம்.

  *"இங்கு தான் இவள் தனியாகத் தூங்குகிறாள். தொந்தரவு செய்யாதீர் கள். பாவம் இனி வர முடியாது இவளால்."*

## வாண வேடிக்கை

வண்ண வண்ணப் பூக்களாய்
வானில் சிதறும் தீப்பொறி
விண்ணில் வாண வேடிக்கை
விழாவென்றாலே வாடிக்கை

வில்லிலிருந்து அம்பு போல்
வேகமாக உயரமாய்
செல்லும் காட்சி அழகுதான்
சிதறும் வெள்ளிப் பூக்கள்தான்

அந்தரத்தில் சிதறிடும்
அந்தப் பூக்கள் யாவுமே
எந்த இடத்தில் உதிர்ந்ததோ
எங்கும் இல்லை மாயந்தான்

எட்டுத் திக்கும் அதிர்ந்திட
இடியைப் போல வெடித்திடும்
குட்டித் தம்பி நடுங்கினாலும்
காட்சி கண்டு மகிழுவான்

ஊர் முழுக்க ரசித்திட
உயர்ந்த வானில் தெரியுது
தேர் இழுக்கும் விழாவிலே
கண்டு நாமும் மகிழலாம்



## சிறந்தது எது?



பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவனிடம் அவன் பயணத்துக்கென எடுத்து வந்த தண்ணீரெல்லாம் தீர்ந்து போய் விட்டது. இதனால் அவன் தாகத்தால் தவித்தான். பின்னர் மயங்கி விழும் நிலைக்கே வந்து விட்டான். "தாகத்தால் உயிர் போய் விடுமோ" என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்துக்குச் சென்றான்.

அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் அடிகுழாய் ஒன்றும், அதன் அருகில் ஒரு சிறு வாளியில் தண்ணீரும் இருந்தன. அந்த அடி குழாயில் ஒரு அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. அந்த அட்டையில் "இங்குள்ள சிறு வாளியில் உள்ள தண்ணீரை அந்த அடி குழாய்க்குள் ஊற்றி விட்டு அடித்தால் தண்ணீர் தொடர்ந்து வரும். தாங்களுக்குத் தேவையான தண்ணீரைக் குடித்து விட்டு மீண்டும் வாளியில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்" என்று எழுத்தப்பட்டிருந்தது.

"அந்த அடி குழாயோ மிகப் பழையதாக இருந்தது. அது இயங்குமா? தண்ணீர் கிடைக்குமா? என்பது சந்தேகமாக இருந்தது. அது இயங்காவிட்டால் இந்தச் சிறு வாளியிலிருக்கும் தண்ணீரை நாம் அருந்தாமல் அதுவும் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும், நாமும் உயிர் பிழைத்துக் கொள்ளலாம்" என்ற எண்ணம் அவனுக்கு மேலோங்கியது.

அவன் யோசித்தான். "தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம்" என்று அறிவு கூறியது. "ஒரு வேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்த அடி குழாய் இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், இனி தன்னைப் போல் தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போய் விடுமே... நான் இதற்குக் காரணமாகி விடுவேனே" என்று மனசாட்சி எச்சரித்தது.

அவன் மனசாட்சியின் முடிவை ஏற்று, அந்த அடி குழாயில் சிறு வாளியில் இருந்த தண்ணீரை ஊற்றி விட்டு குழாயை அடித்து இயக்க ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது. அவன் தனது தாகம் தீரும் வரை தண்ணீரைக் குடித்தான். அந்தச் சிறு வாளியிலும் தண்ணீரை நிரம்பி வைத்தான். இப்போது அவன் மனம் நிறைந்திருக்க திருப்தியுடன் அவ்விடம் விட்டுச் செல்லலானான்.

**நாம் எம்முடைய வாழ்க்கையில் அனுபவித்ததை அடுத்து வரும் தலைமுறையினரும் பயன்படுத்தி விட்டுச் செல்ல வேண்டும். இன்று கிடைக்கும் நன்மை அனைத்தையும் நாமே முழுவதும் பயன்படுத்துக் கொள்ள வேண்டும் என்கிற பேராசை இருக்கக் கூடாது.**

## புது விதி செய்வோம்

"எல்லாம் தலை விதிப்படி தான் நடக்கும்" என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். "விதி சதி செய்து விட்டது" என்று விதியை முற்றாக நம்புகிறவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். "விதி என்னை வஞ்சித்து விட்டது" என்று பலர் அழுது புலம்புவதையும் கேட்டிருக்கிறோம். எல்லாம் விதிப்படியேதான் நடக்கும் என்றால் நாம் கைளைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருந்து விட வேண்டியது தானே.

எவ்வளவுதான் ஆராய்ந்து பார்த்தாலும் இயற்கையின் போக்கைத் தவிர, விதி என்ற ஒன்று தனியே இருப்பதாகத் தெரியவில்லை. வேண்டுமானால் நடந்து முடிந்தவற்றை விதி என்று சொல்லி விட்டுப் போகலாம். விதி என்ற வாதம் ஏற்புடையதல்ல. இயற்கையின் நகர்வில் எம்மையும் மீறி சில சம்பவங்கள் நடக்கலாம். இதற்கு விதி காரணம் என்பது அபத்தமானது. எனவே எம்முடைய வாழ்க்கைப் போக்கு எதுவாக இருப்பினும், அதற்கான பொறுப்பை நாம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லாம் விதிப் படி நடக்கும் என்ற நம்பிக்கை மனிதனின் முயற்சியைப் பலவீனமாக்கி விடுகின்றது. இதையே நம்பியிருந்தால் வாழ்வில் நாம் என்றும் சரிவுகளையே சந்திக்க நேரும். உயர்வுக்கான திறவுகோல் தொலைந்து போகும். விதி என்ற ஒன்று இல்லை என்பதை இந்த சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டியே சான்றோர் 'விதியை மதியால் வெல்லலாம்' என்று உரைத்தனர். எனவே நாம் இனி ஒரு புது விதி சமைப்போம். விதி என்பதெல்லாம் எம்மால் உருவாக்கப்படுகின்றவையே என உறுதியாய் நம்புவோம்.





ஒன்று மட்டும் ஜோடி இல்லாமல் தனியாக உள்ளது. அது எது?

## சரியான விடையின் கீழ் கோடிடுவோம்

1. பாடசாலைகள் (கிணறு/மழைநீர்) மூலம் நீரைப் பெறுகின்றன.
2. ஆற்றிலிருந்து வயலுக்கு நீர் (நீர்த்தாங்கி / வாய்க்கால்) மூலம் கொண்டு வரப்படும்.
3. மிகவும் சுத்தமான நீர் (ஆற்றுநீர் / மழைநீர்).
4. நீர்த்தாங்கியிலிருந்து நீரைக்கொண்டு செல்ல (நீர்குழாய் / வாய்க்கால்) உதவும்.
5. போத்தலொன்றினுள் நீரை நிரப்ப (குழாய் / புனல்) உதவும்.

newuthayan.com
உதயன்
DIGITAL newuthayan.com
24 மணிநேரப் பதிவேற்றம்

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 695
சீட்டிழுப்பு திகதி 28.08.2017 திங்கட்கிழமை
0 12 14 51 57
சுப்பர் ஜக்பொட் ரூ. 57, 642, 160/=
30 43 60 73
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.08.31 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1393
சீட்டிழுப்பு திகதி 2017.08.28
வெற்றி இலக்கங்கள்
15 56 59 67 0
08 16 41 53
ரூ. 17,712,304/-
தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2922 திகதி 28.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 28 41 63 0
போனஸ் இல.
52
புதன் கிழமை ஜக்பொட்
39, 030, 665/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
06 31 64 71
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.08.30 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

# நல்லூர் பிரதேச சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி PSDG -2017
## கேள்வி அறிவித்தல்

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றது.
02. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/2016 (1)ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின்படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 – 021-300-2508) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2017.08.29 ஆம் திகதியிலிருந்து 2017.09.11 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப் புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரிக்கு 2017.09.12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. அட்டவணை I இன் முதல் 01 ஆம் வேலைக்கும் அட்டவணை II இன் 1ஆம் 2ஆம் வேலை களுக்குமான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாள்களும், ஏனைய வேலைகளுக்கான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 49 நாள்களும் ஆகும்.
09. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

அட்டவணை I

| இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT.NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பலாலி வீதி குறுக்கு வீதிகள். | 2.48 | 2,000.00 | C8/ அதற்கு மேல் | 25,000.00 | 02 மாதம் |
| 01 | நவரட்ணராஜாவீதிபுனரமைப்பு கட்டம் II | 1.74 | 2,000.00 | C9/ அதற்கு மேல் | 18,000.00 | 02 மாதம் |
| 01 | நல்லூர் பிரதேச சபை தலைமைஅலுவலகவாகனத்தரிப்பிடம் கட்டம் II | 1.27 | 2,000.00 | C9/ அதற்கு மேல் | 13,000.00 | 02 மாதம் |
| 01 | சந்திரசேகரப் பிள்ளையார் 1ஆம் குறுக்குவீதி. நல்லூர் | 0.62 | 2,000.00 | C9/ அதற்கு மேல் | 6500.00 | 02 மாதம் |

மீள் கேள்விகோரல். அட்டவணை II

| இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | திருநெல்வேலி இந்து மயான உள்ளக வீதி, நீரவசதி மற்றும் மடம் அமைத்தல். | 2.28 | 2,000.00 | C8/ அதற்கு மேல் | 23,000.00 | 02 மாதம் |
| 02. | அரியாலை கிழக்கு குறுக்கு வீதிகள் புனரமைப்பு (பொன்னு வீதி, முத்தையா வீதி, கறுப்பையா வீதி) | 2.37 | 2000.00 | C 8/ அதற்கு மேல் | 24000.00 | 02 மாதம் |
| 03. | வன்னியசிங்கம் வீதி புனரமைப்பு கோண்டாவில் | 1.44 | 2000.00 | C9/ அதற்கு மேல் | 15,000.00 | 02 மாத்ம் |
| 04. | பனிக்கர் வீதி புனரமைப்பு- திரு நெல்வேலி. | 1.37 | 2000.00 | C9/ அதற்கு மேல் | 14,000.00 | 02 மாதம் |
| 05. | கோகுலம் வீதி குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு கோண்டாவில் | 1.67 | 2000.00 | C9/ அதற்கு மேல் | 17,000.00 | 02 மாதம் |

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2017.09.08 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

**முக்கிய குறிப்பு:-**
**மேற்படி வேலைகளுக்காக வேண்டப்படும் தரங்களில் போதுமான, பொருத்தமான, தகுதியான கேள்விகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் மட்டும் வேண்டப்படும் தரங்களுக்கு மேற்பட்ட தரங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் பரிசீலிக்கப்படும்.**

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2017.08.29

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி அமிர்தலிங்கம் கஜானி அவர்களின் பாசமிகு தந்தையார்

**அப்புத்துரை அமிர்தலிங்கம்**

அவர்கள் 28.08.2017 திங்கட்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள் மற்றும் பாடசாலை சமூகம்.**
**யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கத்தின் போசகர்

**சின்னையா இராசநாயகம்**

(இளைப்பாறிய கல்வி அதிகாரி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**பழைய மாணவர்சங்கம்,**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.**

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**திருமதி ரதிதேவி சத்தியலிங்கம்**

கடந்த (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி ரதிதேவி சத்திய லிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்"

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



அன்னை கடலுணவு
வாணிபத்தின் ஊழியரான
**பொபிராச்**
அவர்களின் தாயார்

**பிரான்சிஸ் நாகரத்தினம்**

அவர்கள் 28.08.2017
அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அன்னை கடலுணவு வாணிப உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்.**


## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 160 | 120 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 70 | 60 | 80 |
| பயிற்றை | 60 | 40 | 120 | 80 | 40 |
| பாகல் | 180 | 160 | 200 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 140 | 120 |
| சி.வெங்காயம் | 150 | 180 | 160 | 200 | 140 |
| பூசணி | 160 | 40 | 60 | 50 | 50 |
| தக்காளி | 140 | 140 | 160 | 150 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 | 100 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 250 | 300 | 250 | 320 |
| புடோல் | 70 | 80 | 60 | 80 | 80 |
| கோவா | 120 | 80 | 120 | 100 | 80 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 120 | 180 | 180 | 140 | 170 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 70 | 80 |
| உ.கிழங்கு | 100 | 90 | 100 | 110 | 100 |
| தேசிக்காய் | 60 | 120 | 100 | 120 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 | 140 | 120 |
| கரட் | 180 | 160 | 200 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 120 | 120 | 80 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1200 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 600 | 700 |
| சுறா | 600 | 700 | 1000 | 800 |
| சீலா | 500 | 400 | 500 | 600 |
| விளை | 600 | 400 | 500 | 700 |
| முரல் | 500 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 250 | 500 |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 250 | 200 | 500 | – |
| வாளை | 150 | 200 | 400 | 300 |


விராட் விஸ்வப்பிரம்மனே நம

## மரண அறிவித்தல்

### தேவகுமார் தனுரதன் (முருகா)



வேலணை வங்களாவடி காளிகோயிலடியைச் சேர்ந்தவரும் அச்சுக்கூட வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட தேவகுமார் தனுரதன் (முருகா) நேற்று (28.08.2017) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தேவகுமார் (தேவன் ஆசாரி) - தில்லைநாயகி (ஆசிரியை யா/பெரியபுலம் ம.வி) தம்பதியரின் அன்புமகனும் மாதுரி, கனிரதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான நடராசா - கமலாம்பிகை மற்றும் சுந்தரம்பிள்ளை - தனலட்சுமி (பவனம்) தம்பதியரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
ந. தேவகுமார் (தந்தை),
ந. நேசகுமார் (பெரியப்பா - நேசன்)

அச்சுக்கூட வீதி, கொக்குவில்.
077 308 6884, 021 205 2363



## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் நாகரத்தினம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ்நாகரத்தினம் 28.08.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் பிரான்சிஸ்சின் அன்பு மனைவியும் அன்ருசான், பொபிராஜ், மேரிகலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஐயாத்துரை தம்பி, ஐயாத்துரை ஆனந்தராசா, பஞ்சாட்சரம் ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் யூடிற்றா, மெஜிடோனா ஆகியோரின் மாமியும் கெஸ்ரினின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் இன்று (29.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை, அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை.**
**077 258 1271**

தகவல்:
**குடும்பத்தினர்.**


## கட்டுப்பாட்டை இழந்து பிக்கப் விபத்து



யாழ்ப்பாணம், ஓக.29

கோப்பாய், பூதர்மடம் பகுதியில் நடந்த விபத்தில் பிக்கப் ரக வாகனமும், வர்த்தக நிலையம் ஒன்றும் கடும் சேதங்களுக் குள்ளாகின.

யாழ்.நகரில் இருந்து வேகமாக வந்த பிக்கப் கட்டுப்பாட்டை இழந்து கடையின் முன் கதவில் மோதி விபத்துக்குள் ளானது.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நடந்துள்ளது. வாகனச் சாரதிக்கு காயம் ஏதும் ஏற்பட வில்லை.

விபத்துத் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர்.

(ந)


## மரண அறிவித்தல்

### ரூத் ஜெயரூபி பாலசிங்கம் (ரூபி)

(முன்பள்ளி ஆசிரியை - Methodist Memorial Montosoori Colombo - 06)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், மட்டுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ரூத் ஜெயரூபிபாலசிங்கம் (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - லில்லிமலர் ராணி தம்பதியரின் அன்புமகளும் திருமதி ஏஞ்சலின் தேவமலர் அஜீபன் (ஏஞ்சி) (ஆசிரியை கைதடி நவீல்ட் பாடசாலை), ஏபிரகாம் தேவபாலன் (தேவன், -கட்டார்) ஆகியோரின் அன்புத்தங்கையும் த.அஜீபன் (Bancassurance Office HNB Jaffna), திருமதி நியோமி தேவபாலன் ஆகியோரின் அன்புமைத்துனியும் அஸ்விதன், அபிஷன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் மட்டுவிலுள்ள திரு.திருமதி அஜீபன் ஏஞ்சலின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் மெதடிஸ்த திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
திரு.திருமதி ஏஞ்சலின் அஜீபன் (அக்கா - அத்தான்),
திரு. திருமதி தேவபாலன் நியோமி (அண்ணா - அண்ணி)

077 780 8693 (அஜீபன்)
078 324 7132 (தேவபாலன்)

# அதி உச்ச வெப்பம் அடுத்தவாரம் வரை நீடிக்கும்

கொழும்பு, ஓக. 29

இலங்கைக்கு அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை சூரியன் உச்ச வெப்பத்தைக் கொடுக்கும் சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் இதனால் வெப்பநிலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குச் செங்குத்தாக சூரியன் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரையில் பயணிக்கவுள்ளது. நேரடியான வெப்பம் இலங்கைக்கு கிடைக்கப்பெறும். பெரிய பரந்தனில் நேற்று நண்பகல் 12.12இற்கு சூரியன் உச்ச வெப்பநிலையை கொடுத்ததாக, வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (5)

## மாணவர்கள்....

**பிறந்தநாள் கொண்டாட்டம்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் 18 பேர் நேற்று மதியம் மண்டைதீவுக் கடற்கரைக்குச் சென்றனர். அவர்களில் இருவரின் பிறந்தநாள் கொண்டாடவே அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

நண்பர்கள் மகிழ்ச்சியாக பொழுதைப் போக்கியுள்ளனர். கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகு ஒன்றை அவிழ்த்து எடுத்த அவர்களில் இருவர் அதில் கடலில் பயணிக்க ஆரம்பித்தனர். ஏனையவர்களில் ஐந்து பேர் பின்னர் அதில் ஏறினர்.

**படகு கவிழ்ந்தது**

அவர்கள் பயணித்த படகு எதிர்பாராதவிதமாகக் கவிழ்ந்தது. ஏழு பேரும் கடலில் மூழ்கினர். ஆறு பேர் மூழ்கிப் போக ஒருவர் மட்டும் நீந்திக் கரைசேர்ந்து ஏனையவர்களுக்கு சம்பவத்தைக் கூறியுள்ளார். கரையிலிருந்த நண்பர்கள் அந்த வழியே பயணித்தவர்களின் உதவியுடன் கடற்படைக்குத் தகவல் தெரிவித்தனர்.

**ஊர் மக்கள் உதவி**

அதற்கிடையே ஊர்மக்கள் கடலில் இறங்கித் தேடத் தொடங்கினர். ஒருவர் உயிருக்குப் போராடியநிலையில் மீட்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் சிறிது நேரத்தில் உயிரிழந்தார். கடற்படையினரும் தேடுதலில் இணைந்து கொண்டனர்.

**தொடர் தேடுதல்**

தொடர்ந்து தேடுதல் நடத்தப்பட்டது. மூழ்கியவர்கள் ஒவ்வொருவராக உயிரற்ற நிலையில் மீட்கப்பட்டனர். நால்வரின் உடல்கள் மீட்கப்பட்டன. ஜெயசாந்தி தினேஷின் உடல் நீண்ட தேடுதலின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இவருக்கே நேற்றுப் பிறந்த நாளாகும்.

உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகசிலோஜன் (வயது -17), ஜெயசாந்தி தினேஷ்(வயது-18), உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த லிங்கநாதன் ரஜீவன் (வயது-19), சண்டிலிப்பாயைச் சேர்ந்த தேவகுமார் தனுசன் (வயது-20), யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த கோணேஸ்வரன் பிரவீன் (வயது-20), கொக்குவிலைச் சேர்ந்த தனுரதன் (வயது - 20) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

**விசாரணை**

நீந்திக் கரைசேர்ந்தவரிடமும், ஏனையோரிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் யாழ். போதனா மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டன. (ற-8-101-ரி1,32)

## ஊரே...

கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி அயல் பகுதியில் தஞ்சமடைந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் உடுத்துறை, ஆழியவளை பிரதேசங்களில் யானை நடமாட்டம் நேற்று முன்தினம் இரவு அவதானிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்கள் நெருப்பு எரித்து யானையை விரட்ட முயற்சித்துள்ளனர். ஆனால் யானை அந்தப் பகுதிக்குள்ளேயே சுற்றித் திரிந்துள்ளது.

யானை ஊருக்குள் வந்த விடயம் நேற்றுக் காலை தீயாகப் பரவியது. மக்கள் பெரும்பாலும் வீடுகளுக்குள் முடங்கினர். யானை நடமாடுவதாகத் தெரிவிக்கப்பட்ட மருதங்கேணிச் சந்தியிலிருந்து உடுத்துறை நோக்கிச் செல்லும் வீதி மூடப்பட்டது. வீதியில் மரக்குற்றிகள் போடப்பட்டது. பொலிஸார், இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து மக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர். கடைகள் பூட்டப்பட்டு இயல்பு நிலை முடங்கியிருந்தது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமராட்சி கிழக்கிற்குச் சென்று நிலமைகளை நேரில் ஆராய்ந்தார். (வ-5,26)

## பிறந்த நாளில்...

கொண்டாடவே சென்றோம். 18 பேர் சென்றோம். எங்களுடன் வந்த இருவர் அங்கிருந்த படகில் ஏறிக் கடலுக்குச் செல்ல ஆயத்தமாகினர். பின்னர் ஐந்துபேர் அதில் ஏறினர். சற்றுத் தூரம் சென்று அவர்களின் படகு கவிழ்ந்தது. ஒருவர் நீந்தி வந்து நடந்ததைக் கூறினார். அந்த வழியால் வந்தவர்களின் உதவியைப் பெற்றோம். கடற்படையினரும் வந்தனர் தேடுதல் நடத்தினர். உயிரிழந்தவர்களில் டினேஷுக்கு இன்று (நேற்று)பிறந்தநாள். அவரது பிறந்ததினத்தையும் இன்னொருவரின் பிறந்த தினத்தையும் கொண்டாடவே வந்தோம் என்று தெரிவித்தனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-8)

## 70 ஆண்டுகள்...

குத் தெரிந்து 70 வருடங்களுக்கு மேலாக இங்கு யானை வந்ததாகக் கூடக் கேள்விப்பட்டதில்லை. திடீரென யானை ஊருக்குள் புகுந்தமை எங்களுக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. யானையைத் திட்டமிட்டு கொண்டு வந்து இறக்கி விட்டார்கள் என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது"

இவ்வாறு வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யானை புகுந்துள்ளது. அதனை விரட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி நேற்றுக் காலை ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அந்தப் பிரதேசத்தில் பெரும் பயத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

"இப்படியான சம்பவம் எங்களுக்குத் தெரிஞ்சு ஒரு 70 வருசத்துக்கு மேலாக நடக்கவில்லை. அதிர்ச்சியாகவும், பயமாகவும் இருக்கின்றது. நேற்று (நேற்றுமுன்தினமே) யானை ஊருக்குள் வந்தவுடன் அதைக் கலைத்திருந்தால் வன உயிரினங்கள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று (நேற்று) உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது.

பறவைகள் சரணாலயம் என்ற பெயரில் ஏற்கனவே எமது காணிகளை அரசு கபளீகரம் செய்துள்ளது. இப்போது யானை இங்கு திட்டமிட்டு இறக்கி எஞ்சிய பகுதிகளையும் அவ்வாறு கபளீகரம் செய்வதற்குத்தான் முயற்சிக்கின்றார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகின்றது.

யானையைக் கலைக்க வந்தவர்கள் இரவு 7 மணியுடன் போய்விட்டார்கள். இரவு யானை வந்தால் நாம் என்ன செய்வது" என்று மக்கள் கேள்வி எழுப்பினர். (வ-5-26)

## யானை...

யானைத் தாக்குதலால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பயப் பீதிக்கு உள்ளாகினர். நிம்மதி யிழந்த நிலையில் இரவு முழுவதும் கண்விழித்திருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் உடுத்துறை, ஆழியவளைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு யானையின் நடமாட்டத்தை மக்கள் அவதானித்துள்ளனர். திடீரென அந்தப் பகுதியில் யானை வந்தமையால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர். நெருப்பை எரித்து தம்மை தற்காத்துக் கொண்டனர். யானை அங்கிருந்து மருதங்கேணி சந்திப் பகுதியை நோக்கி வந்துள்ளது.

நேற்றுக் காலை மருதங்கேணிச் சந்திப் பகுதியிலிருந்து உடுத்துறை நோக்கிச் செல்லும் வீதியில் யானை நடமாடித் திரிந்துள்ளது. அந்தப் பகுதிக்குச் சென்ற ஒருவர் யானையின் தாக்குதலிருந்து சிறிய காயங்களுடன் நூலிழையில் தப்பி வந்துள்ளார்.

இதன் பின்னர் ஊரவர்கள் 4 பேர் அந்தப் பகுதியை நோக்கிச் சென்றுள்ளனர். யானை திடீரென வந்ததும் அங்கிருந்து தப்பி ஓட அவர்கள் முயற்சித்துள்ளனர். ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். ஏனையோர் ஓடியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவரைக் காணவில்லை என்று திரும்பிச் சென்றபோது, இருவர் யானையின் தாக்குதலால் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் காலை 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

யானையின் தாக்குதலுக்கு இலக்காகி காணாமற்போன நபரது அலைபேசிக்கு அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது. அலைபேசி ஒலித்த போதும் அவர் பதிலளிக்கவில்லை. அந்தப் பகுதியில் யானை தொடர்ந்தும் நடமாடிக் கொண்டிருந்தமையால் அவரை மீட்கச் செல்ல முடியாமல் உறவினர்கள் திணறினர். மதியம் ஒரு மணியளவிலேயே அந்தப் பகுதிக்குச் சென்று அவரது சடலத்தை மீட்டுள்ளனர்.

4 பிள்ளைகளின் தந்தையான சிற்றம்பலம் சத்தியசீலன் (வயது-54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். முருகதாஸ் (வயது- 32) மற்றும் ஞானகுமார் (வயது-30) இருவருமே காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

**யானையை விரட்டும் முயற்சி தோல்வி**

யானையை விரட்டும் முயற்சி நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் யானை அந்தப் பகுதியை விட்டு அகலவில்லை. பாதுகாப்புத் தரப்பினரும் இந்த முயற்சியில் களமிறக்கப்பட்டனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் காட்டுப் பகுதியிலிருந்து நீர் நிலைகள் வற்றியுள்ளமையால் கரையோரப் பகுதியூடாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு இந்த யானை வந்து சேர்ந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ-5,26,101,173)

## வீதியில்...

தவறணைக்கு அருகாமையில் இடம்பெற்றது. இதில் பெரியநாவலடி கொடிகாமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவஞானம் ரமேஸ்குமார் (வயது - 35) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.

"உழவு இயந்திரத்தினுடைய சாரதி உழவு இயந்திரத்தை கைவிட்டுத் தப்பிச் சென்ற நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (வ-21,9)

## காணாமற்...

போராட்டத்தைத் தொடர்ந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கோ, அல்லது வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்துக்கோ எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை. பொது அமைப்பு தனது நலன்களுக்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களை பயன்படுத்துகிறது என வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத் தலைவி யோ. கனகரஞ்சினி தெரிவித்தார்.

"போராட்டங்களில் ஈடுபடுவதானால் எங்களுடனும் கலந்துரையாடி நாம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தர வேண்டும். மாறான எங்களைப் பயன்படுத்துவதை பொது அமைப்புக்கள் தவிர்க்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுள்ளார்.

உலக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினம் நாளை கடைப்பிடிக்கப்படுகிறது. இலங்கையில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற உள்நாட்டுப்போரின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இந்தத் தினத்தைக் கடைப்பிடிக்கவுள்ளனர். இந்த நிலையில் மன்னாரைச் சேர்ந்த பொது அமைப்பு ஒன்று வடக்கு கிழக்கைச் சேர்ந்த சிலரை இணைத்துக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய தினத்தை கடைப்பிடிக்கவுள்ளது. இது தொடர்பாக உதயனிடம் தெரிவிக்கும்போதே சங்கத் தலைவி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எமது உறவுகள், அவர்களை மீட்டுத்தருமாறு கோரி நாம் இன்று 191ஆவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். அனைவரும் தங்கள் நலனுக்காக எம்மைப் பயன்படுத்தி அதில், அரசியல், நிதி இலாபங்களை ஈட்டிக் கொண்டனரே அன்றி எமக்கான தீர்வைப் பெற்றுத்தரவில்லை. இனியும் நாங்கள் யாரையும் நம்பிப் போராட்டத்தை நடத்தத் தயாராக இல்லை. அதனாலேயே இன்றுவரை தனியே போராடிவருகின்றோம். அண்மையில் எம்மைச் சந்தித்த அரச தலைவர் எமக்கான தீர்வு விரைவில் பெற்றுத்தரப்படும் என்று கூறியுள்ளார். நாம் அந்தத் தீர்வை எதிர்பார்த்து இன்று வரை போராடுகின்றோம். நாளை கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய தினத்தைக்கடைப்பிடிக்கவுள்ளோம். பிள்ளைகளைப் பெற்று அவர்களைத் தொலைத்த தாய்மார் மற்றும் உறவுகள் அந்தந்த மாவட்டங்களில் இந்தத் தினத்தை கடைப்பிடிக்கின்றனர். இவ்வாறு இருக்க பொது அமைப்பொன்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தில் கிளிநொச்சியில் போராடவுள்ளதை ஏற்க முடியாது. அவர்களை எமக்காகப் போராட வேண்டாம் என்று கூறவில்லை. எமது பிள்ளைகளுக்காக நாம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் என்றுதான் கோருகின்றோம். எமது போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளாதீர்கள். போராட்டம் தொடர்பாக அறிவிப்புக்கள் எதுவும் இன்றி கிளிநொச்சியில் போராட்டத்தை முன்னொடுப்பதானது எம்மை சலனமடையச் செய்கிறது" என்று வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத் தலைவி யோ. கனகரஞ்சினி மேலும் தெரிவித்தார். (வ-21)

## சட்ட மருத்துவ...

ஆட்சேபனை தெரிவித்தது

"சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியப் பதிவுகள் முடிவடைந்த பின்னர் தான் ஜின்டேக் நிறுவன விஞ்ஞானியின் சாட்சி பதிவு இடம்பெற்றது. அதில் சில மேலதிக தகவல்களை சட்ட மருத்துவ அதிகாரியிடம் பெற வேண்டியுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட மாணவியின் நகங்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. மாணவி நகத்தால் கீறியுள்ளார். அதில் சில தசைகள் இருந்தமையால் அவை அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது. அவ்வாறு எனில் இந்த எதிரிகள் உடலில் அந்தக் காலப் பகுதியில் நகக் கீறல்கள் அடையாளம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் உடலில் அவ்வாறான காயங்கள் இருந்ததாக சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையில் இல்லை. அவ்வாறு எனில் நககீறல் காயங்கள் உடைய ஒருவர் வெளியில் உள்ளார்.

இவ்வாறாக சில மேலதிக தகவல்களை சட்ட மருத்துவ அதிகாரியிடம் பெற வேண்டிய தேவையுள்ளதால் அவரை மீண்டும் சாட்சியமாக அழைக்க வேண்டும்" என்று 5ஆம் எதிரியின் சட்டத்தரணி தீர்ப்பாயத்திடம் கோரினார். அதற்கு தீர்ப்பாயம் அனுமதியளித்து சட்ட மருத்துவ அதிகாரிக்கு அழைப்புக் கட்டளை அனுப்ப உத்தரவிட்டது. (வ-37)



# அன்ரனிஸ் அணி மகுடம் சூடியது

மன்னார், ஓக. 29

மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி சம்பியனானது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மன்னார் சித்திவிநாயகர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சித்தி விநாயகர் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கிசாந் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் டிலுக்சன் மூன்று இலக்குகளையும் கைப்பற்றினார்.

61 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி 5.1 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஜெரோசன் 20 ஓட்டங்களையும், றோய் 18 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23-56)




# கனகபுரம் வி.கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 29

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் முடிவுகள் வருமாறு.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் முல்லைத்தீவு சந்திரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. முல்லைத்தீவு சந்திரன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஜொலிபோய்ஸ் அணி வெற்றி பெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் உடுத்துறை பாரதிவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் தேவன்பிட்டி சென். சேவியர் விளை யாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக்ஸ் அணி வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் சந்திரோதய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் சந்திரன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வேறொரு ஆட்டத்தில் வேரவில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் கலையொளி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ரியல்மட்ரிட் - வலென்சியா ஆட்டம் சமநிலையில் முடிவு

லா லிகா தொடரில், நேற்று நடைபெற்ற ரியல்மட்ரிட், வலென்சியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

அசென்சியோ வில்லியம்சன் ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் ரியல்மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 18ஆவது நிமிடத்தில் வலென்சியாவின் கோலைப் பதிவு செய்தார் சோலர். முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 77ஆவது நிமிடத்தில் கொன்டோக்பியா வலென்சியாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 83ஆவதுநிமிடத்தில்அசென்சியோ மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்ததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந் தது. (ம)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 29

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விளைபூமி முரசுமோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கணேசானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் சாந்தபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# லக்கி ஸ்ரார் சம்பியனானது

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் லக்கி ஸ்ரார் அணி கிண்ணம் வென்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

ஆட்டநாயகனாக வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணியின் பிரியன்தன், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் திவாகர், தொடராட்ட நாயகனாக உருத்திரபுரம் அணியின் ஹரிஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-23)



'வேள்ட் விசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான எறிபந்தாட்டப் பயிற்சி முகாமொன்று மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்றது. (ம-422)

# வென்றது செவ்வானம்

யாழ்ப்பாணம், ஓக. 29

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செவ்வானம் விளையாட்டுக் கழக 'பி' அணி வெற்றிபெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சாள்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. சங்கர் அதிகபட்சமாக 35 ஓட்டங்களையும், மனோராஜ் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் செவ்வானம் அணியின் சார்பில் சிவசாந் 3 இலக்குகளையும், ஜிம்மிறொசான் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

158 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய செவ்வானம் அணி 15.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. ஜிம்மிறொசான் 65 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# ரசிகர்களின் ரகளைக்கு மத்தியில் குட்டித் தூக்கம்போட்டார் டோனி



இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில், ரசிகர்கள் ரகளை செய்ததால் ஆட்டம் 40 நிமிடங்கள் தடைப்பட்டது. இதனால் ஆட்டத்தின் இடை நடுவே டோனி மைதானத்தில் படுத்துறங்கினார். இந்தப் படம் சமூக வலைத்தளங்களில் தற்போது மிகலும் வைரல்.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் பல்லேகல மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 217 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி டோனி, ரோகித் இருவரினதும் சிறப்பான ஆட்டத்தால் 44 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்திய அணியின் வெற்றி உறுதியாகிவிட்ட நிலையில் ரசிகர்கள் சிலர் மைதானத்துக்குள் போத்தல்களை வீசி அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர். இதனால் வீரர்கள் மைதானத்தில் மத்திய பகுதிக்கு அழைக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. சுமார் 40 நிமிடங்கள் ஆட்டம் தாமதமடைந்தது. அப்போது டோனி மைதானத்தில் படுத்துத் தூங்கினார். இந்தச் செய்தியும் இது தொடர்பான ஒளிப்படங்களும் சமூக வலைத்தளங்களில் தற்போது மிகவும் வைரல். (ம)



## சந்திமல்லுக்குக் காயம்

இந்திய அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில், இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சந்திமல் காயமடைந்தார்.

பாண்டியா வீசிய ப்வுன்சர் ரகப் பந்தை எதிர்த்தாட முற்பட்டபோது அது பாண்டியாவின் பெருவிரலைத் தாக்கியது. பரிசோதனை செய்து பார்த்ததில் சந்திமல்லின் பெருவிரலில் சிறிய எலும்புமுறிவு ஏற்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனால் அடுத்தடுத்த ஆட்டங்களில் இருந்து அவர் விலகினார். (ம)

# தோல்வி தொடர்பில் விசாரணை நிச்சயம்

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு



"இலங்கை கிரிக்கெட் சம்பந்தமாகக்காணப்படும்தற்போதைய நிலைமைகள் தொடர்பாக, விசாரணைகள் நடத்தப்படவுள்ளன' என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

இலங்கை அணிக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கும் மோசமான தோல்விகள் தவிர்க்கப்பட வேண்டுமானால் நிர்வாக மட்டத்தில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ள நிலையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

'கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கான வழிகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, முன்னாள் நிர்வாகிகள், முன்னாள் வீரர்கள், விளையாட்டு நிபுணர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை ஒரே மன்றத்தில் ஒன்றிணைத்து கலந்தாலோசித்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான் எதிர்பார்க்கிறேன். ஆழமான ஆராய்ச்சிகள் இன்றி, நிர்வாகிகள் மீதோ அல்லது வீரர்கள் மீதோ குற்றஞ் சுமத்துவதில் பயனில்லை. குற்றத்தைச் சுமத்துவது எனது எண்ணம் கிடையாது. மாறாக, பிரச்சினைகளைத் தீர்த்து, தேசிய அணியின் பின்னால் ஒன்றுசேர்வதே எண்ணமாகும்.

இலங்கை அணிக்கு தொடர்ச்சியாக கிடைக்கும் தோல்விகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு தவறுகள் சரி செய்து அணி மீண்டும் கட்டியெழுப்பப்படும்" என்று தயாசிறி மேலும் தெரிவித்தார்.

இலங்கை வீரர்கள் உடல்தகுதி இல்லாமல் காணப்படுகின்றனர் என்று தயாசிறி தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## 4ஆவது ஆட்டத்துக்கு பலமான பாதுகாப்பாம்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படலாம் என்று தகவல்கள் வந்துள்ளன.

மூன்றாவது ஒருநாள் ஆட்டம் பல்லேகலயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இலங்கை அணி தோல்வியடைவது உறுதியாகிவிட்ட நிலையில் ரசிகர்கள் சிலர் மைதானத்துக்குள் போத்தல்களை வீசியெறிந்து ஆட்டத்தை இடைநடுவில் குழப்பினர். நான்காவது ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறுகிறது. இதுபோன்ற அசம்பாவிதம் அந்த ஆட்டத்தில் ஏற்படாமல் இருக்க ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)

## ஒகுஹாராவுக்குத் தங்கம்

உலக சம்பியன் ஷிப் பூப்பந்தாட்டத் தொடரில் ஜப்பான் வீராங்கனை ஒகுஹாரா தங்கப் பதக்கம் வென்றார்.

ஸ்கொட்லாந்தில் இந்தத் தொடர் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் ஜப்பான் வீராங்கனை ஒகுஹாராவை எதிர்த்து இந்திய வீராங்கனை சிந்து மோதினார். முதலாவது செற்றை 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஒகுஹாரா. இரண்டாவது செற்றை 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் சிந்து. கிண்ணத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஒகுஹாரா 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றார். (ம)




ஆஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் டாக்காவில் தற்போது நடைபெற்று வருகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணி பங்கேற்பது சந்தேகம் என்ற நிலைப்பாடே இருந்தது. எனினும் தொடருக்குச் சம்மதித்து பங்கேற்ற ஆஸ்திரேலிய அணிக்கு பங்களாதேஷ் ரசிகர்கள் தமது நன்றியைத் தெரிவிக்கும் விதமான வாசகங்கள் பதித்திருந்த பாதாகைகளை நேற்று ஏந்தியிருந்தனர். (ம)

# தெ.ஆபிரிக்கத் தொடர் இந்தியாவுக்குச் சவால்

## சிமித் கணிப்பு

"தென்னாபிரிக்காவுக்கு எதிராக தென்னாபிரிக்காவில் நடைபெறும் டெஸ்ட் தொடர் இந்திய அணிக்குப் பெரிய சவாலாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை" என்று தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கிரேம் சிமித் தெரிவித்தார். ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தக் கருத்தை அவர் முன்வைத்துள்ளார்.

"டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி நன்றாக விளையாடி வருகிறது. விராட் கோக்லி எப்படி டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுகிறார். அணி வீரர்களுக்கு எப்படி உத்வேகமாகத் திகழ்கிறார் என்பது பற்றியெல்லாம் நிறையப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் தென்னாபிரிக்காவில் இந்திய அணிக்கு சவால் காத்திருக்கிறது. இங்குள்ள ஆடுகளம் உள்ளிட்ட நிலைமைகள் நிச்சயம் இந்திய அணிக்கு வித்தியாசமாக இருக்கும்.

இந்திய அணியினர் ஒன்று உள்நாட்டில் ஆடுகின்றனர், இல்லையேல் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகளில் ஆடுகின்றனர். இங்கெல்லாம் பந்து மெதுவாகவரும். ஆனால் தென்னாபிரிக்காவில் அப்படியல்ல. எனவே எமது மண்ணில், இந்திய அணி பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டி வரும் என்பது உறுதி. ஸ்ரெய்ன், ரபாடா, மோர்கல், பிளன்டர், கேசவ் மகராஜ் ஆகியோருக்கு எதிராக இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் எப்படி விளையாடுவார்கள் என்பதைப் பார்க்க ஆர்வமாக உள்ளது" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



# 300 இலக்குகள் மைல் கல்லைத் தொட 1 மலிங்கவுக்குத் தேவை

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் ஒருநாள் ஆட்டங்களில் 300 இலக்குகள் என்ற மைல்கல்லை எட்டுவதற்கு மலிங்கவுக்கு இன்னும் ஒரு இலக்கே தேவைப்படுகிறது. இதுவரை 202 ஆட்டங்களில் விளையாடியுள்ளார் மலிங்க. ஒட்டுமொத்தமாக 299 இலக்குகளை அவர் கைப்பற்றியுள்ளார். இந்தியாவுக்கு எதிராக எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ள நான்காவது ஒருநாள் தொடரில் மலிங்க ஒரு இலக்கைக் கைப்பற்றினால், இந்த இலக்கு அவரின் 300ஆவது இலக்காக அமையும்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் ஆரம்பத்தில் இருந்து மலிங்க 300 இலக்குகளைக் கைப்பற்றுவது தொடர்பில் பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. எனினும் இந்த மூன்று ஆட்டங்களிலும் அவர் ஏமாற்றினார். எனினும் அடுத்த ஆட்டத்தில் அவர் இந்தப் பெறுபேற்றை எட்டுவதற்கு அதிகளவில் வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன.

இந்தத் தொடருக்கு முன்பாக மலிங்க மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவர் ஐ.பி.எல். தொடருக்காகவே அதிக கவனம் செலுத்துகிறார். இலங்கை அணியின் வெற்றிகள் மட்டில் பெரிதளவில் அக்கறை கொள்வதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த விமர்சனங்களுக்குப் பதில் வழங்க மலிங்கவுக்கு இன்னும் ஒரேயொரு ஆட்டமே எஞ்சியுள்ளது. (ம)

# சிக்கலில் பென் ஸ்ரோக்ஸ்

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ், பொருத்தமற்ற கருத்தை முன்வைத்தமைக்காக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரோக்ஸ் வீசிய பந்தை ஹோப் பவுண்டரிக்கு விரட்டியதை அடுத்து ஸ்ரோக்ஸ் சில வார்த்தைப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார். இது தகாத வார்த்தைப் பிரயோகங்கள் என்று தெரிவித்து அவர் எச்சரிக்கப்பட்டுள்ளார். இதனால் அவருக்கு ஒரு தண்டப் புள்ளி வழங்கப்பட்டது. ஏற்கனவே இரண்டு தண்டப்புள்ளிகளைப் பெற்றிருந்த அவர் தற்போது 3 தண்டப் புள்ளிகளுடன் காணப்படுகிறார். இதனால் இன்னும் ஒரு தண்டப்புள்ளி வழங்கப்பட்டால் அவருக்குத் ஒரு ஆட்டத்தில் தடை விதிக்கப்படவும் வாய்ப்புக்கள் அதிகம். (ம)



# பங்களாதேஷ்! முன்னிலையில்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற்றுள்ளது பங்களாதேஷ் அணி.

டாக்காவில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக தமீம் இக்பால் மற்றும் சவுமியா சர்க்கர் இருவரும் களமிறங்கினர். கம்மின்ஸின் பந்துவீச்சில் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சர்க்கர். கையிஸ், ரகுமான் இருவரும் ஓட்டமெதனையும் பெறாமல் கம்மின்ஸின் வேகத்தில் அள்ளுண்டு போயினர். தமீம் இக்பால், சகிப் அல் ஹசன் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் முடிவில் 260 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ். அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 84 ஓட்டங்களையும், தமீம் இக்பால் 71 ஓட்டங்களையும், நசீர் கொசைன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ், லையன், அகர் மூவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

முதல் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது. ரென்சொவ் 6 ஓட்டங்களுடனும், சிமித் 3 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சிமித். ஹான்ட்ஸ்கொம், மக்ஸ்வெல் இருவரும் முறையே 33, 23 ஓட்டங்க



ளைப் பெற்றனர். மறுமுனையில் ரென்சொவ் அரைச்சதம் கடந்தார். மத்திய வரிசை தடுமாற்றம்காட்ட 217 ஓட்டங்களுக்கு சகல இலக்குளையும் இழந்தது ஆஸ்திரேலியா. அகர் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 5 இலக்குகளையும், மிராஸ் 3 இலக்குகளையும், தயுல் இஸ்லாம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். 43 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதுவரையிலுமான நிலவரத்தின்படி பங்களாதேஷ் அணி 88 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. அந்த அணி சுமார் 250 முதல் 300 வரையிலான ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தால், ஆஸ்திரேலியா மிகப்பெரும் தோல்வியை எதிர்கொள்ளவும் வாய்ப்பு அதிகம். இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் அதுவே நடந்தது. (ம)

PHYSICS Personal Class
A/L 2018 ஓட்ட மின்னியல்
ஆரம்பம் - 30.08.2017
புதன் 6.30 pm
(திங்கள், புதன், வெள்ளி 6.30 - 7.30 pm)
வினாவிடை வகுப்பு
ஆரம்பம் - 31.08.2017 வியாழன் 6.30pm
செவ்வாய், வியாழன் 6.30 - 7.30 pm
A/L 2019 அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம் - 31.08.2017 வியாழன்
5.30 - 6.30 pm
செவ்வாய், வியாழன் 5.30 - 6.30 pm
பொறியியல் வகுப்பு நடைபெறுகின்றது.
(திங்கள், புதன், வெள்ளி 5.30 -6.30 pm)
விரும்பிய அலகுகளை
Personal Class, ஆகவும்
Group Class ஆகவும் எடுக்கலாம்.
ஆசிரியர் - திரு.ம.ஸ்பெல்மன் Bsc, PGDE
இடம் - 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்,
பெரிய கோயில் அருகில் T.P :077 611 6724

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org



021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், O/L எழுதியோர், வீட்டுப்பெண்கள்,
தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 02.09.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 04.09.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON
403,வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.